# எரிமலை

ஏப்ரல் 1995





“ எப்போதும்
எங்கள்
தலைவன்
முகச்சிரிப்பில்
தப்பாமல்
எங்கள்
சந்ததி சிரிக்கும் ”

தமிழீழ ஆவணக் காப்பகம்
www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அன்புடன் ஆசிரியருக்கு!

***எரிமலை பற்றி உங்களுடன்***

மேற்கு நாட்டில் வெளியாகும், எரிமலை, களத்தில் வாசகர்களில் நானும் ஒரு தமிழீழக் குடிமகள். அதனுள் அடக்கப்படும் பலவகை ஆக்கங்கள், நமது சக்திக்கும் மீறிய, நிதர்சனமான, தரமான இலக்கண இலக்கியப் படைப்புக்கள். நமது மக்கள் மத்தியில் தெளிந்த சிந்தனையுள்ள புத்திஜீவிகள் இருக்கிறார்கள் என்பதை எண்ணும் போது மனம் பூரிப்படைகின்றது.

மார்கழி மாத எரிமலையில் "சந்திரிகாவின் பழைய சப்பாத்தும் புதிய தொப்பியும்" நல்ல விடயகரமான கட்டுரையாகும்.

கடவுளின் மரணம் (பிரம்மஞானி) இது சம்பந்தமான பலரது கருத்துக்களை நான் கேட்கக் கூடியதாக இருந்தது. இங்கு சமய மாற்றம் செய்யும் சில வேண்டாத பிரச்சாரங்களுக்கு ஒரு மிகவும் ஔடதமான கட்டுரையாகும்.

மற்றும் நம் தாய் தமிழ் ஈழத்தின் பழைய கால வரலாற்றுக் கட்டுரைகள் மிக மிக பயன்பாடுடையன. நம் தாய் நாட்டின் செயற்பாடுகளை நாம் அங்கு வாழாத போதும் நேரில் காணுமாப் போல் அறியும் வாய்ப்பு ஏற்பட்டதை இட்டு நாம் உண்மையில் பெருமை கொள்ளக் கூடியதாக உள்ளது. வரலாற்றுக் கட்டுரைகள் நமது நாட்டு சமூகவியல் கல்வி கற்பதற்கு ஒரு வாய்பகமாக உள்ளது. இது போற்றப் படக்கூடியது.

களத்தில் பத்திரிகையில் எமது நாட்டின் வருங்கால பொருண்மிய திட்டமிடல், வழிகாட்டல், உருவாக்கம் கண்டு அளப்பெரும் ஆனந்தம் அடைந்தோம். 3ம் உலகினர் என்ற நிலையில், நாம் 1ம் உலகினர் என்ற போர்வையைப் போத்திக் கொண்ட மேற்கு நாட்டினரால் தாக்குதல் அடைந்தோம். எம்மாலும் சுய பூர்த்தி கொண்டு எம் நாட்டை முன்னேற்ற முடியும் என்ற பெரும் திட்டத்துடன் வரையப்பட்டுள்ளது இந்த வழிகாட்டல். நல்ல முறையில் நமது நாளைய தமிழீழத்தைக் கொண்டு இயக்கும் செயற்பாடாக இது மாறவேண்டும் என்பது என் தணியாத தாகமாகும். இந்த வழிகாட்டலை தொகுத்தளித்த நம் நாட்டு கல்வியாளர்களும் உறுதுணை புரிந்தவர்களும் பாராட்டுக்குரியவர்களே ஆகும்.

மற்றும் மறைந்த மாவீரர் வாழ்க்கை சரித்திரங்களைப் படிக்கும் பொழுது எம்மை அறியாமல் கண்மழை பொழியும்.

நாம் பந்த பாசங்களில் சிக்குண்டு தவிக்கும் அன்பு உள்ளங்கள் கொண்ட மனிதப் பிறவிகள். மேற்குலக நாட்டில் தனது சொந்த தாய் வீட்டிற்குப் போவதானாலும் பிள்ளைக்கு அழைப்புக் கிடைத்தால்தான் அது சாத்தியமாகும். ஆனால் நாம் அவர்களது பண்பாட்டை விட பரிசுத்தமான அன்பிற்குரிய பண்பாட்டை உள்ளத்தில் வளர்த்துக் கொண்டவர்கள். நாம் பல வழிகளில் விருந்தோம்பல் பாசநேசங்களைப் பகிர்ந்து கொண்டவர்கள். எமது பாசங்களை கட்டுக்கடங்காது வெளிப்படுத்துவதே எமது இரத்தத்தில் ஊறிய மரபுப் பண்பாகியது. இப்படியான சொந்தத்தில் கட்டுப்பட்டவர்கள் நாம். சாவை முன்கூட்டியே அறிந்து கொண்டவர்கள் சாவை நோக்கிப் புறப்படும் போது எம்மனம் எப்படித்தான் ஆறுமோ? மனம் சொல்லொணா வேதனைத் தீயில் நொந்து தாய் மண்ணில்




## அக்கரைப்பூக்கள்

நமது மண்ணின் மைந்தர்கள் அனுபவ ரீதியாக கண்களால் கண்டு பிரிகிறார்கள். பிரிவுத்துயரங்களை அனுபவிக்கிறார்கள். இங்கு நாம் எழுத்துருவில் வடிக்கப்படும் இலக்கியப் படைப்புக்களில் இருந்து அதனை உணர்ச்சித் துடிப்புடன், உள்ளக் குமுறலுடன், உணர்வு பூர்வமாக அறியக் கூடியதாக உள்ளது. இதனை எரிமலை சஞ்சிகை வாயிலாக நாம் படித்தறிகின்றோம்.

நாட்டை விட்டு புறமுதுகு காட்டி ஓடிவந்த எமக்கு புறச்சூழ் நிலைகளின் தாக்கங்கள் கனதி கூடியது. புலம் பெயர்ந்தோர் நாட்டுக்காய் ஆற்றும் சேவைகளை மன நிறைவு கொண்டு வாழ்த்துதல், அந்தக் கனதிகளைக் குறைக்க வாய்ப்பாக அமைகிறது. புலம் பெயர்ந்த நாமும் எம் மண்ணுக்காய், எமது மக்களுக்காய், எம் இரத்தத்தில் சுவறியுள்ள தமிழ் மொழிக்காய் என்றும் வாழ்வோம். பிரபாகரன் (தம்பி) வழிகாட்டலில் நாமும் "புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்று ஒன்றிணைவோம்.

வணக்கம்

*என்றும் உங்கள் கருத்துக்களை பகிர்ந்துகொள்ள விரும்பும்*
*புஷ்பராணி ஜோர்ஜ்*

***அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு,***

வணக்கம். ஒவ்வொரு மாதமும் எரிமலை எப்போ வரும் என்று ஏங்கித் தவிக்கும் வாசகர்களில் நானும் ஒருவன். தாய் நாட்டின் தமிழ்மண் வாசனையை தந்து கொண்டிருக்கும் எரிமலையில் வரும் தூயதமிழ் தினம் படிப்பதற்காய் தவம் கிடக்கின்றேன். தமிழீழத்தில் தமிழ் படித்தது பத்தாம் வகுப்பு வரைதான். அப்போது புரியவில்லை தமிழின் அருமை. இப்போது புரிகிறது தமிழின் இனிமை. தாய் நாட்டை விட்டு அந்நிய தேசம் வந்த எனக்கு இங்கே தமிழை மேன் மேலும் படிப்பதற்கு உயர்தரப் பாடசாலை இல்லையென எண்ணுகையில் ஓர் அளவுக்கு ஆறுதலை தருவது இந்த எரிமலையே. எரிமலை எனக்கு ஓர் உயர்தரப் பாடசாலை போன்ற உணர்வினை தந்து கொண்டிருக்கிறது. இப்பாடசாலையில் நான் தமிழ் பயில்வது, இந் நாட்டில் உள்ள பாடசாலைக்கு பயணம் செய்கையில்தான். ஆக மொத்தம் ஒரு கிழமையில் ஏழு மணித்தியாலங்கள் தான் எரிமலைப் பாடசாலையில் பல்வேறு தமிழ் ஆசான்கள் பாடம் கற்றுத் தருகின்றார்கள். அவர்களில் ஒருவர் எனக்கு கவிதைப் பரீட்சை வைத்துள்ளார். அப்பரீட்சையினை எழுதி எரிமலைப் பாடசாலைக்கு அனுப்பி வைக்கிறேன். பரீட்சை முடிவை பங்குனி மாத சஞ்சிகை சஞ்சிகையில் பார்ப்பேன் என நம்புகின்றேன். மேலும் எரிமலைப் பாடசாலை எனக்கு நல்ல பாடங்களைக் கற்றுத்தர எரிமலைப் பாடசாலையை வாழ்க, வளர்க என வாழ்த்தி வணக்கம் கூறும் இளைய தமிழ் மாணவன்.

*வசீகரன்*
*ஒஸ்லோ*

***அன்புடன் எரிமலை ஆசிரியர் குழுவுக்கு!***

நாம் எங்கு வாழ்ந்தாலும் நமது செயல்பாடுகள் தாய்மண் நினைவோடுதான் கலந்து நிற்க வேண்டும். அப்போதுதான் இந்த அகதிமண்ணிலும் தலை நிமிர்ந்து நடக்கமுடியும். என்னால் முடிந்தவற்றைச் செயல்படுத்த முன்னிற்பேன். இது உறுதி.

*கிறிஸ்சியன்*
*பாரிஸ்.*

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நிலம் இருண்டு கிடக்கிறதே
நிலவு எங்கே போனது?
மரங்களெல்லாம் மொட்டையாகிக் கிடக்கிறதே
பூக்களுக்கு இன்றென்ன கதவடைப்பு?
எறிகணைகள் வந்து வெடித்தபோது
இருந்த உறவும்
ஒருவருக் கொருவரான உசாவலும்
இன்றேன் இல்லாதழிந்தன.
அவரவர் வேலியடைக்கத் தொடங்கினர்
உடைந்த ஓடு மாற்றக் கூரையேறினர்
'அன்ரனா' உயர்த்திக் கட்டி
அலைவரிசை தேடுகின்றனர்.
இதுதானா "மீண்டும் தொடங்கும் மிடுக்கு?"
மேசையில் பேச உட்கார்ந்த உடனேயே
இப்படியென்றால்
விடுதலை கிட்டும் நாளில்
குயில்கூட கூடு கட்டத் தொடங்கிவிடுமா?
எனக்கு நீ, உனக்கு நானென்ற
உறவு நூலிழை உக்கி அறுந்துவிடுமா?
வீதி சுற்றிய தேர் இருப்பிடம் வருமுன்னர்
மேற்கு வீதியில் வைத்து
இழுத்த வடத்தை கைவிட்டு
சுவாமியை இறக்குவதை
சுதந்திரம் என்பதா?
கால்கள் கொஞ்சம் களைப்பாறுகின்றன
அதற்காகப் பயணம் முடிந்துவிட்டதென்றா
அர்த்தம் கொள்வது?
ஏனிந்த மௌனம்
எவராயினும் வாய்திறந்து பேசுங்களேன்

- மாலிகா -

## இதழின் உள்ளே


★ உனது விம்பம் சூரியனை மறைப்பதாய் - 5
★ நேர்காணல் - சொக்கன் - 8
★ தமிழீழத்தின் உற்பத்திகளில் ஒன்று உப்பு - 14
★ தமிழீழத் தேசியவளம் பிரகடனம் - 16
★ தமிழர் வாழ்வில் சாதிமுறை - 18
★ விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் புனர்வாழ்வு நிறுவனம் - 20
★ தமிழீழத் தூது - சிறுகதை - 26
★ தென்தமிழீழத்தில் ஓர் மௌன அலறல் - 32
★ நீ மனிதன் மனிதமுள்ள ஓராயிரம் செயல்களின் கருச்சுமந்த.... - 36
★ எத்தனை நாள் துயருற்றிருப்பேன் (போட்டிக் கவிதைகள்) - 40


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

கலை பண்பாடு
அரசியல் சமூக ஏடு

பதின்நான்காம்
ஆண்டு
ஏப்ரல் 1995

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrénées,
75020 Paris.
Tel: 43 58 11 42

# இராணுவக் கண்ணோட்டமும் பேச்சுவார்த்தையில் முறிவும்

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை முறிவடையும் நிலையில் உள்ளது. இதற்கான முழுப்பொறுப்பும் அரசாங்கத்தையே சாரும். பேச்சுவார்த்தையில், நல்லெண்ணத்தைக் கட்டி வளர்க்க வேண்டிய அரசாங்கம், நீதியான தீர்வின் அடிப்படைகளுக்கு எதிராக நடந்து கொண்டது. விடுதலைப் புலிகளின் நியாயபூர்வமான கோரிக்கைகளில் ஒன்று பூநகரி முகாமை அகற்றி, மக்களின் போக்குவரத்துக்கு பாதையைத் திறந்து விடுவது. இராணுவ ஆக்கிரமிப்பு நோக்குடன் போடப்பட்ட பூநகரி முகாமை அகற்றாததன் மூலம், அரசாங்கம் தனது இராணுவத் தீர்வின் நோக்கத்தை வெளிப்படுத்தி விட்டது. புனர்வாழ்வு, புனர் நிர்மாணப் பணிகளை, மேற்பார்வையிடுவதற்காக விடுதலைப் புலிகளைச் சமனாகக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் என்ற அடுத்த கோரிக்கையும் நிறைவேற்றப்படவில்லை. வடகிழக்கு அபிவிருத்தி என்ற பெயரில் உதவி வழங்கும் நாடுகளிடமிருந்து ஏராளமான நிதி உதவிகளைப் பெற்று மேலே குறித்த நோக்கத்தை நிறைவேற்றுவதே அரசின் திட்டம் என்பது அம்பலமாகிவிட்டது.

மேலும், பூரணமாக பொருளாதாரத் தடை நீக்கப்படவுமில்லை; கடல் வலயச் சட்டங்கள் அகற்றப்படவுமில்லை. மக்களின் துன்பங்கள் பெருமளவு குறைந்தபாடும் இல்லை. இது மக்களின் வயிற்றில் அடித்து, அவர்களை அடிபணிய வைக்கும் தொடர்ச்சியான தந்திரத்தையே சுட்டிக் காட்டியது. அதேவேளை சில சலுகைகளைச் செய்து மக்களைத் திருப்திப்படுத்துவதாக பாவனை செய்து மக்களையும் புலிகளையும் பிரிக்கும் சூழ்ச்சியும் வெளியரங்கமாக தெரிவிக்கப்பட்டது. ஜனாதிபதி முதற்கொண்டு, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் வரை போர் முழக்கம் செய்தது மாத்திரமன்றி, அதனைப் பல்வேறு வழிகளில் நடைமுறைப் படுத்தவும் முற்பட்டனர். இராணுவத்தினரின் எண்ணிக்கையை அதிகரித்தனர். சிறந்த பயிற்சிகளை மேற்கொண்டார்கள். நவீன ஆயுதத் தளபாடங்களை வாங்கிக் குவித்தனர். இராணுவத் தலைமைக் கட்டமைப்பில் காத்திரம் கருதி மாற்றங்களைச் செய்தனர். போர் வெறியூட்டும் பிரச்சாரங்களை அரச, தனியார் செய்தி ஊடகங்கள் மூலம் செய்தார்கள். அது மாத்திரமல்ல, புதிய பல முகாம்களையும், வீதித் தடைகளையும், சோதனைச் சாவடிகளையும் அமைத்துப் போருக்குத் தயாராகினர். இந்த நிலைமை தவிர்க்க முடியாதவாறு சமாதானத் தீர்வு முயற்சியை சிதறடிக்கும் வெடிகுண்டின் தன்மையைக் கொண்டிருந்தது.

பல்வேறு பிரச்சினைகளை, எதிர்கொண்டு, அவற்றைச் சமாளிக்க முடியாது தள்ளாடும் ஜனாதிபதி, மக்களின் கவனத்தை திசைதிருப்ப இத்தகு இராணுவக் குறுக்குவழியில் இறங்குகின்றாரோ என்ற சந்தேகம் எழுகின்றது. ஆயினும், போரினால் தென்பகுதியில் நிலைமை இன்னும் மோசமாகும் என்பதே உண்மை. தங்களைப் பல்வேறு வழிகளில் பாதிக்கும் யுத்தமொன்றை மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பது இன்னொரு உண்மை. மேலும், இராணுவம், அரசாங்க நிர்வாக இயந்திரம், மக்கள் அமைப்புக்கள், அரசியல் கட்சிகள் ஆகியவற்றை போர் நடவடிக்கைகளுக்கு ஏற்றவிதமாக கட்டுப்படுத்தி, ஸ்திரத்தைப் பேணி, அவசரகாலச் சட்டங்களை மக்கள் மீது திணித்து - போரை ஜனாதிபதி வெற்றிகரமாக நடத்துவாரா என்பதும் கேள்விக்குறி. ஜதார்த்த உண்மைகளைக் கருத்தில் எடுத்து ராஜதந்திரமாக காரியங்களை ஆற்றி வந்த ஜனாதிபதி, இத்தகு தற்கொலைச் செயற்பாட்டில் இறங்க மாட்டார் என்றே நம்புவோம்.

விடுதலைப் புலிகளின் நியாயபூர்வ கோரிக்கைகளை நிறைவேற்றி மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வைக்கும் செயற்பாடு ஜனாதிபதியின் கையிலேயே உள்ளது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உனது விம்பம்

## சூரியனை மறைப்பதாய்....

சுதாமதி

கண்களை இடுக்கிக்கொண்டு அம்மா அதை உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தாள். தூசி மண்டிப்போய் மேசையில் புத்தகங்கள் அநாதையாய்க் கிடந்தன. அதைத் தட்டித் துடைத்து ஒழுங்குபடுத்த அம்மாவுக்கு விருப்பமில்லை. அவை அம்மாவின் மகள் படித்தவை. எப்படி இருந்ததோ அதேமாதிரி இப்போதும் சற்றும் இடம்மாறாமல் அவை இருந்தன. அவற்றையும் அந்தக் கதிரையையும் பார்க்கும் போது அவளுக்கு தன் அம்முக்குட்டியின் ஞாபகம் வரும். அவளுக்குள் முகடு உடைத்துக்கொண்டு ஏதோ ஒன்று உள்ளுக்குள் தவிக்கும். உலகின் துன்பங்கள் எல்லாம் தன்மீது அழுத்திவிட்டது போல அவள் தனக்குள் வெம்புவாள்.

அடிக்கடி கிறீச்சிட்டு ஓயும் அந்தக் கதிரையைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டு அம்முக்குட்டி 'அம்மா' என்றபடி தன்னை நோக்கி வருவது போல அவளுக்குத் தோன்றும். பின்னர் இதயம் படபடக்க எல்லாம் வெறும் பிரமை என்றபடி தன்னைச் சிலிர்த்துக் கொள்வாள். எதிரே சுவரை வெறித்தபடி அவளது பார்வை பதியும். அது அம்மாவின் நெற்றியைப் போல வெறுமையாக இருந்தது. ஆனால் அவளின் அம்முக்குட்டி அந்த வீட்டில் எங்கோ ஒளிந்தபடி உயிர்த் துடிப்பாய் உலாவுவதாக அவள் நம்பினாள்.

சுவர் ஓரமாகச் சுருண்ட நாய்க்குட்டி அவளைப் பரிதாபமாகப் பார்த்தது. இரவு ஏதோ பிராணி அதைக் கடித்திருக்கவேண்டும். இடதுபக்கச் செவியில் இரத்தம் கசிந்து போய் இருந்தது. அது அவளது அம்முக்குட்டி ஆசையோடு வளர்த்த நாய்க்குட்டி. இப்போது அதற்கு நன்றாக வயது போய் எலும்புகள் துருத்திக்கொண்டு நின்றன. அம்முக்குட்டிக்கு எப்போதுமே பிராணிகளிடத்தில் உயிர். ஊர் நாய்களெல்லாம் அவளைக் கண்டு வாலாட்டும்.

"அதுகள் வாய் பேசாத சீவனுகள்" என்றபடி சாப்பிடும் போது நாயையும் பூனைக்குட்டியையும் தன் இருபுறத்திலும் நிற்கவைத்தபடி இருப்பாள்.

அது பனிக்காலம். புகார் விலகாத அதிகாலையில் அவள் அந்த



நாய்க்குட்டியைத் தூக்கிக்கொண்டு வந்தாள். பனியில் உடலைச் சுருட்டி உரோமக்கால்களை சிலுப்பியபடி அது நின்றது.

"உதுகளை ஏன் அண்டுறாய்? வீட்டை நாசப்படுத்தப் போகுது பிள்ளை"

அம்மா அரியண்டப்பட்டுப் புறுபுறுக்க அவள் முகஞ்சிணுங்கி "பாவமணை. குளிரிலை நடுங்கிக்கொண்டு கிடந்தது. வாகனம் அடிச்சுச் செத்துப்போடும்"

உடம்போடு சேறு அப்பியபடி இருந்த இந்த நாய்க்குட்டியை அவள் நடுமுற்றத்திற் கிடத்தினாள். அது சின்னத் தவ்வல். கையுக்குள் அடங்குமாப்போல அது இருந்தது. மண்நிறத்திலே சுண்ணாம்புக் கலவையை திட்டுத்திட்டாய்க் கொட்டி விட்டமாதிரி ஒரு நிறம். பார்க்க வடிவாகத்தான் இருந்தது.

"நல்ல வடிவு என்னணை" அந்த நாய்க் குட்டியின் இரு கன்னங்களையும் வாஞ்சையோடு தடவி மடியிலிருத்தியபடி முகத்தில் சந்தோசம் அப்பியபடி நின்றாள். அவளுக்கு அதில் சரியான விருப்பம். அவள் வீட்டில் தனிப் பிறவி என்றபடியாலோ என்னவோ அவளைச் சுற்றி நாய்க் குட்டியும் பூனைக்குட்டியும் வளைய வந்தபடி திரிந்தன. இவற்றோடு சிலாகித்திருப்பது அவளுக்கு முக்கியமானதொரு பொழுதுபோக்கு.

அம்மா அந்த நாய்க்குட்டியைப் பார்த்தாள். அம்மாவுக்கு இப்போதெல்லாம் அதனிடம் இனம்புரியாத பாசம். பாசம் என்பதைவிட மிகுந்த பச்சாத்தாபம். தன்னைப் போலத் தானே அதுவும் என்ற பரிவு. அது இப்போதெல்லாம் நன்றாகச் சாப்பிடுவதில்லை. அம்முக்குட்டி நிரந்தரமாக அந்த வீட்டிலிருந்து விடைபெற்றதிலிருந்து அது நிறைய மாறிப் போய்விட்டது. முன்னைய சுறுசுறுப்பு கொஞ்சமேனுமில்லை. பக்கத்து வீட்டு நாய்க்குட்டிகளோடும் அது சேருவதில்லை. எந்நேரமும் ஒரு மூலையிற் சுருண்டு படுக்கும். எப்போதாவது அம்முக்குட்டி வரும்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

போது மட்டும் தனது பூசையில் அவளிடம் எதையோ யாசிப்பதைப் போல உருகிநிற்கும்.

அவள் மௌனமாக அதைப் பார்த்தபடி தடவுவாள். பின்னர் அம்மாவை அணைத்து ஆறுதல் கூறியபடி போய்விடுவாள். அந்த நடையில் அவசரமும் கம்பீரமும் தெரியும். அம்மா அப்போதெல்லாம் அவளிடம் நிறையச் சொல்வதற்கு முனைவாள். எல்லாவற்றையும் ஏற்றுத் தலையாட்டி அம்மாவிடம் விடைபெற்றுப் போவாள். தூரத்தே அவளை ஏற்றிய வாகனம் மறையுமட்டும் அம்மா ஏக்கத்தோடு பார்த்தபடி வழியனுப்புவாள். எல்லாவற்றையும் மீறி அம்மாவுக்கு ஒருகணம் பெருமை பொங்கும். "எப்படி இருந்தவள் எப்படி மாறினாள்?" அவளுக்கு இருந்த, அந்தக் கண்களுக்குள் உறைந்த அந்தத் தகிப்பை அம்மா பலமுறை எண்ணி, வியந்து, விடைகாணாமற் தோற்றதுண்டு.

சற்றே நீலநிறம் படிந்த அந்தக் கண்களும், தலையை மெல்லச் சாய்த்துச் செல்லும் அவள் நடையும். இந்தப் பிள்ளை சாதிக்கப் பிறந்தது என்ற நயினாதீவுச் சாத்திரியாரின் சொல்லை அம்மா அப்படியே நம்பினாள். மேசை விளக்கொளியில் முகம் விகாசித்தப்படி இரவு நீண்ட நேரங்கள் அவள் படித்துக் கொண்டிருக்கும் போது அம்மாவுக்கு இனம்புரியாத பூரிப்பு. அப்பொழுதெல்லாம் அம்முக்குட்டியின் நெஞ்சத்துக்குள் அக்கினி ஒன்று எரிந்ததை அம்மா உணர வாய்ப்பில்லை. அம்மாவைப் பொறுத்தவரை அவளது மகள் பச்சைக் குழந்தை. படிப்பைத் தவிர எதையுமே அறிந்துகொள்ளாத அப்பாவி.

எண்பத்துமூன்று யூலையில் அப்பாவோடு போய்விட்ட அம்மாவின் நெற்றிப் பொட்டையும், நிரந்தரமாக வெள்ளைச் சேலைக்குள் புகுந்துவிட்ட அம்மாவினது சோகம் நிறைந்த முகத்தையும் காணும் போது அவளுக்குள் எரிமலை ஒன்று குமுறும்.

பயப்பிராந்தியத்துடன் தான் அவளை அம்மா பள்ளிக்கூடம் அனுப்புவாள். "பிள்ளை மேலை சுத்தினால் கவனம்" வயிறு குதற, நெஞ்சு புரைய அம்மா கடவுளை வேண்டிக்கொள்வாள்.

அவள் எப்படி மாறினாள்?

இரவில் வெளியில் வருவதற்கு அவளுக்குப் பயம். மர்மக் கதைகளை அம்மா சொல்லும் போது கேட்டுக்கெண்டிருந்துவிட்டு அம்மாவுடன் ஒட்டிக்கொள்வாள். கண்களை இறுக்கி மூடியபடி அவற்றைக் கேட்டுக்கொண்டிருப்பதில் அவளுக்கு பாதுகாப்பு உணர்ச்சி தென்படும். அவள் வளர்ந்து பெரியவளாகியும் அம்மாவுடனேயே தூங்குவாள். பக்கத்துவீட்டுக் கவிதாவை துணையாக கூட்டிக்கொண்டு வெளியிற் போவாள். இரண்டு

**அவள் எவ்வாறு இப்படி வாழக் கற்றுக் கொண்டாள்? அம்மாவிடம் தன் செல்ல மகளின் மாற்றத்தைக் கண்டு ஒருபுறம் இனந்தெரியாத பெருமை. மறுபுறம் சோகம் குடிகொள்ளும்.**

பேரும் துள்ளித் திரிந்தபடிசெல்லும் போது அமமாவுக்கு கவலை விட்டுப் போகும். தன் பிள்ளைக்குத் துணையாக ஒருவரும் இல்லையே என்ற நெடுநாளைய ஏக்கம் மறைந்துவிடும்.

அதற்கு இடிவிழுந்தது போல் தூங்கிக்கொண்டிருந்த கவிதாவின் இடது பக்கக்காலை ஒரு பின்னிரவில் செல் கொண்டு போனது. அப்போதெல்லாம் கவிதாவை விட அம்முக்குட்டி துடித்துப் போனாள். தன் காலைப் பறிகொடுத்ததைப் போல அவள் அழுதாள். கவிதா ஒன்றரைக் காலோடு கெந்திக் கெந்தி நடக்கையில் அம்முக்குட்டியின் கண்களில் இரத்தம் வடியும். அவ்வளவு உயிர் அவளில்.

அம்மாவுக்கு இன்றும் நம்பமுடியாமல் இருந்தது.

அந்த நாளை அம்மா வாழ்நாளில் மறக்கமாட்டாள். அந்த ஞாயிற்றுக்கிழமையிலிருந்து அம்மா ஊரிலுள்ள எல்லாக் கோயில்களுக்கும் போகத்தொடங்கினாள். அன்று காலை 'ரியூசனு'க்குப் போகவென வெளிக்கிட்டுப் போன அம்முக்குட்டி திரும்பவில்லை. மேசையில் அவளது அழகான குண்டுக் குண்டு எழுத்தில் அம்மாவுக்குக் கடிதம் கிடந்தது.

அது நடந்து ஒரு வருடத்தின் பின்பு அம்முக்குட்டி வந்துபோனாள். அம்மாவுக்கு தன் கண்களை நம்பமுடியாமல் இருந்தது. அந்தச் சீருடையும் கையில் ஆயுதமும் அவளின் நடை வித்தியாசமாக.... அதில் உறுதி தெரிந்தது. ஆனால் அந்தப் பார்வைக்கு மட்டும் அம்மாவை ஆறுதல் படுத்துகிற வீரியம் இருந்தது. அம்மாவின் கண்களைத் துடைத்து,

"இனி அடுத்த சந்ததி எங்களை மாதிரி வாழக்கூடாதணை"

"உடம்பைப் பார்த்துக்கொள் ளம்மா. என்னை நினைச்சுக் கவலைப்படாதையணை. என்னைப் போல ஆயிரமாயிரம் பிள்ளையள் போராடிக் கொண்டிருக்குதுகள்."

அவள் எவ்வாறு இப்படி வாழக் கற்றுக் கொண்டாள்? அம்மாவிடம் தன் செல்ல மகளின் மாற்றத்தைக் கண்டு ஒருபுறம் இனந்தெரியாத பெருமை. மறுபுறம் சோகம் குடிகொள்ளும்.

"பசி, குளிர் தாங்காத பிள்ளை. என்னமாதிரிக் கஷ்டப்படுதோ?" அம்மாவிடம் கவலை அப்பிக் கொள்ளும். நெஞ்சு நீர் வற்றித் தவிக்கும். இதயத்தின் அடியில் பெருமூச்சு ஒன்று சுழித்து அடங்கும்.

மாவீரர் நாளுக்காக ஊர் களை கட்டிவிட்டது. சிவப்பு மஞ்சள் கொடிகள் வீதியைக் குறுக்கு நெடுக்குமாக அலங்கரித்துக்கொண்டிருந்தன. அந்த நாளில் நள்ளிரவை அம்மா எதிர்பார்த்தபடி இருந்தாள். காலை விடியுமுன்பே எழுந்து முற்றங் கூட்டி, எண்ணெய் சுட்டிகளை எடுத்து அடுக் வைத்தாள். விருந்து

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

போலச் சமைத்தாள். அவளின் குழந்தைகள் அம்மாவைத் தேடி வருவார்கள்.

இப்போதெல்லாம் அம்மா மாறிப் போனாள். அம்மாவைத் தேடிப் போராளிகள் நிறையப் பேர் வருவார்கள். அம்முக்குட்டியைப் போல அம்மாவை அணைத்தபடி பிள்ளைகள் கதைப்பார்கள். அம்மா அவர்களில் அம்முக்குட்டியைப் பார்த்துத் திருப்திப்படுவாள். அந்தப் பிஞ்சு முகங்களைப் பார்க்கும் போது அந்த நிமிடங்களில் அம்மா விடமிருந்து அந்த வெறுமை தளர்ந்து போகும். வாழ்வின் பிடிப்பு மெல்லிய உயிர் துடிப்பாய் பற்றிக் கொள்ளும்.

இந்த மாவீரர் நாளுக்கும் அந்தச் சுவர் வெறுமையாய்க் கிடந்தது.

அம்முக்குட்டி ‘அ’ எழுதிக் கிறுக்கிய சுவடு மெல்ல அழிந்து போய் ஒரு துளியாய் இன்னும் கிடந்தது. அதைத் தவிர ஒன்று மேயில்லை. எப்போதும் அது வெறுமையாகத்தான் இருக்குமோ?

அவளுக்கு விதம்விதமாக பல கோணங்களில் தன்னைப் படம் பிடிப்பதில் விருப்பம். இறுதியாக அவள் விடுமுறையில் வந்து நிற்கும் போது அம்மாவை அணைத்தபடி நிறையப் புகைப்படங்கள் எடுத்தாள். ஒரு பக்கம் சாய்ந்து சிரிப்போடு அந்தப் படத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றாள்.

“இந்தப் படத்தை நீ எப்போதும் உன்னோட வைச்சிரணை”

அம்மா அந்தப் படத்தை நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள். விழிக் குழிக்குள் நிரம்பித் துடித்தன.

முற்றத்தில் அன்று நறைய றோசாப் பூக்கள் பூத்திருந்தன. அம்முக்குட்டிக்கு றோசா என்றால் உயிர். இதழ்களிற் பனித்துளி ஏந்தி சிலிர்த்தபடி விரிந்திருக்கும் பூக்களை நெடுநேரம் பார்த்துக் கொண்டிருப் பாள். ஓடிஓடிச்சென்று முகர்ந்து பார்ப்பாள். அம்மாவுக்கு அந்தப் பூக்களைப் பார்க்க நெஞ்சு வலித் தது. அந்தப் பூக்களைப் பிடுங்கி மாலை கட்டி அவளுக்குப் போட வேணும் போல இருந்தது.

“சீ என்ன வந்திட்டுது எனக்கு”

அந்த வெறுமையான சுவரை அம்மா பார்த்தாள். அம்முக்குட்டி யின் பெயரை மெல்ல மனதுக்குள் கூப்பிட்டாள். அப்படித்தான் முடி யும் அவளால்.

“நேரம் வந்திட்டுது. அம்மா வாங்கோ”

அவளை அந்தக் குழந்தைகள் அழைத்துச் சென்றார்கள். அம்மா வுக்கு நடக்கச் சக்தியில்லாமல் இருந்தது. அவர்கள் கைத்தாங்க லாகப் பற்றியபடி அம்மாவை அணைத்துச் சென்றார்கள். அந்த நிலையிலும் அம்மா தன் கை நிறையக் கொண்டு சென்ற றோசாப் பூக்களை கசங்கவிடாது மிகுந்த கவனத்தோடு கொண்டு சென்றாள்.

அம்மா அந்த நீண்ட கல்லறை களில் அம்க்குட்டியின் கல்லறை யைத் தேடினாள்.

‘ஏனிந்த வேண்டாத ஏக்கம் எதிர்பார்ப்பு’

அவளின் அம்முக்குட்டி இல்லை. வரிசையான நடுகற்களில் அவள் ஆசையோடு அம்மாளை நோக்கித் தவமிருந்து பெற்ற அம்முக்குட்டி என்ற அம்பிகை இல்லை. அம்மா வின் கண்கள் வலித்து மீண்டன.

தீப்பந்தங்கள் நிமிர்ந்து வான் நோக்கி நின்றன. கோயிலுக்கு வந்திருக்கும் பவ்வியத்தோடு நிற்கும் அந்த உறவுகளைப் பார்த்தாள். கல்லறைகள் பளிச்சிட்டபடி தெரிந்தன. ஈரலித்துப்போன காற்று மெல்ல அவள் உடலைச் சில்லிட வைத்தது. அம்மா தன்னை உலுக்கிக் கொண்டாள். அவளின் அம்முக் குட்டி அந்தக் காற்றிலே, அது தூவிவரும் அந்தச் சின்னச் சின்னப் பூக்களிலே அதன் பனி ஈரத்திலே கலந்திருப்பதாக அவள் நம்பினாள்.

அவள் காதுகள் கேட்கவெனக் காத்திருந்த மணி ஒலித்தது. அம்மா கண்களை மூடிக்கொண்டாள். அந்தக் கல்லறைகள் யாவற்றிலுமே அவளது அம்முக்குட்டி உறைந்திருப் பதாக நினைத்தாள்.

**நன்றி: சுதந்திரப் பறவைகள்**

# எமது எதிர்காலம்?

**“அகதிகள் வெள்ளம்”**
**“பொருளாதார அகதிகள்”**
**“வள்ளம் நிறைந்து விட்டது”**

போன்ற வார்த்தைகளை இப்போது சதாரணமாகவே அரசியல் வாதிகளிடமிருந்தும், தொலைக்காட்சி, பத்திரிகை, வானொலியிலும், சாதாரண ஜேர்மன் மக்களிடையேயும் கேட்கக் கூடியதாக உள்ளது.

ஜேர்மன் மக்கள் வெளிநாட்டவராலும், அகதிகளாலும் தமது வேலை, வீடுகள் பறிபோவதாகவும், தமது நாட்டின் சுத்தமும், சட்டம், ஒழுங்குகளும், கலாச்சாரமும் அழிவதாகவும் கருதுகின்றனர். முக்கியமாகத் தமது வரிப் பணத்தில் வாழும் ஒட்டுண்ணிகளாகவே அகதிகளை இவர்கள் எண்ணுகின்றனர். குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளில் இருந்து வரும் குடியேற்ற வாசிகள் மீதும், அகதிகள் மீதும், நாடுகளற்ற ஐரோப்பிய நாடோடி வாழ்க்கை நடத்தும் சிந்தி, றோமா இன மக்கள் மீதும் அதிக எதிர்ப்புணர்வும், வெறுப்புணர்வும் வளர்ந்தும், வளர்க்கப்பட்டும் வருகின்றது. இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷிலிருந்து வருபவர்கள் பயங்கரவாதிகள், தொற்றுவியாதிக்காரர்கள், போதைப் பொருள் கடத்தல்காரர்கள், காட்டுமிராண்டிகள் என்ற அபிப்பிராயமும் வேரூன்றப்பட்டுள்ளது.

**‘எமது எதிர்காலம்?’ - ராகவன், ஜேர்மனி**
நன்றி: புலம்பெயர்ந்த தமிழர் நல மாநாடு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# நேர்காணல்
# சொக்கன்

## நேர்முகம்: கருணாகரன்

**★★ ஈழத்து தமிழ் இலக்கியக் குடும்பத்தின் மூத்த உறுப்பினர்களுள் ஒருவராகிய தங்களின் இலக்கியப் பிரவேசம், வளர்ச்சி, முதிர்ச்சி, வாழ்க்கைப் பின்புலம் பற்றி இளைய தலைமுறை அறியக் கூடியதாகக் கூறுங்கள்.**

☛ நான் பிறந்தது 2-6-1930ல். பிறந்த ஊர் ஆவரங்கால். பெற்றோருக்கு ஒரே மகன். தந்தை இறந்த பொழுது எனக்கு ஒரு வயது. மிகவும் வறுமை. இதனால் என் தாயார் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையிலே வந்து தம் உறவினரோடு வாழத் தொடங்கினார். 18 வயது வரை வண்ணார்பண்ணையில் (நீராவியடியில்) வாழ்ந்தோம். பின்பு என் ஒன்றுவிட்ட அண்ணரோடு நாயன்மார்கட்டில் வாழத் தொடங்கினோம். என் குடும்பத்தோடு வாழ்கிறேன். எட்டுப் பிள்ளைகள். பேரப்பிள்ளைகளும் உண்டு. 1944ல் வீரகேசரியில் எனது முதற்கதை "தியாகம்" வெளியாயிற்று. என் தமையனார் முறையினர் அச்சகத் தொழிலாளி. மாமனார் புத்தகசாலை ஒன்றில் எழுதுவினைஞர். சிறிய தகப்பனாரில் ஒருவர் ஆயுர்வேத வைத்தியர். இவர்களும், என் சிற்றன்னைமார், அத்தைமார் எல்லோருமே புத்தகப் பித்துக்கள். பத்திரிகைகள், சஞ்சிகைககள், புதினங்கள், பாரத, ராமாயணக் கதைகள் என்று அந்தச் சிறிய வயதில் எனது வாசிப்புப் பசிக்குப் பெரும் தீனி கிடைத்தது. அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் தெருவுக்குத் தெரு படிப்பகங்கள். வீட்டில் எனக்கு கட்டுப்பாடு குறைவு. எனவே மேலதிக வாசிப்புக்கும் வாய்ப்புக்கள் கிடைத்தன. புத்தகப் புழு ஆனேன். போதும் போதாததற்கு த. ராஜகோபாலன், 'மதுரகவி' நாகராஜன், ராமச்சந்திர ஐயர் ஆகிய பள்ளித் தோழர்களும் கிடைத்தார்கள். வாசித்தவை பற்றி விமர்சித்தல், கலந்துரையாடல், பட விமர்சனம் என்று இவர்களின் கலை உறவுகளும் என் எழுத்துக்குத் தூண்டு கோல்களாயின. முதற் கதையே வெளியான தன்னம்பிக்கை வேறு. சிறுகதை, நாடகம், கட்டுரை, கவிதை என்று அகலக்கால் வைக்கத் தொடங்கினேன். வாலிபத்தில் ஆடியவள், முதுமைக்காலத்தில் காலை ஆட்டுவதுபோல் இன்றும் அவ்வப் போது எழுத முனைப்பு ஏற்படுவது உண்மைதான். முதுமை என்னை அடைந்தது போல முதிர்ச்சியம் என்னை அடைந்துள்ளதா என்பது கேள்விக்குரியது. பெருகி வரும் புத்தாக்கங்களைப் படிக்கையில் என் படைப்புக்கள் பற்றி மீளாய்வு செய்யவேண்டும் போல் தோன்றுகின்றது.

**★★ ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான தங்களின் இலக்கிய அனுபவத்திலிருந்து ஈழத்து இலக்கிய உலகம் பற்றிய தங்களது கணிப்பீட்டைச் சொல்லுங்கள்.**

☛ மா. வே. திருஞானசம்பந்தம் பிள்ளை (உலகம் பலவிதக் கதைகள்), வரணியூர் ராசையா (பவளகாந்தன் அல்லது வீரகேசரி விஜயம் முதலாம் துப்பறியும் கதைகள்) போன்றவை நாற்பதுகளின் தொடக்கங்களில் நான் வாசித்தவை. சரளமான நடையில் மெரீனா பீச் நினைவின்றி எழுதப்பட்ட இவை ஏதோ ஒரு படிப்பினையைத் தந்தன. பிறகு "சம்பந்தன்", "இலங்கையர்கோன்", "சி. வைத்தியலிங்கம்" வருகிறார்கள்.

வடமொழி, ஆங்கிலம், தமிழ் இலக்கிய அறிவும் பரந்த வாசிப்பும் கொண்டு நல்ல சிறுதைகளைப் படைத்து இவர்கள் வழிகாட்டினார்கள்.

1943ல் மறுமலர்ச்சி இயக்கமும் மறுமலர்ச்சி சஞ்சிகையும் தோன்றுகின்றன. சமகால அரசியல், சமூக, மொழி, இன உணர்வுகளோடு மரபுத் தமிழின் கட்டை உடைத்துக் கொண்டு ஆ. செ. மு., அ. ந. கந்தசாமி, வரதர், வ. அ. ராசரத்தினம் போன்றோர் படைப்பிலக்கியத்தில் சுவடு பதிக்கிறார்கள். 1956ல் இருந்து தொழிலாளர் வர்க்கத்திலிருந்து எழுத்தாளர் தோற்றம். 60களில் பல்கலைக்கழக ஆசிரியர்களும், பட்டதாரிகளும் புதிய வேகத்தோடு எழுத்துலகில் கால் வைக்கிறார்கள். படிப்படியாக எழுத்தாளர் எண்ணிக்கையும் எழுத்துப் புலப் பரப்பும் விரிவடைகின்றன. "எதார்த்தம்" என்பதோடு சொற்சிலம்பங்கள், மண்வாசனை என்றெல்லாம் புதிய வீச்சுக்கள் தலைதூக்குகின்றன.

இன்று போராட்ட காலம் அதற்கேற்ப சத்திய தரிசனங்கள் முன் எக்காலத்திலும் பார்க்க அதகிமாக தலைதூக்கக் காண்கிறோம்.

உணர்ச்சித் துடிப்பும், ஆவணப் படுத்தும் ஆர்வமும் இன்று மிகப் பெருமளவில் வெளிப்படக் காண்கிறேன். இவை விரிவாக ஆராயப்பட வேண்டியன.

**★★ காலநீரோட்டத்துடன் இணைந்து சோராது எழுதிவரும் எழுத்தாளர்களில் தாங்களும் ஒருவர். நீண்ட இலக்கியத் தொடரோட்டத்தின் வாயிலாக இன்று முதிர்ந்து வரும் போர்ாட்ட இலக்கியம் பற்றி என்ன கருதுகிறீர்கள்?**

☛ இது வீர யுகம். உலகெங்கும் வீரயுக இலக்கியங்கள் போராட்டத்தையே மையமாகக்கொண்டு தோன்றியது வரலாறு தரும் பாடம். போரின் தவிர்க்கமுடியாத தேவை பற்றி உள்ளத்தைத் தொடும் வகையிலே போராளிகளில் பலரும், எழுத்தாளர்களில் சிலரும் இலக்கியம் படைக்கிறார்கள். போரின்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

விளைவுகள் பற்றியும், அது முழுச் சமுதாயத்தையுமே எவ்வாறு பாதித்துவருகிறது பற்றியும் இன்னும் கூடிய வீச்சான படைப்புக்கள் தோன்றவேண்டும் என்றே சொல்லத் தோன்றுகிறது.

**★★ நாவல், சிறுகதை, கவிதை, நாடகம் என இலக்கியத்தின் பல வடிவங்களையும் கையாண்டு எழுதியுள்ள தாங்கள், தனித்தமிழ் பிரயோகத்திலும் தீவிர அக்கறை செலுத்துகிறீர்கள். இலக்கியத்தில் தனித்தமிழ் பிரயோகம் எந்தளவுக்குச் சாத்தியமாகும்?**

☛ நான் இந்த நேர்காணலுக்கு முற்றுமுழுக்கத் தனித்தமிழையே கையாளத்தான் முதலில் எண்ணினேன். ஆனால், அதற்கான காலம் இன்னும் குதிரவில்லை என்பதனாலேயே கலப்புத் தமிழிலே கூற முடிவுசெய்தேன். இது ஒருபுறமிருக்க, பின்வரும் காரணங்களாலேயே பிறமொழிப் பிரயோகங்கள் அதிகரித்து விட்டன என்பது என்கருத்து.

1. தமிழ்நாட்டு எழுத்தாளர்களை நீண்டகாலமாக போலிப்புச் செய்வதே என்னை உள்ளிட்ட எழுத்தாளர் பலரின் போக்காக இருந்து வந்ததாலும், புதிய சொல்லாக்கங்களை ஆக்கி உலாவவிடும் பேரவாவாலும் அவற்றின் ஒலிநயத்தில் உண்டான ஆர்வத்திலுமே வரையறையின்றி பிறமொழிச் சொற்களை நாம் அதிகமதிகமாகக் கையாண்டு வருகின்றோம். இதனால் தமிழ் மொழியின் தன்னாற்றல் கேள்விக்குள்ளாகிறது. ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளரெனப் போற்றப்படும் எஸ். பொன்னுத்துரை 'கரு' (Plot) என்ற சொல்லுக்கு (கதாசரித்திர விந்து) என்ற சொல்லை அறிமுகப் படுத்தியதை இவ்விடத்தில் நினைவு கூரலாம். இத்தகைய குறும்புகள் தமிழைச் சாகடிப்பவை என்பதை எமது எழுத்தாளர் உணர்ந்தால் நல்லது.

2. எமது மண்வாசனைச் சொற்களில் பல தூய தனித்தமிழ் சொற்களே. அவை புறக்கணிக்கப் படும் காலப்போக்கில் தமிழ் உயிர்ப்பையும் இழக்கவும் நேரிடுகிறது.

கே. டானியலின் புதினங்களில் எமது மண் வாசச் சொற்கள் உயிர்த் துடிப்புடன் உள்ளன. அவரின் கதைகளில் பிறமொழிச் செல்வாக்கு மிகக் குறைவு. படித்தால் அறியலாம்.

3. பிறமொழி அறிவில்லாது எழுந்தமானத்தில் அவற்றை பிழைபடக் கையாள்வதை அவ்வம் மொழி அறிஞர்களைக் சுட்டிக் காடிக் கேட்டிருக்கிறேன். சுபிட்சம் - சுபீட்சமாகிறது. ஆன்மிகம் - ஆன்மீகமாகின்றது. இப்படிப் பல. விரிக்கிற பெருகும். பிறமொழிச் சொற்களைக் கையாளும் நாங்கள் அவற்றை வெறும் குறியீடுகளாகத்தான் கையாளுகின்றோம். எழுத்தாளர்கள் புதிய சில சொற்களைக் கையாளுகிறார்கள். ஆனால், இது சரியான, வலுவான தமிழ்ச் சொல்லா என எண்ணுவதில்லை. சொல்லாக்கம் செய்பவர்களும் கருத்துணர்வோடு அவற்றைச் செய்வதில்லை. தமிழில் உள்ள சொற்களைத் தேடிப்பிடித்து, அவற்றை இலக்கியகாரர்கள் தங்களது எழுத்துக்களில் பயன்படுத்த வேண்டும். அந்தத் தேடல் இல்லாத வரை தனித்தமிழ் பிரயோகம் இலக்கியத்தில் சாத்தியமில்லை என நம்பிக்கை இழந்துகொண்டே இருப்போம். கூடியவரைக்கும் இதைச் சாத்தியமாக்கலாம் என நான் கருதுகிறேன்.

**★★ அவ்வாறெனில் எதார்த்த இலக்கியம் என்பதின் சாத்தியப்பாடு கேள்விக்குரியதாகுமே?**

☛ தனித்தமிழில் கதை எழுத முடியும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. இதற்கு வெளிச்சத்தில் நான் எழுதிய 'மனப்பூட்டு உடைகிறது' என்ற சிறுகதையே எடுத்துக்காட்டு. அது பலராலும் பாராட்டப்பட்டது. தனித்தமிழ் சொற்கள் கையாளப்பட வேண்டிய இடங்களிலெல்லாம் தேவையற்ற பிறமொழிச் சொற்கள் கையாளப்படுகின்றன. இது தவிர்க்கப்படவேண்டியன. இதுபற்றி விரிவாக எழுத எண்ணியுள்ளேன். இதனால்தான் தங்களின் முதல் வினாவுக்கு இன்னமும் காலம் குதிரவில்லை என்றேன்.

**★★ நீங்கள் கையாண்டு வந்த சிறுகதை வடிவத்துக்கும் இன்றுள்ள சிறுகதை வடிவங்களுக்குமிடையில் எவ்வாறான வளர்ச்சி காணப்படுகிறது?**

☛ கையாளும் சொற்கள், வசனங்கள் என்பவற்றில் கூடிய கவனமும் சொல்லும் பொருளில் அதிக கவனமின்றியும் நேரடியாகக் கதை கூறும் வழக்கமே முன்பு பெருமளவு இருந்தது.

புதுமைப் பித்தன் போன்ற சிலர் இதற்கு விதிவிலக்கு இன்று சொல்லும் பொருளே முதன்மை பெறுகிறது. இன்றுள்ள எழுத்தாளர் வட்டம் பரந்தது. இந்தக் காலத்துக்குரிய இலக்கியம் விசாலமடைந்துள்ளது. முன்பு சமூகத்தின் தேவைகளும் நோக்குகளும் மெதுவாக இருந்தன. இலக்கியத்தைச் சுவைப்பது, அதன் மூலம் சிந்திப்பது என்பதாகவே அன்றைய இலக்கியங்கள் அமைந்தன. ஆனால் இன்றுள்ள வளர்ச்சி உலக நோக்குடன் அறிவியல், போராட்டம் என்று சிந்திப்பதால் களம் பெரிதாகி, எழுத்தளனுக்குச் சொல்லும் விடயம் எத்தனையோ இருக்கின்றது. அதைச் சொல்லும் வேகமும் துடிப்பும் இருப்பதால் அதன் வடிவ அமைதிபற்றிய சிந்தனை குறைவு. பாடுபொருளும், வாசகரும் பரந்து இருப்பதால் முன்னரிலும் பார்க்க வேறுபட்ட ஒரு நிலையும் கூடுதல் பொருட்பரப்பும் கொண்டிருப்பதுதான் இன்றைய வளர்ச்சி, வேறுவகையில் சொல்வதானால் வடிவ அமைதியைக் காட்டிலும் பொருளமைதிதான் இன்றைய வளர்ச்சி எனலாம்.

வாசகரின் நிலைக்கு ஏற்ப படிமங்கள், குறியீடுகள் என அமைந்து, மனிதனது அறிவியல் சார்ந்து இன்றைய இலக்கியம் அமைந்துள்ளது.

**★★ மற்ற இலக்கிய வடிவங்கள் எழுச்சியுடன் காணப்பெறும் அளவுக்கு இங்கே நாவல் வளர்ச்சியடையவில்லை என்று சொல்லப்படுகிறது. இதன் காரணம் என்ன?**

☛ "ஓரங்க நாடகம் என்பது யன்னலூடாக வெளியே பார்ப்பது போன்றது. முழுநீள நாடகம் என்பது பரந்தவெளியில் நின்று காண்பது போன்றது'' என்று ஒருவர்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சொன்னது சிறுகதைக்கும், நாவலுக்கும் பொருந்தக்கூடிய உவமைதான். பரந்த பார்வைக்கான பல துறை அறிவு, அனுபவம், பொறுமை, விரிந்தநோக்கு என்பன எமக்கு போதிய அளவு இல்லையோ என்று எண்ணுவதே கசப்புத்தான். ஆனால் கசப்பான உண்மை என்பதால் மட்டும் இதனைத் தள்ளிவிடமுடியுமா?

**★★ உலக நவீன இலக்கியங்களையும் படித்தறிந்து அதேவேளையில் தொன்மையான இலக்கியங்களையும் உற்றுணர்ந்த இணைப்புப் பாலமாக விளங்கும் தாங்கள் இனிவரும் காலத்தில் எம்மண்ணில் எவ்வகையான , இலக்கியங்கள் தோன்றுமென நினைக்கிறீர்கள்?**

☛ உங்கள் கேள்வியின் முதற் பகுதிக்கு நான் முற்றிலும் தகுதி படைத்தவன் அல்லன். இரு பெருங் கடல்களின் கரைகளில் நின்று கிளிஞ்சல்களைப் பொறுக்கிய சிறு குழந்தையாகவே என்னை நான் கருதுகிறேன்.

இனிவருங்காலத்தில் எம்மண்ணில் தோன்றப்போகும் இலக்கியங்கள் பற்றிப் பேராசிரியர் மு. வரதராசனின் கூற்றொன்றைக் கூறுவதோடு அமைந்து விடுகிறேன். (அவரின் நேரடிக்கூற்றல்ல அதன் காரம் தான் அந்த "நெருப்பு மேலெழுந்து எரிவது, நீர் சமநிலையில் ஓடுவது, ஆனால் சூறாவளிகள், புயல்கள் வீசுங்காலத்தில் நெருப்பு சமநிலையில் கீழ் வருவதும், நீர் குமுறி ஆர்ப்பரித்து மேலெழுவதும் காண்கிறோம். புயலும் சூறாவளியும் அடங்கியபின் நெருப்பும் நீரும் தமது இயல்பு நிலைக்குத் திரும்புவதுதான் உண்மை"

எனவே போர்க்காலம் அடங்கி அமைதிக்காலம் தோன்றும் வரை இன்று இலக்கிய நோக்கும், போக்கும் தொடரவே செய்யும். அமைதி மீண்டதும் (எல்லோருமே அதனைத் தான் விரும்புவார்கள்) விழுமியங்கள் (Values) புதிய தோற்றம் எடுக்க, அவற்றுக்கேற்ப இலக்கியங்கள் தோன்றும்.

**★★ எமது தேசிய விடுதலைப் போராட்டத்துடன் அன்றிலிருந்து, இன்றுவரை தீவிர பற்றுகொண்டுள்ளீர்கள். இந்தப் போராட்டம் வெல்லுமென்ற நம்பிக்கையிழந்த படைப்பாளிகளும் எம்மிடம் இன்றும் இருக்கிறார்கள். இவர்களுக்குத் தங்களின் அனுபவத்தினூடாக என்ன கூறவிரும்புகிறீர்கள்?**

☛ "எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு"

★★★



விலங்கை உடைத்தெழுந்து விடுதலையைப் பாடி (ஓவியம்: கே. எஸ். பாலா – Evry)

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# முதலாளித்துவ சுரண்டலும் ஈழ அகதிகளும்

**ஜெயசக்தி**

தமிழகத்தில் ஈழ அகதிகள் முகாம்கள் பெரிய பெரிய தொழிற்சாலைகளுக்குப் பக்கத்திலும் தொழில் விவசாயப் பகுதியிலும் இப்படி இன்னோரென்ன பாரிய தொழில் அமைவிடங்களுக்குப் பக்கத்திலேயே நிறுவப்பட்டுள்ளன.




இங்கு எம்மீழத் தமிழ் மக்களின் உடலும் இரத்தமும் வியர்வைகளாய்ச் சிந்தப்படுகிறது. கூலிமட்டும் பிச்சையாகவே அமைந்துவிடுகிறது. எம் ஈழத் தொழிலாளருக்கும் இன்று உலகம் எங்கிலும் கூலி பிச்சையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதோ?

முதலாளிகளின் திடீர் வளர்ச்சிக்கு இன்று ஈழத் தமிழர்கள் கிடைத்துள்ளார்கள். தமிழகத்தில் தர்மபுரி மாவட்டம் சிப்கொட் தொழில்நிறுவனங்கள் மற்றும் தொழில் விவசாயப் பகுதிகள், கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களின் பாரிய நெசவுத் தொழில்கள், இதர தொழிற்சாலைகள், சேலம் மாவட்டம் கோழிப் பண்ணைத் தொழிற்சாலைகள், மற்றும் பண்ணைகள், தென்னந்தும்பு மற்றும் விவசாய நிலப் பகுதிகள் மதுரை மற்றும் இதர மாவட்டங்களின் கைத்தெறி, பாரிய டெக்ஸ்டைல்ஸ் தொழிற்சாலைகள், காஞ்சிப்பட்டு முதல் சிவகாசிப் பட்டாசுத் தொழிற்சாலை வரை ஈழத் தொழிலாளர் கரங்கள் தேய்ப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

நாளும் நாயாய், மாடாய் உழைத்து மனதில் ஒரு சில ஆசைகள் நிறைத்து மாய்கின்ற ஈழத்தொழிலாளர்களுக்கு மிச்சம் பிச்சைக் கூலிமட்டும் தான். அவர்கள் உழைப்பு பெரும் லாபம் ஈட்டும் முதலாளியத்தால் சுரண்டடப்படுகிறது. இவர்கள் (ஈழத் தொழிலாளர்) நிலை மட்டும் சில ஆசை வைத்தும் அதுவும் நிறைவேறாது. தன் பாலகனுக்கு காக்கா காட்டி தூங்கவைக்கும் நிலையில் தான் இவர்கள் வாழவேண்டிய நிலையா?

இப்படியான சூழ்நிலை ஏற்படும் போது முதலாளி - தொழிலாளி என்ற முக்கிய பிரச்சினை எழுவதற்கு வாய்ப்புத் தோன்றும் என்பதை முதலாளிய அரசு நினைக்காமலா இருக்கும்?

இதற்காக அரசு அகதிகளை கண்காணிக்கும் அரச அதிகாரிகளுக்கும், அகதிகளுக்குமிடையே முரண்பாடுகளை உருவாக்குகிறது. "யாரும் வேலைக்குச் செல்லக்கூடாது. இது அரசின் ஆணை" என அதிகாரிகள் ஈழத் தமிழர்களிடம் சொல்வதும், அதேசமயம் வேலைக்குச் செல்ல பொருளாதார நெருக்குதல் கொடுத்து வேலைக்கு விடுவதும் அரசின் இன்றைய திட்டமாகும். இங்கு தொழிலாளர்களுக்கும் அரசின் அதிகாரிகளுக்குமிடையே உள்முரண்பாடுகள் முக்கியத்துவம் பெறுவதால், முதலாளி - தொழிலாளி முரண்பாடு பின்னுக்குத் தள்ளப்படுகிறது.

ஆக, தமிழகத்தில் ஈழ அகதிகள் உண்மையான முரண்பாட்டைப் பற்றி தெளிவுபெறுதல் மிக அவசியம். அதன் அடிப்படையில் புதிய பாதையை அமைத்துக்கொள்ள வேண்டும். உழைக்கும் மக்களின் கரங்களால் மட்டுமே புதிய பாதையின் வெற்றிகண்டு விடுதலைபெற முடியும் என்பதை உணர்ந்து செயற்படவேண்டும்.

**'புலம்பெயர்ந்த தமிழர் நல மாநாடு சிறப்புமலரிலி'ருந்து**

*தள்ளாடியபடியே நான் வீடு*
*வருகையில்*
*யாரது வீட்டு வாசலில் நிற்பது?*
*வீடு தேடும் கள்ள அகதித்*
*தமிழன் ஒருவன்!*

**- சென்றவருடக் கடைசியில் 'ஒரு ஜேர்மனியனின் அனுபவம்' எனும் தலைப்பில் புதிய நாசிகளின் ஒரு குழுவான குடியரசுக் கட்சியினால் (Die Republikaner) வெளியிடப்பட்ட தேர்தல் பிரச்சாரக் கவிதையில் இருந்த சில வரிகள் இவை.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# போர்க்கால ஓவியங்கள்

தமிழீழத்தில் வளர்ந்து வரும் சின்ன ஓவியர்களது ஓவியங்கள் இவை. சுதந்திரத்தை அவாவி நின்றுசுடர் ஏற்றி மகிழ்வதாகவும் - ஒடுக்குமுறைக்கு எதிராக போராடி மண்ணை மீட்கும் போராளிகளை நேசிப்பதாகவும் விடுதலைப் போராட்டத்தில் உள்ள அவர்களது துடிப்பையும் உந்துதலையும் வெளிப்படுத்தி நிற்பதாக அவை அமைந்திருக்கின்றன.

*சின்னப் பூக்களின்
எண்ணப் புலர்வுகள்
வண்ணக் கலவையில்
வந்துதித்தன.*



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்








www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழீழத்தின் உற்பத்திகளில் ஒன்று உப்பு

## குடாநாட்டில் வாதரவத்தை, கரணவாய், புத்தூர் ஆகிய இடங்களில் உப்பு விளைவிக்கப்படுகிறது

காலை 10.00 மணி. ஆனால் சூரியனின் வெம்மை நடுப்பகலை ஞாபகப்படுத்திக் கொண்டிருந்தது. நாயன்மார்கட்டை தாண்டி எமது மிதிவண்டிகள் செம்மணிச் சுடலைக்குள் நுழைகின்றன. சன நடமாட்டம் அதிகமாக இல்லை. எதிர் காற்றிற்கு ஈடுகொடுத்தபடி ஆடி அசைந்து வரும் விறகு வியாபாரிகளை தவிர ஒரு சிலரே வெயிலை பொருட்படுத்தாது போய் வருகின்றனர். செம்மணி சுடலைக்கு சமீபமாக "பனம் விதைகள் நாட்டப்பட்டுள்ளன" என்ற அறிவிப்புப் பலகையைத் தாங்கிய கம்பம் ஒன்று காணப்பட்டது. செம்மணி வீதியில் இடதுபுறமாக செம்மணி -'இருபாலை உப்பு உற்பத்தி மையம்' என்ற பெயர்ப்பலகை வரவேற்றுக் கொண்டிருந்தது. அந்தப் பெயர்ப் பலகை காட்டிய திசையில் பிரதான வீதியிலிருந்து இடது புறமாக திரும்பிய மண் பாதையில் எமது மிதிவண்டிகள் உப்பு உற்பத்தி மையத்தைப் பார்வையிட்டு தகவலறியும் நோக்குடன் நகரத் தொடங்கின. மண் போட்டு உயர்த்தப்பட்டிருந்த அந்தப் பாதையின் இருபுறமும் தில்லை மரங்கள் நிறைந்த பற்றைகள் சின்னஞ்சிறிய காடு போன்று தோற்றமளித்தன. பொருண்மிய வளர்ச்சியில் ஆரம்பநிலையிலிருக்கும் எமது தமிழீழத்தில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடத்தப்படும் இந்த உற்பத்தி நிலையத்தின் உற்பத்தி சாதனையை எண்ணி நெஞ்சம் பெருமிதமடைய "அனுமதி பெற்று உள்ளே வரவும்" என்ற அறிவிப்பை அனுமதியுடன் தாண்டி உள்ளே நுழைகிறோம். நிர்வாகியும், உதவியாளர்களும் இனிய முகத்துடன் எம்மை வரவேற்கின்றனர். எமது நோக்கத்தை சொன்னவுடன் உற்சாகமாக எமது கேள்விகளிற்கு பதில் தரத் தொடங்குகிறார் நிர்வாகியான திரு. வேலாயுதம் அவர்கள். "உப்பு உற்பத்தியின் ஆரம்ப நடைமுறைகள் என்ன?" என்ற எமது கேள்விக்கு "உப்பு உற்பத்தியை மேற்கொள்ள உப்புத் தன்மை கொண்ட தட்டையான களிமண் நிலம் தேவை. இந்த நிலப் பகுதியை பாத்திகளாக்கி 3.0° - 3.5° அடர்த்திகொண்ட கடல்நீரை இதற்குள் பாய்ச்சுகிறோம். முதலில் நீர் பாய்ச்சப்படும் பாத்தி காச்சல் பாத்தி என அழைக்கப்படும். இங்கே பன்னிரண்டு காச்சல் பாத்திகள் அமைக்கப்பட்டுள்ளன. நல்ல வெயிலும் சாதாரண காற்றும் இருந்தால் மூன்று நாட்களிற்கு ஒருமுறை ஒவ்வொரு பாத்தியாக நீரை மாற்றலாம். இதன்பின் காச்சல் பாத்தியிலிருந்து விளைவு பாத்திக்குள் 25.00 அடர்த்தியுள்ள உவர் நீர் பாய்ச்சப்பட்ட பின்பே உப்பு விளைவு ஆரம்பமாகிறது. அதற்கு முந்திய நிலைகளில் கல்சியம் காபனேற்று, ஜிப்சம் ஆகிய படிவுகள் பெறப்படுகின்றன. தன்னிச்சையாக விளையும் உப்பில் இந்த இரசாயனப் பொருட்களும் காணப்படுகின்றன. இவை உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கக் கூடியவை" என நீண்ட பதிலைத் தந்தார். "உப்பு உற்பத்தியை எந்த காலங்களில் மேற்கொள்ளலாம்? எப்படியான காலநிலை தேவை?"




"ஏப்ரல் தொடக்கம் ஒக்டோபர் வரையிலான காலப்பகுதியே உற்பத்திக் காலம். நல்ல வெயிலும் சாதாரண காற்றும் இருக்க வேண்டும். இடையே மழை வந்தால் உற்பத்தியில் சுணக்கம் ஏற்படலாம்." உப்பு சேகரித்து வைக்கப்பட்டிருக்கும் இடங்களையும் உற்பத்தி செய்யப்படும் பாத்திகளையும் பார்வையிட விரும்பிய எமக்கு வழிகாட்டியபடி விளக்கமளிக்கத் தொடங்கினார்.

உற்பத்தி செய்யப்பட்ட உப்பு குவியல்களாக்கப்பட்டு கிடுகினால் மூடி வேய்ந்து பாதுகாக்கப்படுகிறது. கிடுகினால் வேயப்பட்ட குவியல்கள், பெரிய வீடுகள் நிலத்துள் அமிழ்ந்து போயிருப்பது போலிருந்தன. "ஒரு வருடத்திற்கான உப்பு தற்போது கையிருப்பில் உள்ளது. அதிகளவு உப்பு இருப்பாக உள்ளதால் தற்போது உற்பத்தியை மந்தப் படுத்தியுள்ளோம்." என்றார். 90 ஆண்டு காலப்பகுதியில் 1 கிலோ உப்பு 30 ரூபாய் ஆக விற்ற அன்றைய நிலையையும், சுயதேவை நிறைவுடன் ஒரு வருடத்திற்கான உப்பை கையிருப்பாக வைத்திருக்கும் இன்றைய நிலையையும் எண்ணும்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

போது "சிறீலங்கா விதித்தது பொருண்மியத் தடை, தமிழீழம் காண்கிறது அதற்கு விடை" என்ற வரிகளே ஞாபகத்திற்கு வந்தன. இந்தச் சாதனை பொருண்மிய வளர்ச்சியில் தமிழீழம் எதிர்காலத்தில் தொடப்போகும் எல்லைகளை முன்னறிவிப்பு செய்வதாகத் தோன்றியது. எமது கற்பனையைக் கலைத்தது நிர்வாகியின் குரல். "இந்த சேகரிப்பு குவியல்களின் நீளம் 80 அடி, அகலம் 26 அடி, உயரம் 10 அடி, முகட்டின் நீளம் 54 அடி. சுமாராக 250,000 கிலோ வரும். வருசம் வருசம் மால் வேய வேண்டும். ஒருமுறை ஒரு மால் வேய 15,000 ரூபாய் தேவை. உப்பை மூன்று மாதங்கள் இவ்வாறு காற்றுப்படாது பாதுகாப்பதன் மூலமே இரசாயனப் பொருட்களினால் ஏற்படும் கெடுதியிலிருந்து தப்பலாம்." மூன்று மாதங்கள் இவ்வாறு இருப்பில் வைத்திருக்கும் போது இரசாயன மூலக்கூறுகள் தமது செயற்பாட்டை இழக்கின்றன. இன்னும் பாத்திகளில் ஓரிரு அடி ஆழமுள்ள நீர் நிறைந்திருந்தது. உப்பு உற்பத்தி இங்கே ஆரம்பமாகவில்லை. சில மீன் குஞ்சுகள் அதற்குள் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன. "உப்பு உற்பத்தி செய்யப்படும் பாத்திகளிலேயே மீன் பிடியும் நடக்கிறது. மீனவர்கள் கடலிலிருந்து நீரைப் பாத்திக்குள் வெட்டிவிடுகிறார்கள். இதனால் பாத்திகள் மிதிபட்டு சேறாகி மீண்டும் உற்பத்தியை ஆரம்பிக்கும் போது அவற்றைச் சீராக்கும் புதியதொரு வேலைச் சுமையும் ஏற்படுகின்றது" எனக் கவலையோடு தெரிவித்தார். இங்கிருந்து பார்க்கும் போது கோப்பாய் பாலத்தால் போக்குவரத்து நடைபெறுவதும் எமது பார்வைக்குத் தெரிந்தது. கண்ணுக்கெட்டிய தூரம் வரை சிறிய சிறிய பற்றைகளுடன் கூடிய நிலப் பரப்பே விரிந்திருந்தது.

"10 ஏக்கர் நிலத்தில் மட்டுமே இப்போது உற்பத்தி செய்கிறோம். 210 ஏக்கர் பயன்பாடில்லாது வீணாகக் கிடக்கிறது. எதிர்வரும் காலங்களில் அந்த நிலமும் பயன்படுத்தப்பட்டால் உற்பத்தி அதிகரிக்கும். ஜப்பான் போன்ற நாடுகளிற்கும் உப்பு ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்பிருக்கிறது." உப்பு ஏற்றுமதி வருமானத்தை ஈட்டித்தரக்கூடிய எமது விளைபொருட்களில் ஒன்றாகும். காங்கேசன்துறை, பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து எமது நாட்டு உப்பை ஏற்றியபடி அசைந்து செல்லும் அந்நிய நாட்டு கப்பல்கள் ஒரு முறை எமது கண்ணிற்குள் விரிந்து மறைந்தன.

"இந்த மையத்தின் நிர்மாணச் செலவு எவ்வளவு ஐயா?"

## செம்மணி உப்பளத்தை பார்வையிட்டு தங்கள் அனுபவத்தை பகிர்ந்துகொள்கின்றனர் இருவர்

*அவர்கள்: அ. திரியம்பதி, பே. ரஜனி*

"ஐம்பது இலட்சம். இந்த இடம் முன்பு விளையாது என சிறீலங்கா அரசால் கைவிடப்பட்ட இடம் 1990ஆம் ஆண்டிற்குப் பிறகே அதிகளவு உற்பத்தி நடைபெறுகிறது. நீர் பாய்ச்ச இயந்திரவசதிகள் இருக்குமானால் இன்னும் முன்னேற இடமுண்டு. மீன்பிடித் தொழில் முன்பு போல் நடைபெறுமாயின் கருவாடு தயாரித்தலிற்கு உப்பு மிக அவசியமாதலால் ஒரு நாளிலேயே 8 லோட் உப்பு விற்பனையாக வாய்ப்பிருக்கிறது" என பதில் தந்தார். சூரியன் எனது தலைக்கு மேல் எரிந்து கொண்டிருந்தான். பாத்திகளை பார்வையிட்டு முடித்த நாம் மீண்டும் அலுவலகத்தை அடைந்தோம். அலுவலக வாசலில் உப்பு உற்பத்தியில் மட்டுமல்ல உணவு உற்பத்தியிலும் இவர்கள் ஈடுபடுகிறார்கள் என்பதை பறைசாற்றியபடி தானியக்கதிர்கள் காற்றில் அசைந்து கொண்டிருந்தன.

"எவ்வளவு பேர் இங்க வேலை வாய்ப்பு பெறினம்?"

"சீசன் நேரத்தில் 75 தொடக்கம் 125 பேர். மற்ற நாட்களில் 4 பேருக்கு தான் வேலை இருக்கு. அயற் கிராமங்களான அரியாலை, இருபாலை, கைதடி பகுதி மக்களே அதிகளவில் வேலை செய்கிறார்கள். குறைந்தது வருடத்தில் ஆறு மாதங்களாவது அவர்களிற்கு வேலை இருக்கும்."

"ஒரு தொழிலாளிக்கு என்ன சம்பளம் வழங்கப்படுகிறது?"

"ஆண் தொழிலாளிக்கு நாளிற்கு 100 ரூபாய், பெண் தொழிலாளிக்கு 75 ரூபாய்."

"ஏன் ஐயா ஆண் தொழிலாளியை விட பெண் தொழிலாளியின் ஊதியம் குறைவாக இருக்கிறது" என நாம் வினாவ புன்சிரிப்புடன் "ஆண் தொழிலாளிகள் உப்பை கோலி பின் தலைக்கு தூக்கியும் விடுகிறார்கள். பெண் தொழிலாளிகள் அந்த உப்பை தலைச்சுமையாக சுமந்து செல்கிறார்கள். அவர்களின் வேலையின் கடினத்தன்மையை பொறுத்தே ஊதியம் தீர்மானிக்கப்படுகிறது" என பதில் தந்தார்.

"இந்த செம்மணி உப்பளம் 1934ம் ஆண்டு ஆங்கிலேயரால் அமைக்கப்பட்டது." என்ற மேலதிக தகவலும் எமக்கு அவரிடமிருந்து கிடைத்தது.

"செம்மணி தவிர வேறு எந்த இடங்களில் தற்போது உற்பத்தி நடைபெறுகிறது."

"குடாநாட்டில் வாரவத்தை, கரணவாய், புத்தூர் ஆகிய இடங்களில் உப்பு விளைவிக்கப்படுகிறது. கல்லுண்டாய் வெளியில் உற்பத்தி செய்வதாயின் முதலில் பாத்திகள் சீரமைக்கப்பட வேண்டும். அத்துடன் இயந்திர வசதியும் தேவை."

எமது கேள்விகளைப் புரிந்து கொண்டு முழு மனதுடன் பதிலளித்த நிர்வாகிக்கும் உதவியாளர்களுக்கும் நன்றிகூறி விடைபெற்றோம். தமிழீழத்தின் இயற்கை வளங்களில் ஒன்று உற்பத்தியில் ஈடுபடுத்தப் பட்டு பெறப்பட்ட சாதனையை பார்வையிட்ட திருப்தி நெஞ்சத்தில் நிறைந்திருந்தது. இனிமேலாவது தமிழீழத்தில் வளமில்லை என்பவர்கள் தமக்கு 'மூளை வளம்' இருக்கின்றதா என்பதை முதலில் அறிந்து கொள்ளவேண்டும்.

**நன்றி: ஆதாரம்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழீழ தேசிய வளம் பிரகடனம்

## 2000 ஆம் ஆண்டளவில் 2 கோடி பனைகள்

"ஆயுதம் செய்வோம்
நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம்
கல்விச்சாலைகள் வைப்போம்
ஓயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம்
பல வண்மைகள் செய்வோம்"

- பாரதியார் -

தமிழீழமெங்கும் பனைவளம் ஒரு தேசிய வளமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அனுமதியின்றி அவற்றை அழிப்பதும் தடைசெய்யப்பட்டுள்ளது. 2000ம் ஆண்டளவில் 2 கோடி பனைகளாக பனைவளத்தைப் பெருக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மக்களிடம் சரியான சிந்தனையைத் தூண்ட, மக்களை ஒன்றிணைக்க எழுச்சி கொள்ள வைக்க, நல்ல வினைதிறனைப் பெற முறையான திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன.

பனையின் பொருண்மிய ஆற்றல் மிகத் தொன்மைக் காலத்திலேயே அறியப்பட்ட ஒன்று. அவற்றை அழிப்பதை தடுக்கும் விதிகளும் அன்றைய வழக்கில் இருந்துள்ளன. முன்னைய எமது தமிழ் மன்னர்கள் தேசிய நலன்கருதி பனைகளை வீழ்த்துவதை தடை செய்திருந்தார்கள். எமது தேசிய வளமான பனையை, தமது தேசநலனுக்காக சுரண்டும் நோக்குடன் ஐரோப்பியர்கள் தடைச்சட்டங்களை விதித்திருந்தார்கள். கப்பல் கப்பல்களாக பனை படு பண்டங்களை மட்டுமல்ல பனைகளை வீழ்த்தி வளமரங்களாக, சலாகைகளாக தமது குடியாட்சி நாடுகளுக்கும், சொந்த நாட்டிற்கும் ஏற்றிச் சென்றார்கள் என்றும் அறியப்படுகிறது.

பனையினதும், ஏனைய வான் பயிர்களினதும் பொருண்மிய வளத்தை டச்சுக்காரர் நன்கு அளவிட்டிருந்தார்கள். பனை நிறைந்த ஊர்களெல்லாம் அவர்கள் காலத்தில் கேந்திர முக்கியத்துவம் பெற்றிருந்தன. சிறுநகரங்கள், பட்டினங்கள், துறைமுகங்கள் இவற்றை இணைக்கும் வீதிகள், பனைவளம் நிறைந்த ஊர்களைச் சூழ நன்கு உள்ளமைக்கப்பட்டன. பனைவளம் சிறந்த வாணிப வளமாக செழித்திருந்தது.

தொழிற்புரட்சியான நாகரிக வளர்ச்சி கிராமிய அடித்தளங்களை சிதைத்துவிட்டது. நகரத்தில் வாழுகின்ற மக்களுக்கான மலிவு விலை உணவு இறக்குமதி என்ற அரசியற் சிந்தனைகளுள் சமூக, அரசியல், பொருண்மியச் சிந்தனைகள் அள்ளுண்டு போயின. ஆனாலும் இறுக்கமாகிவிட்ட சமூக பொருண்மிய அடித்தளங்களை இவை முற்றாக அழித்துவிடவில்லை. தற்சார்பு நிலையில் தங்கியிருக்கும் கிராமத்து மக்களால் இவை பேணிப் பாதுகாக்கப்பட்டன. ஒரு கோடிக்கு மேலான பனை மரங்கள் எங்களின் தமிழீழத்தில் வைரமாக நிமிர்ந்து நிற்கின்றன. அந்த அரிய வளங்களை மேலும் பெருக்கும் நோக்கில் எழுந்துள்ள திட்டமே கற்பகச் சோலைத் திட்டமாகும். பனையின் வளத்தையும் அதன் மூலம் கிடைக்கும் பயன்களையும் அதிகரிக்கும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்படும் இந்தக் கற்பகச்சோலைத் திட்டம் அடுத்து வரும் சந்ததிகளுக்கான ஒரு நடவடிக்கை என்றால் மிகையாகாது.

பனை பல பயன்களைத் தரவல்லது. எனவே பனையின் அத்தனை பயன்களையும் உச்சமாகப் பெற திட்டமிட்ட முறையில் பனை நடுகை மேற்கொள்வது மிக அவசியமானது.

அது காரணமாக கற்பகச் சோலைத் திட்டத்தின் கீழ் பனைப் பண்ணைகள் உருவாக்கப்படுகின்றன. தேயிலைத் தோட்டங்கள், றப்பர் தோட்டங்கள், தென்னந் தோப்புகளை போல பனைப்பண்ணையும் அவசியமானது.

இவ்வாறு பனைப்பண்ணைகள் அமைவதால் பனை நடுகையானது அளவுத்திட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. இது எதிர்காலத்தில் பல நடவடிக்கைகளுக்கு பெரிதும் உதவியாக அமையும்.

இப்போது பனைகள் சில குறிப்பிட்ட தனியார் காணிகளில் மாத்திரம் இருப்பதும் அவைகூட ஒழுங்கற்ற முறையில் அமைந்திருப்பதும் பல்வேறு நெருக்கடிகளை தோற்றுவிக்கின்றன. கள்ளைப் பெற்றுக் கொள்வதற்காக பனைமரங்களைத் தேடி தொழிலாளர்கள் அலைவதும் ஒரு சில தனிப்பட்டவர்களை நம்பி இருப்பதும் பண்ணை முறைகள் மூலம் தவிர்க்கப்படும்.

ஒழுங்கான முறையில் அமைக்கப்படும் இவ்வாறான பண்ணைகள் மூலம் எதிர்காலத்தில் நவீன தொழில்நுட்பங்களைப் புகுத்தி கள்ளு, கருப்பநீர் போன்றவற்றை இறக்குவதற்கு இயந்திரங்களைப் பயன்படுத்தமுடியும்.

இவ்வாறு இயந்திர சாதனங்களைப் பயன்படுத்த பனைமரங்கள் ஒழுங்காக இருப்பது அவசியமானது. கள்ளு, கருப்பநீர் போன்றவற்றை பெற்றுக்கொள்வதற்கு இயந்திர சாதனங்களை பயன்படுத்துவதால், கருப்பநீரிலிருந்து பெறப்படும் பனஞ் சீனியை மிகக் குறைந்த விலையில் பெருமளவில் உற்பத்தி செய்வதிலும், பக்கவிளைவாகப் பெறப்படும் அற்ககோலை பெற்றுக்கொள்வதுடன் எரிபொருள் பாவனையிலும் அக்கறை செலுத்தலாம்.

தற்போது தொழிலாளர்களின் உடலுழைப்பினால் பெற்றுக்கொள்ளப்படும் கருப்பநீரில் இருந்து தயாரிக்கப்படும் பனம்சீனியின் உற்பத்திச் செலவு அதிகமாக உள்ளது என்பதை இங்கு கவனிக்கவேண்டும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

உடலை வருத்தி செய்யப்படும் உடல் உழைப்பினாலும் ஒரு சமூகத் திற்குரிய தொழில் இது என நினைப்பதாலும் வளர்ச்சி பெறாது இருக்கும் பனையோடு சம்பந்தப் பட்ட சகல தொழில்களும் இயந்திர மயமாக்கப்படுவதால் பாரிய மாற் றங்களுக்கு உள்ளாகும்.

இயந்திர மயப்படுத்தப்படும் போது யாவரும் எந்தவிதமான ஏற்றத்தாழ்வும் இல்லாமல் இத் தொழிலைச் செய்வதுடன் பெரும் வருமானத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்வாறு பல்வேறு காரணங்க ளால் இந்த கற்பகச்சோலை முக்கி யத்துவம் பெறுகிறது. விடுதலைப் புலிகளுக்கே உரித்தான தனித்துவ மான சிறப்பியல்பே அவர்களால் செய்யப்படும் எல்லா செயற்திட்டங் களும் எதிர்காலச் சந்ததிகளுக்காகச் செய்யப்படுவதுதான். அவ்வாறான திட்டங்களில் ஒன்றுதான் கற்பகச் சோலைத் திட்டமும்.

இத்திட்டத்தின் முக்கியத்துவம் கருதியே தமிழீழ பொருண்மிய மேம் பாட்டு நிறுவனம் பனை தென்னை வள அபிவிருத்தி பகுதியின் மூலம் இத்திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து பனை சார்ந்த சகல அமைப்புகளின் செயற்பாடுகளையும் இத்திட்டத்தின் பால் கரிசனை கொள்ள வைத்தது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பனை, தென்னை வள அபிவிருத்திப் பகுதியினர் 1991ஆம் ஆண்டு 15,0000 பனை விதைகளும் 1992 ஆம் ஆண்டு 157,000 பனை விதைகளும், 1993 ஆம் ஆணடு 346,000 பனை விதைகளும் நாட்டியுள்ளனர். கற்பகச்சோலைத் திட்டமூலம் 2000ம் ஆண்டளவில் பனை வளத் தொகையை 2 கோடியாக அதிகரிக்கும் முயற்சியின் முதற்கட்டமாக ஐந்து வருடங்களில் 50 லட்சம் பனைகள் நடுகை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

பனை என்றதும் நாம் பழமைக் குத் திரும்புகின்றோம் என்பதல்ல. இன்னமும் எங்களின் வாழ்வியலில் வழமையாக இருக்க வேண்டிய நுகர்வு முறை ஒன்றை நாம் இடை நடுவே நழுவவிட்டு விட்டோம். அதை அடைவதற்கான இலக்கு களை நிர்ணயிக்கின்றோம். வாழ்க் கையின் தேவைகளில் பெருமளவு நிறைவுசெய்யும் பனையின் ஆற் றலை சரியாக மதிப்பிடுகின்றோம். தடைகள் பலவற்றைத் தாண்டி இன்று இந்த மண்ணிலே பனை வளத் தொழிற்துறைகள் வளர்ச்சி கண்டு நிற்கின்றன. கூடவே அவற் றில் தங்கி வளமாக வாழும் மக்களின் எண்ணிக்கையும் வளர் கின்றது. மேலும் தொழிற்துறைகள் பெருகத் தடையின்றி மூலவளங்க ளைப் பெற பனை வளத்தை பெருக்கவே முனைகின்றோம்.

களிமண் தரையோ, கற்கள் நிறைந்த கட்டாந் தரையோ, கரை யோரத்து மணற் திட்டுகளோ எங்கும் கடும் வரட்சியை, பெரும் புயலை எதிர்கொண்டு மண்ணில் ஆழ வேரூன்றி வலைப்பின்னலிட்டு மண்ணரிப்பைத் தடுக்கும் ஆற்றல் நிறைந்த பனைகளைப் பெருக்கி குறைவின்றி மழையைப் பொழிய இந்த மண்ணின் மேல் பசுமைப் போர்வையை மேலும் விரிக்கவே முற்படுகின்றோம்.

சொந்த மண்ணின் வளங்களைப் பெருக்குவதும் மேலும் புதிய அறிவி யல் நுட்பங்களைப் பிரயோகித்து வளப்படுத்துவதும் தேசங்களெங்கும் சாதாரணமாகி விட்டதொன்று. 18ம் நூற்றாண்டில் மேலைத் தேசத்தில் தோன்றிய மறுமலர்ச்சி எங்களது திசை வழியைத் திருப்பிவிட்டது. தேசத்துக்குகந்த சரியான பொருண் மியத்தைக் கட்டியெழுப்பும் வாய்ப்பை நாம் இழந்திருந்தோம். எங்கள் மண்ணில் இன்று மறுமலர்ச் சிக்கான ஒரு புதுயுகம் தோன்றியுள் ளது. அந்தப் புத்தொளியின் பாய்ச்ச லின் சரியான கண்ணோட்டத்தில் முறையான திசையில் காலடி எடுத்து வைப்போம்; தொடர்வோம்; துணைபோவோம்; துணிச்சலுடன் கற்பகசோலை செய்வோம்.

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்**

# உற்பத்திக் குழுக்களுக்கு பயிற்சி

கிராமிய உற்பத்திக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு அறிவுத் தேடலை ஏற்படுத்தி அவர்களது கிராம மட்டச் செயற்பாடுகளை இலகுவாக முன்னெடுக்கும் முகமாக இவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் பரவலாக நடாத்தப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் வடமராட்சிப் பிரதேசத்தில் பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய இரு வட்டங்களுக்குட்பட்ட கிராமிய உற்பத்திக் குழுக்களை இணைத்த வகையில் நெல்லியடி மத்திய மகாவித்தியால யத்தில் இப்பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்றன.

120க்கு மேற்பட்ட உற்பத்திக் குழு உறுப்பினர்கள் பங்குபற்றிய இப்பயிற்சி வகுப்பில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பணியாளர்கள் ஆகியோர் இவர்களுக்கான பயிற்சிகளை வழங்கினர்.

இரு தினங்கள் முழுமையாக நடாத்தப்பட்ட இவ்வகுப்பில் பயிற்சியின் அவசியம், கிராமிய வளங்களை இனம் காணதல், உற்பத்தி முறைகளை முன்னெடுத்தல் கிராமிய வளங்களை ஒன்றிணைத்து நிறுவன ரீதியான செயற்பாடுகளை முன்னெடுத்தல், தலைமைத்துவம், கிராமிய அபிவிருத்தியில் கிராமிய நிறுவனங் களின் பங்களிப்பு, தரிசு நிலப்பயன்பாடு, அரசியல் ரீதியான செயற்பாடு போன்ற பல்வேறு தலைப்பிலான விரிவுரைகள் நடாத்தப்பட்டன.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழர் வாழ்வில் சாதிமுறை

## சுருக்க வரலாறு

பழ. நெடுமாறன்

"யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்பதே சங்க காலத் தமிழரின் சமுதாயக் கோட்பாடாகும். சங்க காலத்துத் தமிழ்ச் சமுதாய அமைப்பு முறையில் வர்ணாசிரம முறைக்கு அடியோடு இடமில்லை. மக்கட் பாகுபாடு என்பது நில இயற்கை அமைப்பையும், மக்களின் தொழில் பண்பையும் அடிப்படையாகக் கொண்டே அமைந்திருந்தது. தொல்காப்பியர் கால தமிழ்ச் சமுதாயம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் பாலை என்னும் ஐந்து நிலப்பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டே பிரிக்கப்பட்டிருந்தது. ஐந்துவகை நிலத்திலும் ஐந்துவகைத் தொழில் புரிபவர் வாழ்ந்தனர். குறிஞ்சி நிலத்தில் வாழந்தவர் குறவர் என்றும், முல்லை நிலத்தில் வாழ்ந்தவர் ஆயர் என்றும், மருத நிலத்தில் வாழ்ந்தவர் உழவர் என்றும், நெய்தல் நிலத்தவர் பரதவர் என்றும், பாலை நிலத்தவர் எயினர் அல்லது மறவர் என்றும் அழைக்கப்பட்டனர்.

நகர்ப்புறங்களில் வாழ்ந்த மக்கள் பிரிவினை பற்றிக் குறிப்பிடும்போது "அந்தணர், அரசர், வணிகர், வேளாளர்" என நான்குவகை பிரிவுகளை தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் ஆரியர்களின் வர்ணாசிரம அடிப்படையிலான பிரிவினையோடு இதை ஒப்பிடமுடியாது.

வர்ணாசிரம தர்மம் கூறும் நான்குவகைப் பிரிவும் தொல்காப்பியர் கூறும் நான்குவகைப் பிரிவும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவையாகும். ஏனென்றால் இந்த நான்கு வகைப் பிரிவு தவிர தமிழ்ச்சமுதாயத்தில் பொருநர், பாணர், கூத்தர், விறலியர், வேளாண் முதலிய பிரிவினரும் இருந்தனர்.

உழவுத் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளாளர்களை சூத்திரர் என்ற நிலைமைக்கு பண்டைய சமுதாயம் தாழ்த்தி அமைக்கவில்லை. அதைப் போலவே கடல் கடந்தும் வணிகம் செய்த வணிகர்கள் அரசனுக்குச் சமமான வாழ்வு நடத்தினர். அந்தணரும் வேளாண்மை, வணிகம் ஆகியவற்றோடு தொடர்பு கொண்டிருந்தனர்.

எனவே தொல்காப்பியம் கூறும் நான்குவகைப் பாகுபாடு என்பது வர்ணாசிரமம் கூறுகிற நான்கு வகைப் பாகுபாடுகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும்.

தொல்காப்பியர் காலச் சமுதாயத்தில் உறுதியான சாதிமுறை ஏதுமில்லை. மக்கள் பிரிவுகளிடையே உறவு, கலப்போ, திருமண கலப்போ தடை செய்யப்படவில்லை. சாதி என்னும் கொடுமை தமிழ்ச் சமுதாயத்தில் வேரூன்றவில்லை.

'ஜனித்தல்' என்னும் சமஸ்கிருத சொல்லின் அடிப்படையில் பிறந்ததே 'ஜாதி' என்னும் சொல்லாகும். இச்சொல் தமிழில் கிடையாது. தொல்காப்பியர் கூறும் சாதி என்னும் சொல் பல்வேறு வகையான மரம், செடி, கொடி முதலியவற்றை வேறுபடுத்திக் காட்டவே பயன்படுத்தப்பட்டுள்ளது. மனிதர்களை வேறுபடுத்திக் காட்ட அவர் ஒருபோதும் அந்தச் சொல்லை பயன்படுத்தவில்லை.

சாதிமுறை சங்ககால இறுதியில் வலிமைபெற்றுள்ளது. தொழில் பிரிவுகள் சாதிப்பிரிவுகளாக மாறிவிட்டன. தமிழ்ச் சமுதாயத்தில் தொழிலின் அடிப்படையில் சாதி உருவானதேயன்றி பிறப்பின் அடிப்படையில் உருவாகவில்லை. தீண்டாமை என்பது சங்க காலச் சமுதாயத்தில் அறவே இல்லை.

**பல்லவர் காலம்:**

பல்லவர் காலத்தின் தொடக்கத்தில் தமிழர் சமுதாய அமைப்பில் பல குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. வர்ணாசிரம முறையிலான நான்கு சாதிப் பிரிவுகளும் முதன்முறையாகக் காணப்படுகின்றன. இதற்கான பல்வேறு கல்வெட்டுச் சான்றுகளும் உள்ளன. பல்லவர் சத்திரிய குலத்தவர் என்றும், பிராமணர்களுக்கு பரிசிலாக வழங்கப்பட்ட பிரும்மதேசங்கள் பற்றியும், சூத்திரர், பஞ்சமர் பற்றியும் குறிப்புகள் பல்லவர் காலக் கல்வெட்டுக்களிலும் இலக்கியங்களிலும் உள்ளன.

சோழர் காலம்: சோழர் காலச் சமுதாய முறையிலும் இது தொடர்ந்தது. மக்கள் ஆசாரப்படி வாழ்ந்தனர். சாதி வழிமுறைச் செயலாக்குகிற பணியினை பல்லவர்களும் அவர்களுக்குப் பின்னர் பிற்காலச் சோழர்களும் அதற்குப் பின் பாண்டியர்களும் அரசுகளின் உயிர்த்துடிப்பாக மேற்கொண்டனர்.

"அமைவில்லா மனு ஒழுக்கம் ஆதியாம்படி நிற்க" என்ற இரண்டாம் இராஜராஜ சோழன் மெய்க்கீர்த்தி சொல்கிறது. அதாவது மனுசாத்திரப்படி தங்கள் அரசியல் வாழ்வை சோழர்கள் வகுத்துக் கொண்டார்கள் என்று இதன்மூலம் விளங்குகிறது. மனுசாஸ்திரம் விதித்தபடி சாதிகள் அமைந்த சமுதாயம் இலட்சிய வாழ்வாக ஆனபிறகு அதற்குரிய பொருளாதாரப் பிடிப்புகளை சோழ மன்னர்கள் ஏற்படுத்தினர். இதன் விளைவாக தமிழகத்தில் சாதி வேறுபாடுகள் வேரூன்றின. சாதிவிட்டு சாதி மணஉறவுகள் ஏற்பட்டபோது உண்டான பிழைகளை ஒழுங்குபடுத்த அனுலோமா, பிரதிலோமா என்னும் வாழ்முறை பகுப்புகளும் உருவாக்கப்பட்டன. சோழமன்னர்கள் காலத்தில் பல்வேறு சாதியினருக்கு பல்வேறு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வகையான சலுகைகளை வழங்கினார்கள். உதாரணமாக காலில் செருப்பு அணிந்து நடமாடுவதற்குக்கூட அரசரிடம் அனுமதி பெற வேண்டும். அவ்வாறு அனுமதி பெற்ற சாதியினர் மட்டுமே செருப் பணியமுடிந்தது. சாதிகளுக்குக் கற்பிக்கப்பட்டிருந்த உயர்வு தாழ்வு அடிப்படையில் சலுகைகளைச் சோழ அரசர்கள் குறிப்பிட்ட மக்களுக்குத்தான் வழங்கினார்கள். பிறந்த இடத்தைவிட்டும் பிறந்த சாதியை விட்டும் அந்தந்த சாதியினர் அகல முடியாதபடி சமூக நியதிகளும் பொருளாதார நிர்ப்பந்தங்களும் சோழர் காலத்தில் நிலவின.

சோழரின் சமூக வாழ்வில் சாதிமுறைக்கு ஏற்பட்ட கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து வலங்கை, இடங்கை பிரிவுகள் சாதிகளுக்கு ஏற்பட்டன. இப்பாகுபாடுகள் சைவ, வைணவ அடிப்படையில் ஏற்பட்டன என்றும், உழுதொழில் வேளாண்மையினர், கைவினைஞர் ஆகியோரிடையே ஏற்பட்ட வேறுபாடுகள் என்றும் இரு கருத்துக்கள் உள்ளன.

## பாண்டியர் காலம்:

பாண்டியர் காலச் சமுதாயம் பல்லவர், சோழர் காலத்தில் நிலவிய அமைப்பு வடிவம், செயல் ஆகியவற்றிலிருந்து குறிப்பிடத்தக்க மாறுதல் எதையும் பெறவில்லை. பிற்கால பாண்டியர் ஆட்சி தொடங்கிய காலத்துத் தமிழ்ச் சமுதாயம் ஒரு மாறுபாட்டினை காட்டுகிறது. சமுதாயத்தின் அன்றாட சூழல்களில் சாதி முககியமானது. தங்களுக்குரிய பகுதிகளில் பல்வேறு சாதியினரும் வாழ்ந்துவந்தனர். சமூகச் சலுகைகளுக்காக சாதிகள் ஒன்றுக்கொன்று போராடி வந்தன. தீண்டாமையைத் தவிர்த்துக் கொள்வதற்காக, வலங்கை, இடங்கைப் பிரிவுகள் ஓயாமல் போராடி வந்தன. தீண்டத் தகாதவன் சமுதாயத்தின் சாபக்கேடாக மதிக்கப்பட்டான். நாயன்மார்கள், ஆழ்வார்கள் போன்ற சமயச் சான்றோர்கள் தீண்டாமைக்கு எதிராக எவ்வளவோ பிரச்சாரம் செய்தும்கூட அதை மாற்றமுடியவில்லை.

## நாயக்க மன்னர்கள்:

தமிழகத்தில் விஜயநகராட்சி வழிவந்த நாயக்க மன்னர்கள் ஆட்சி மக்கள் தொகையில் ஒரு புதிய பகுதியைச் சேர்த்தது. தெலுங்கு பேசும் மக்கள் தமிழகத்தில் குடியேறினார்கள். இவர்கள் கடைப்பிடித்த சாதிப் பிரிவுகளும் தமிழகத்தில் நுழைந்தன. நாயக்க மன்னர்கள் காலத்தில் சாதி ஏற்றத் தாழ்வுகள் மிகக் கடுமையான முறையில் கடைப்பிடிக்கப்பட்டன. வலங்கை, இடங்கை சாதியினரிடம் ஒருவகை வரியும் வசூலிக்கப்பட்டது. இதைப் போலவே, கருமான், தச்சன் போன்ற பல்வேறு சாதியினருக்கும் தொழில்வரி விதிக்கப்பட்டது. சாதி முறைக்கு எதிராக யாரும் எதுவும் செய்யமுடியாதபடி கடுமையான கட்டுப்பாடுகள் இருந்தன. ஒரு சாதியில் இருந்த பிரிவுகளுக்குள்ளே கூட ஒன்று மற்றொன்றோடு உறவு கொள்ள அனுமதிக்கப்படவில்லை.

**தமிழ்ச் சமுதாயத்தில் தொழிலின் அடிப்படையில் சாதி உருவானதேயன்றி பிறப்பின் அடிப்படையில் உருவாகவில்லை. தீண்டாமை என்பது சங்க காலச் சமுதாயத்தில் அறவே இல்லை.**

## சாதி ஒழிப்பு இயக்கம்:

ஆங்கிலேயர் ஆட்சியிலும் சாதிப் பாகுபாடுகள் தொடர்ந்து வளர்ந்தன. ஆனால் அவர்கள் அதில் தலையிடவில்லை.

சாதிப்பாகுபாடு எதிர்ப்பு இயக்கமும் தமிழகத்தில் உருவாயிற்று.

"சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்; கோத்திரமும் கோலமும் கொண்டு என் செய்வீர்" என இராமலிங்க வள்ளலார் சாதிக் கொடுமைகளுக்கு எதிராகப் போர் தொடுத்தார்.

"வள்ளுவர் செய் திருக்குறளை மறுவது நன்குணர்ந்தவர்கள் உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்திற்கொரு நீதி" என்று பேராசிரியர் சுந்தரனார் சாதியை எதிர்த்துக் குரல் கொடுத்தார்.

"சாதிகள் இல்லையடி பாப்பா" என்று பாடி சாதிக்கொடுமையை எதிர்த்துப் போராடினான் பாரதி.

"இருட்டறையில் உள்ளதடா உலகம் - சாதி இருக்கின்றது என்பவனும் இருக்கின்றானே" என்று பாடினார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இப்படிப் பலரும் சாதியை எதிர்த்துக் குரல் கொடுத்தார்கள். அந்தக் குரல்களுக்கு செயல்வடிவம் கொடுத்தவர் பெரியார் இராமசாமி அவர்கள். தமிழகத்தின் சமுதாயத் துறையிலும் அரசியல் துறையிலும் உயர்ந்த சாதி என்று தங்களைக் கூறிக்கொண்டோரின் ஆதிக்கத்தை எதிர்த்து முறியடிக்க பெரியார் தொடங்கிய சமூக சீர்திருத்த இயக்கம் தமிழகத்தில் புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது.

பல நூற்றாண்டு காலமாக பிற்படுத்தப்பட்டு அறியாமையிலும் வறுமையிலும் மூழ்கி நசிந்துபோன மக்களுக்கு நம்பிக்கை ஒளியாகத் திகழ்ந்தார் பெரியார். அவரின் தன்னலம் கருதாத தொண்டு தமிழக மக்களை விழிப்படையச் செய்தது. சாதித் தளையில் கட்டுண்டு கிடந்த மக்கள் வீறுகொண்டெழுந்தனர். பிற்பட்ட மக்கள், புதிய எழுச்சிபெற்றுத் தங்கள் உரிமைகளுக்காகப் போராடத் தொடங்கினார்கள்.

பெரியாரின் இந்தப் பெரும் தொண்டு தமிழ்ச் சமுதாயத்தில் இதுவரை யாரும் ஆற்றாத தொண்டாகும். அவர் தோன்றியிருக்காவிட்டால் இந்தச் சமுதாயத்திற்கு விடிவுகாலம் வந்திருக்காது. சாதி முறைகளுக்கு எதிராக அவர் தொடங்கிய போராட்டம் இன்னமும் தொடர்கிறது. பண்டைய தமிழகத்தில் சாதியே இல்லாமல் இருந்த சமுதாயம் போல புதிய தமிழகத்திலும் சாதிகளற்ற சமுதாயம் அமையும் வரை பெரியாரின் உணர்வுகள் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டுதான் இருக்கும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் புனர்வாழ்வு நிறுவனம்

தமிழீழத்தின் மீதான சிறிலங்கா அரசின் தொடர்ச்சியான யுத்த நடவடிக்கை எமது இனத்தின் தேசிய எழுச்சியை வேரோடு பிடுங்கி எறிய முற்படுவது இன்று உலகம் கண்டறிந்த விடயம். ஆனால், இந்த யுத்தத் திணிப்புக்கு அடிபணியாது எமது தமிழீழ மக்கள் தமிழீழ தேசிய விடுதலையை நோக்கிய முனைப் போடு நடைபோடுவதை நாம் பார்க் கின்றோம். எனினும் மேலும் வெற்றி களைக் குவிப்பதுவே எமது தேசிய விடுதலைப் போராட்ட இலக்கை நாம் அடைந்துகொள்ள வழிவகுக்கும்.

பெரிய அளவில் இன அழிவை ஏற்படுத்துவதும், தமிழர் நிலத்தைப் பறித்தெடுப்பதும், தமிழரின் சொத் துக்கள், வளங்களை அழிப்பதும், தமிழ் மக்களின் வாழ்க்கை நடப்பின் இயல்பு நிலையை இழுத்து நிறுத்து வதும், எதிரியினுடைய பிரதான செயற்பாடாகவுள்ளது. இதனூடாக பஞ்சம், பசி, பட்டினி, வேலை யின்மை, விரக்தி, ஒழுக்கக்கேடு மலிந்த சீர்கேடான மிக இழிவான சமுதாயப் பண்பை எம்மத்தியில் தோற்றுவிப்பது எதிரியின் நோக்கமாக உள்ளது.

இத்தகைய பாரதூரமான பின் விளைவுகளை களையவேண்டுமாயின் பாதிப்புக்களை இனங்கண்டு, அவற் றுக்கான புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்வது எமது போராட்டப் பணியோடு இணைந்துவிட்ட பணி யொன்றாகும். காலத்தின் தவிர்க்க முடியாத தேவையாகிவிட்ட இப் பணிக்கு ஒவ்வொரு சமுதாயமும் முழுமனதோடு ஒத்துழைக்கவேண்டி யதும் அவசியமாகும். இந்த வகையில் எமது இனத்தின் மீட்சிக்கான தூர நோக்கோடு எமது தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் 1990 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் நிறுவி வைத்ததே விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் இப் புனர்வாழ்வு நிறுவனமாகும்.

உழைப்பாளர்களை இழந்த தாயா னவள் தனித்து நின்று தாங்கிச் செல்லும் குடும்பங்களுக்கு புனர்வாழ் வுப்பணி செய்து, இக்குடும்பங்களை சமுதாய மேம்பாட்டோடு இணைத்து விடுவது இதன் தலையாய பணியாக உள்ளது. மேலும் சமுதாய, குடும்ப அழுத்தங்களால் ஒடுக்கப்படுபவர்க ளுக்கும், அநாதரவான பெண்கள், சிறுமியர்களுக்கும் மத்தியிலும் தனது பணியை விரிவுபடுத்தியுள்ளது.



## தாய்மார்களின் தலையில் இரட்டைச் சுமை

சாதாரண குடும்பம் என்று கூறும் பொழுது, தாயும் இருப்பார், தந்தையு மிருப்பார். குடும்பத்தின் சுமையை இருவரும் சேர்ந்து தாங்கிக்கொள் கிறார்கள் அல்லது ஏதோ ஒரு வகை யில் சுமையைப் பகிர்ந்துகொள்கி றார்கள். ஆனால் சிறீலங்காவின் இராணுவ நடவடிக்கையால் பெரும் எண்ணிக்கையிலான குடும்பங்கள் தமது கணவனை அல்லது தந்தையை அல்லது சகோதரனை இழந்துள்ளன. இந்த நிலையில் தாயானவள் தந்தை தாங்கிய அல்லது மகன் தாங்கிய சுமையைச் சேர்த்து தன் தலையில் சுமக்கவேண்டியுள்ளது.

## சிறீலங்காவின் கடல்வலயப் பாதுகாப்புச் சட்டமும் இராணுவ நடவடிக்கைகளும் ஏற்படுத்திய சுமைகள்

சிறீலங்காவின் கடல்வலயப் பாது காப்புச் சட்டம் நடைமுறையிலுள்ள கடந்த பத்து ஆண்டுகளாக கரை யோர மீனவக் குடும்பங்களில் 90% ஆனவர்கள் தமது தொழிலினை இழந்துள்ளனர். வருமானத்தை இழந்து வறுமையில் வாடுகின்றனர். தொழி லுக்குச் சென்ற ஆயிரக்கணக்கான வர்கள் அன்றாடம் கடல்மீது கொல் லப்பட்டுள்ளனர். இந்த மீனவர்களில் உடமையான வலை, வள்ளம் என்பன பறித்து எரிக்கப்பட்டுள்ளன. அல்லது கடலுக்குள் மூழ்கடிக்கப்பட்டுள்ளன. பெறுமதி மிக்க தொழில் சாதனங் களையும் இழந்து மேற்கொண்டு எதுவும் செய்யமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

## இராணுவ விரிவாக்க விதம்

எமது தாயகத்தின் மீதான முற்று கையைப் பலப்படுத்தும் நோக்கில் இராணுவத் தளங்கள் விரிவுபடுத்தப் பட்டு வருகின்றன. எமது மக்களின் வசிப்பிடங்கள் இராணுவத்தினுடைய பிடிக்குள் சென்றுவிடுகின்றன. மக்கள் தமது சொத்துச் சுகங்களை இழந்து இடம்பெயர்கின்றனர். எதிரியினுடைய

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

எறிகணை வீச்சு, துப்பாக்கி வேட்டு ஆயிரக்கணக்கானவர்களின் உயிரைக் குடித்துவிட்டது. வீட்டை இழந்தனர், தொழிலை இழந்தனர், உயிரைப் பிரிந்தனர். இப்படியாக, எத்தனையோ



சிரமங்களில் காலாதிகாலமான, உயிர்த்துடிப்பான, அதற்கேயுரிய தனித்துவமான வரலாற்று இயக்கம் தடைப்பட்டுவிட்டது. திட்டமிட்டு அழிக்கப்பட்டது. இப்பொழுது அந்த மக்கள் வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் இடம்பெயர்ந்தோர் தங்ககங்களில் முடங்கிப்போயுள்ளனர்.

மேலும் நாளாந்த எறிகணை வீச்சு, விமானக் குண்டுவீச்சு, சுற்றிவளைப்புகள், பெயர்சூட்டப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் உட்பட எதிரியின் நடவடிக்கை இன்று எமது தாயகத்தில் அண்ணளவாக இருபத்தையாயிரம் இளைஞர்களை, குடும்பத் தலைவர்களை அழித்துள்ளது. இவற்றில் குறைந்தது பதினையாயிரம் குடும்பங்கள் மிகவும் வறுமையில் வாடுவதாகக் கணிக்கமுடியும். இக்குடும்பங்களுக்குரிய புனர்வாழ்வு வேலைகள் மிக அவசியமான இன்றைய பணியாகவுள்ளது. இந்நிலையில் புனர்வாழ்வு நிறுவனம் தனது பணிகளை பின்வரும் கைத்தொழில் நிலையங்கள் அமைத்தல், காப்பகங்கள் அமைத்தல், வீடுகளைப் புனரமைத்துக் கொடுத்தல், மாணவர்களுக்கான பாடசாலைப் பொருட்கள் வழங்குதல், உள ஆற்றுப்படுத்தல், நிவாரணமளித்தல் போன்றவற்றைச் செய்துவருகின்றன.

## கைத்தொழில் நிலையங்கள்

உழைப்பாளரை இழந்த குடும்பங்கள் வறுமையிலிருந்து விடுபட வேண்டுமாயின் அக்குடும்ப அங்கத்தவர் தொழில் வாய்ப்பினைப் பெற்று வருமானத்தை ஈட்டவேண்டும். வருமானம் ஈட்டும் வீட்டுத் தோட்டம், விலங்கு வேளாண்மை என்பவற்றில் ஈடுபட வசதியுள்ளவர்கள் அவற்றிலீடுபடவேண்டும்.

சிறீலங்கா கடற்படை நடவடிக்கைகளுக்கு இலக்கான பகுதிகள் முதலில் எமது தேர்வுக்குரிய இடங்களாக இருந்தன. கோட்டை, மண்டைதீவு அண்மித்த பகுதிகளான கரையோரப் பகுதிகளான பூம்புகார், பாசையூர், குருநகர், நாவாந்துறை, கொட்டடி, வசந்தபுரம் அடங்கலான இடத்தில் எமது ஐந்து கைத்தொழில் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவை தும்புத் தொழிற்சாலை, அப்பள உற்பத்தித் தொழிற்சாலை, சிற்றுண்டிப் பொருட்கள் உற்பத்திச் சாலைகளாகவுள்ளன. ஒவ்வொரு தொழில் நிலையங்களிலும் 20 - 25 பெண்கள் தொழில் செய்கின்றனர். உயர் தொழிற்திறனும் முழு ஆர்வமும் கொண்ட பெண்கள் மாதாந்தம் 1500 - 2000 ரூபா வரை ஊதியம் பெறுகின்றனர். இது அவர்களது குடும்பத்திற்குத் தேவையான வருமானத்தின் ஒரு பகுதியை ஈடுசெய்கின்றது. இதே போன்று நெல்லியடிப் பகுதியில் ஆடை தயாரிப்பு நிலையமும் மானிப்பாயில் காகித உற்பத்தி நிலையமும் அமைக்கப்பட்டுள்ளன. மேற்படி கைவேலைகள் உட்பட கிடுகு பின்னுதல், பனையோலைப் பொருட்கள்

## சுயதொழில் கடன் திட்டத்தின் மூலம் 1593 குடும்பங்கள் பயனடைந்துள்ளன

1993ம் ஆண்டு நடுப்பகுதியிலிருந்து இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் வரை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சுயதொழில் கடன் திட்டத்தின் மூலம் 1593 குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களை மேம்படுத்துவதுடன் சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாகவும் வட தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளிலும் இக்கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

நெற்செய்கை, உருளைக்கிழங்கு செய்கை, மட்பாண்ட உற்பத்தி, கோழி வளர்ப்பு, கடற்றொழில், கைத்தொழில் போன்ற பல்வேறுபட்ட தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்பட்டு வரும் இக்கடன்கள் மீள அறவிடப்பட்டு தொடர்ந்தும் பல பயனாளிகளுக்கு வழங்கப்பட்டும் வருகின்றன.

இச் செயற்திட்டத்தில் இதுவரை மொத்தமாக ஒரு கோடி முப்பது லட்சம் ரூபாவுக்கு மேல் கடன்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பின்னுதல் என்பனவும் செய்யப்படு கின்றன.

யாழ். குடா, வன்னி, மன்னார் உட்பட மேற்படி கைவேலைகள் செய்யும் கைத்தொழில் நிலையங்கள் பதினான்கு எமது நிறுவனத்தினால் நிறுவப்பட்டுள்ளன. இவ் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற் கென மூன்று விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்படி தொழில் நிலையங்கள், விற்பனை நிலையங்களை முகாமை செய்வதற்கென படித்த இளம் பெண் கள் அமர்த்தப்பட்டு பயிற்றுவிக்கப் பட்டு வருகின்றனர். எதிர்காலத்தில் இவர்களது முகாமைத் திறன்வளர் கின்ற பொழுது நிறுவனத்தின் திட் டங்கள் வளர்ச்சியடைய உதவும். கணவனைப் பிரிந்த குடும்பப் பெண் கள் மிகவும் இவ் வேலைத்திட்டங் களில் தொழில் வாய்ப்பைப் பெற்று வருகின்றனர்.

## சமூக நலக் காப்பகங்கள்

ஆதரவற்ற இளம்பெண்கள், குடும் பத் தலைவரின் வன்முறை தாங்கமுடி யாது பாதுகாப்புத் தேடிவரும் குடும் பங்கள், குடும்ப அழுத்தத்திற்கும், குடும்ப வன்முறைக்கும் ஆளான திரு மணமாகாத தாய்மார்கள் ஆகியோ ருக்குக் காப்பளிக்கும் நிலையங்களாக இவை உள்ளன. குடாநாட்டில் ஐந்து காப்பகங்கள் இவர்களுக்காக புனர் வாழ்வு நிறுவனத்தினால் அமைக்கப் பட்டுள்ளன. கிளிநொச்சியிலும் மேலும் ஒரு காப்பகம் உள்ளது. ஒவ் வொரு காப்பகத்திலும் குழந்தைகள், சிறுவர்கள், இளம்பெண்கள், தாய் மார்கள் உட்பட இருபது பேர்கள் உள்ளனர்.

## வேலையாட் சிறார்கள்

இங்கேயுள்ள இளம் பெண்கள் பலரும் வேலையாட் சிறார்களாக வீடுகளில் அமர்த்தப்பட்டிருந்தவர்கள். இவர்களின் சொந்த இடங்கள் தென் னிலங்கையிலுள்ள ஊர்களாகவுள்ளன. இவர்கள் தமது சிறுவயதிலேயே தாய் தந்தையரை விட்டுப் பிரிந்துள்ளனர். பலருக்கு தாய், தந்தையரின் முகங்கள் கூட ஞாபகமில்லை. பெரும் பணக் காரக் குடும்பங்களின் வீட்டு வேலை யாட்களாக அமர்த்தப்பட்டு, சிறு வயதிலிருந்தே கடுமையாக வேலை வாங்கப்பட்டுள்ளனர். போசாக்கான உணவளிக்கப்படாமல் இருந்துள்ளனர். பட்டினி போட்டு வதைக்கப்பட்டுள் ளனர். பாடசாலைக்கு இவர்கள் அனுப்பப்படவில்லை. வீட்டிலும் இவர்கள் கற்பிக்கப்படவில்லை. நெருப் பில் காய்ச்சப்பட்ட அகப்பை அல் லது கம்பிகளால் காயப்படுத்தப்பட் டுள்ளனர். சுமக்கமுடியாத வேலைப் பளுவை கூலியின்றிச் சுமந்தனர். கேட்க யாருமற்ற நிலையில் இச் சிறார்கள் அவ் வீடுகளில் பாலியல் கொடுமைக்கும் ஆளாகினார்கள் என்பது தேச நலன் விரும்பும் எவரின் மனதையும் கசக்கிப் பிழியும் விடய மாகும்.

## கணவனை விட்டுப்பிரிந்து வந்த குடும்பங்கள்

பொறுப்புணர்வற்ற குடும்பத் தலைவர்கள் மனைவியையும் பிள்ளை களையும் அடித்து உதைக்கின்றனர். பல சந்தர்ப்பங்களிலும் குடி போதை யில் வந்து நிதானமிழந்த நிலையில் மனைவியருக்கும் பிள்ளைகளுக்கும் பல கொடுமைகளைச் செய்கின்றனர். பொறுக்கமுடியாத கட்டத்தில் மனை வியர் பிள்ளைகளுடன் வீட்டைவிட்டு வெளியேறுகின்றனர்.

இவர்களில் சில தாய்மார்கள் சமுதாய நிந்தனைகளை எதிர்த்து துணிவோடு வாழ முயற்சித்தாலும் அவர்களுடைய குடும்பம் அவர்க ளுக்கு ஆதரவளிப்பதில்லை. இப் பெண்கள், குடும்பத்தின் வன்முறைக் காளாகின்றார்கள். குடும்பத்தின் வஞ்சனைக்கும் ஆளாகின்றார்கள். இந்நிலையில் மனமுடைந்து அந்தக் குடும்பத்திலோ, சமுதாயத்திலோ வாழமுடியாத நிலையில் இவர்கள் கர்ப்பிணியாகவோ, கைக்குழந்தையு டனோ வீட்டைவிட்டு வெளியேறு கின்றனர். ஆனால் அடுத்து என்ன செய்வது என்று அறியாமல் விழிக்கின் றார்கள். திசை தெரியாது தத்தளிக் கிறார்கள். இந்த நிலையில் அக் கர்ப்பிணித் தாய்க்கோ, குழந்தை பெற்ற தாய்க்கோ ஒரு சொந்த வீடு போல காப்பகம் தனது உதவியைச் செய்யவேண்டியுள்ளது. இவர்களின் குழந்தைகளும் இங்கே தான் பராமரிக் கப்படுகிறார்கள்.

## தொழில் தெரிவும் தொழில் பயிற்சியும்

அரச இராணுவ ஒடுக்குமுறைகளி னாலும் சரி, சமூக இன்னல்களினா லும் சரி பாதிப்புக்குள்ளான குடும்பங் களில் பெண்கள் பெரும்பாலும் உள நெருக்கடிக்கு ஆளானவர்களாகவும், விரக்திக்குள்ளானவர்களாகவும் உள்ளது பலராலும் விளங்கிக்கொள்ள முடியும். தமக்கு ஏற்பட்ட அதிர்ச்சியி லிருந்து இலகுவில் மீளமுடியாதுள் ளதை உய்துணரமுடியும். இந்நிலையில் இவர்களுக்குரிய உள ஆற்றுப்படுத்தல், குடும்பத்தை வறுமையின் பிடியிலி ருந்து தளர்த்துவதற்கான நிவாரணம் என்பன வழங்கப்பட்டாலோ இவர் கள் தொழில் தெரிவுக்கும் தொழிற் பயிற்சிக்கும் தயாராக முடியும். எமது நிறுவனத்தின் தொழில் நிலையங்களில் தொழில் வாய்ப்புப் பெற்றுள்ள பலரும் இந்நிலைகளைக் கடந்து வந்தவர்களே.

## விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்புக்கள்

**நம் மண்ணில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு நோக்கி நகர வேண்டும் என்பதே உணவு உற்பத்திக்குக் கொடுக்கப்படும் ஊக்கமாகும். இந்த நோக்கை இலக்காகக் கொண்டு நிலத்தை உழுது பண்படுத்தி, உணவு உற்பத்தி செய்யும் விவசாயிகள் செயற்பட வேண்டியது அவசியமாகிறது.**

**உணவு உற்பத்தியில் பெரும் பங்கு வகிக்கும் முல்லை மாவட்டத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்புக்களை ஏற்பாடு செய்து நடத்தி வருகின்றது.**

**இப் பயிற்சி நெறியில் மண்ணின் பயன்பாடு, நவீன செய்கை முறைகள், நவீன விதைகள் பாவனை, சுழற்சி முறைப் பயிர்ச்செய்கை, விவசாய பொருட்களின் உற்பத்திச் செலவை குறைத்தல், உற்பத்தியைப் பெருக்குவதற்கான வழி முறைகள் போன்ற பாடத்திட்டங்கள் அடங்கி உள்ளன.**

**இந்தப் பயிற்சி வகுப்புக்களை விவசாயப் போதனாசிரியர்கள் நடாத்தி வருகின்றனர்.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இவர்களுக்கெனத் தொழிலைத் தேர்வுசெய்கின்ற பொழுது அவர்களது முன்னைய தொழில் அனுபவம், பெற்றுக்கொண்ட தொழிற்பயிற்சி, தொழில் விருப்பு, தொழில் ஆற்றல் என்பவற்றைக் கருத்தில் கொண்டு செயற்படவேண்டியுள்ளது.

இவ்வகையில் நோக்கின் இவர்கள் பெற்றுள்ள கல்வி சிறுவயதில் பெற்றுக்கொண்ட ஆரம்பக்கல்வி மட்டுமே. சிலர் அதையும் பெற்றிருக்கவில்லை. இதனால் இவர்களுக்கு பாரம்பரிய முறையிலான தொழில்களையும் இலகுவாகப் பயின்று கொள்ளக்கூடிய தொழில்களையும் குறைந்த உடல் வலுவைப் பயன்படுத்துகின்ற தொழில்களையும் தெரிவுசெய்யவேண்டியுள்ளது.

இவ்வடிப்படையில் இப் பெண்களுக்கான கைத்தொழில் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக் கைத்தொழிற் நிலையங்களே புதிய பயனாளிகளுக்கு பயிற்சியை வழங்குகின்ற பயிற்சி நிலையங்களாகவும் செயற்படுகின்றன.

## வளர்ச்சிப் படியில் தும்பு ஆலை

எமது நிறுவனத்தினரால் அமைக்கப்பட்டுள்ள தும்பு ஆலை கிளிநொச்சி மாவட்டத்தில் வள்ளிபுனம் பகுதியில் உள்ளது. இங்கே தென்னந் தும்பு உற்பத்தி இயந்திரமயமாக்கப்பட்டுள்ளது. இந்த இயந்திரப் பொறிகளில் வேலைசெய்வதற்குப் பத்துப் பெண்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். இங்கு உற்பத்தியாக்கப்படும் தும்பினை மூலப் பொருளாகக் கொண்டு நூறு பெண்கள் வேலை வாய்ப்பினைப் பெற முடியும். சென்ற ஆண்டில் இருபது பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் எண்பது பெண்களுக்கு இவ்வாண்டில் வேலை வழங்கப்பட்டுள்ளது.

## காகிதத் தொழிற்சாலை

பழைய காகிதங்களிலிருந்து புதிய காகிதம் தயாரித்தல், காகிதப் பொருட்கள் தயாரித்தலுக்குரிய ஆய்வுகளும் பயிற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றை உற்பத்தி செய்வதற்கான காகிதக்கூழ் உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வியந்திரம் காகித உற்பத்தித்திறனை அதிகரித்துள்ளதால், இக்கைத்தொழிலில் ஏற்கனவே ஈடுபட்டுள்ள பதினைந்து பெண்களைவிட மேலும் இருபத்தைந்து பெண்களுக்கு வேலை வாய்ப்பை வழங்க இத்தொழிற்சாலையால் முடியும்.

## விவசாய விரிவாக்கம்

தற்சமயம் இருபத்தைந்து ஏக்கர் நிலத்தில் நெற்பயிர்ச்செய்கையும் பத்து ஏக்கர் நிலத்தில் வேறு தானியச் செய்கைகளும் எமது நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வாண்டில் மேலும் ஐம்பது ஏக்கர் நிலத்தில் விவசாய நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் பொழுது பெண்கள் வேலைவாய்ப்புப் பெறமுடியும்.

## எல்லோரும் சேர்ந்து உயர்த்துவோம்

அண்ணளவாக இருநூறு தொழில் வாய்ப்பினைப் பெற்றுள்ளனர். நூறுக்கு மேற்பட்டவர்கள் காப்பகங்களில் காப்பளிக்கப்பட்டுள்ளனர். ஐம்பதுக்கு மேற்பட்டவர்கள் தொழில், தொழிற் பயிற்சியையும், தொழில் அனுபவத்தையும் பெற்று வெளியேறியுள்ளனர். ஐம்பதுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு வீடு புனரமைத்தல், அல்லது மாணவர்களது கல்விப் பொருட்கள் வழங்குதல் நிவாரணம் என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த வகையில் கடந்த நான்காண்டுகளில் நானூறுக்கு மேற்பட்ட குடும்பங்கள் புனர்வாழ்வு நிறுவனத்தின் உதவியையும் சேவையையும் பெற்றுள்ளனர். எமது கைத்தொழில் நிலையங்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தும் அமைப்பை மேம்படுத்துவதனூடாக இவ்வாண்டில் மேலும் ஐந்நூறு குடும்பங்களுக்கு உதவி மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது. எமது தேசத்தின் மேம்பாட்டோடு அடிமட்டக் குடும்பங்களை குறிப்பாக உழைப்பாளர்களை இழந்த குடும்பங்களை இணைக்கும் பணியாக எமது நிறுவனத்தின் நடவடிக்கை அமைந்துள்ளது. இனப்பற்றும் தேசாபிமானமுள்ள மக்கள் தம்மிடமுள்ள நிதி வளத்தையோ, பொருள் வளத்தையோ தமது சேவையையோ இத்திட்டத்துக்கு வழங்கும் பொழுது ஆயிரக்கணக்கில் உழைப்பாளர்களை இழந்த குடும்பங்கள் முன்னேற முடியும்.

- சுடரவள்

## கல்லோவியம்

ஓவியம் ஆகி நின்றாய்
தோழா,
உன்னதமான குன்றாய்.
நின்றாய்
ஓவியம் ஆகி நின்றாய்

நீ விழுந்தாலும்
எங்கள்
நெஞ்சில் இருப்பாய்.
நீங்கா நினைவாகி
நேயம் சுரப்பாய்
ஓவியமாய்
எங்கள் உள்ளத்தில் நின்றாய்
உணர்வுக் கதிர் வீசி
உலகத்தை வென்றாய்
ஓவியம் ஆகி நின்றாய்
தீவிரமாக நீ
சீறி எழுந்தாய்
திக்குகள் தோறும்
ஓர் தீயின் பிழம்பாய்
சாவையும் கூட ஓர்
புல் என்று கொண்டாய்
தாய் நிலம் வென்றிடும் .
வென்றிடும் என்றாய்
ஓவியம் ஆகி நின்றாய்
கை கட்டி வாய் பொத்திக்
காலில் விழுந்தும்
கண்கட்டு வித்தையில்
ஞானம் இழந்தும்
பொய்பட்ட மூடரைக்
காறி உமிழ்ந்தாய்
புனிதப் பணிக்கென
உன் ஆவியும் தந்தாய்
ஓவியம் ஆகி நின்றாய்
கோபுரம் ஆகி
ஒரு
கோட்டையும் ஆனாய்
குள்ள மதியோர் அஞ்சும்
சாட்டையும் ஆனாய்
ஞாபக நாயகன் நீ
நட்ட கல் ஆனாய்
நட்ட கல் ஆகி
அன்புப்
பெட்டகம் ஆனாய்
ஓவியம் ஆகி நின்றாய்.

- முருகையன்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# மண்ணைத் தின்றுதான் வாழவேண்டு



அந்நியர் மட்டுமல்ல எம்மவர் பலரும் எண்ணுவதும் இப்படித்தான். போர், மனித அழிப்புக்கள், கடலில் கால்வைக்கத் தடைகள், வயலில் விதை தூவிய விவசாயியும், கடலில் வலை வீசிய மீனவனும் குதறப்பட்ட நிகழ்வுகள்; இவையாவும் ஒரு தசாப்தத்திற்கு மேலாக எம் வாழ்வின் அன்றாட நிகழ்வுகள். எனினும் இவற்றையும் மீறி இங்கும் மக்கள் வாழ்ந்தபடியே இருக்கின்றார்கள். சாவினை மிதித்து வாழ எழுந்த மக்கட் கூட்டமாய் இன்று வாழ்ந்து காட்டுகின்றனர். எப்படி இவர்களால் இது சாத்தியமாயிற்று? எமது மண்ணின் மூலை முடுக்கெல்லாம் பற்றாக்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

குறைகளையும், இல்லாமைகளையும், அழுத்தங்களையும், தடைகளையும் மீறி தொழில் முயற்சிகள் நடாத்தப்படுகின்றன. காற்று, வியர்வை தின்னக் களத்துமேட்டில் குவிந்தனர் மக்கள். மண் பொன்னாகியது. இவர்களின் இந்த முயற்சிக்குப் பின்னால் உறுதுணையாகவும் வழிகாட்டியாகவும் தன்னை இனம் காட்டியது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம். ஏராளமான திட்டங்கள், செயற்பாடுகளென விரிகின்றது இவர்கள் முயற்சிகள். நாட்டின் பொருளாதாரச் சக்கரம் சுழல்வதற்கு தோள் கொடுத்தபடி முன் செல்லுகின்றது இந்த நிறுவனம். கடல் வளம், பனை வளம், விவசாயம், விலங்கு வேளாண்மை, கைத்தொழில் என அங்கிங்கெனாதபடி எங்கும் தொழிற்படுவது இது.



# ...ம் என்று வாழ்த்தப்பட்டது தமிழீழம்?





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சிறுகதை

# தமிழ் ஈழத் தூது

## நிலக்கிளி அ. பாலமனோகரன்

அதிகாலையிலேயே கண் விழித்துக்கொண்ட கணேசன் தனக்கருகே தூங்கிக்கொண்டிருந்த தனது இளம் மனைவி சுதாவை எழுப்பிவிடக்கூடாது என்ற கரிசனையுடன் தனது பக்கம் கட்டிலோடு இணைந்திருந்த விளக்கைப் போட்டான். அந்த விளக்கின் மென்மையான ஒளியில் குழந்தைபோல உறங்கிக்கொண்டிருந்த சுதாவை ஆற அமரக் கவனித்தான்.

களங்கமில்லாத முகம், சித்திரத்தில் எழுதியது போன்ற அழகிய முகம், புது மணப்பெண்ணுக்கே உரிய களையும் அசதியும் பொலிகின்ற முகம். அவளது **அழகைக்** காதலுடன் பருகிய **கணேசனுடைய** உள்ளத்தில் உவகையும் **பெருமிதமும்** பொங்கின. தான் **எண்ணியதை** அடைந்துவிட்டேன் என்ற **கர்வமும்** அங்கு கலந்தேயிருந்தது.

ஒன்றிரண்டு ஆண்டுகளாகவா இந்த சுதாவுக்காகக் காத்திருந்தான்! ஆறு நீண்ட ஆண்டுகளல்லவா தவமிருந்தான்! அவளை மீண்டும் ஆசையுடன் கவனித்த கணேசனுக்கு தான் ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் ஊரில் பார்த்த அந்த சுதாவுக்கும் இன்று டென்மார்க்கில் தன் மனைவி என்ற நிலையில் அருகில் உறங்கிக் கொண்டிருக்கும் இந்த சுதாவுக்கும் ஒரு இனம்புரியாத, ஆனால் நிச்சயமான ஒரு வேறுபாடு தெரியவே செய்தது.

அன்றைய சுதா காட்டருவி போல திரும்பும் திசையெல்லாம் துள்ளித் தெறித்துக் கலகலக்கும் இயல்புடையவளாக அல்லவா இருந்தாள். அன்று அவளுக்கு வயது பதினைந்தேதான். இப்போ இருபத்தியொன்றல்லவா! அதுவும் ஒரு செல்வச் செழிப்புள்ள குடும்பத்தின் ஒரே மகளாக வளர்ந்த அவள் தனது அன்புப் பெற்றோரைப் பிரிந்து இந்த அன்னிய நாட்டுக்கு வந்து இன்னமும் முழுமையாக ஒரு வாரங்கூட ஆகவில்லையே! ஊரையும் உறவையும் பிரிந்த தவிப்பு, பயணக் களைப்பு, புதுமண உறவின் இனிப்பு, இவற்றையெல்லாம் விட, அவள் அடைந்துள்ள ஆறு ஆண்டு கால முதிர்ச்சி என்பவைதான் அவளை இன்று வேறாகக் காட்டுகின்றனவோ! ஆமாம்... பதினைந்து வயது பருவச் சிறுமிக்கும் இருபத்தொரு வயது இளம் பெண்ணுக்கும் வித்தியாசம் இல்லாமலா போகும்...!

இருந்தாலும்.... இந்த கடந்த நாலைந்து நாட்களாக அவன் காணும் சுதாவில் ஒரு மாற்றத்தை அவனால் உணர முடிகின்றது. துள்ளிக் குதித்து வந்த காட்டருவி சமதரைக்கு வந்ததும் சட்டென அடங்கி இரு கரைகளுக்குள் சலனமின்றி மெல்லப் பாய்வது போல... பளீர் பளீரென கயல் புரள்வதுபோல வேட்டம் பாய்ந்த விழிகளில் இப்போ ஒரு நிதானம், தெளிவு. இவற்றுக்கும் மேலாக ஒரு அற்புத அமைதி என்பவற்றை அவனால் காணமுடிந்தது.

ஒருவேளை இவள் என்னை முழுமையாக விரும்பவில்லையோ? வெளிநாட்டு மாப்பிள்ளை என்றதுமே பகட்டும் பணத்துக்குமாக ஆசைப்பட்டு வரக்கூடியவளல்ல சுதா. அவளுடைய குடும்பம் ஊரிலே ஆலமரம் போன்றது. செல்வச் செழிப்பு ஆளடுக்கு உற்றம் சுற்றம் என்பவற்றுக்குக் குறைவே இல்லை.

அந்த நிலையிலுள்ள சுதாவைத் தான் அடையவேண்டுமென்றால் தனது நிலைய உயர்த்திக் கொண்டாற்தான் முடியும் என்பது ஏழு ஆண்டுகளுக்கு முன்பு இருபது வயதாக இருந்த கணேசனுக்கு அப்போதே புரிந்தது. தனது தங்கை புவனாவின் பள்ளித் தோழியாகிய சுதா அவனுடைய மனதில் அவளையறிமலே இடம் பிடித்துக் கொண்டிருந்தாள். அவளுடன் அங்கு இதையிட்டுப் பேசவோ, சாடைமாடையாக உணர்த்தவோ அப்போது சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அப்பிடியானதொரு வசதி கிடைத்திருந்தாலுங்கூட, துடியாட்டமும் பளீரென நினைத்ததை அப்படியே சொல்லிவிடும் குழந்தைத்தனமும் கொண்டிருந்த சுதா எங்கே தன்னைக் கேலிசெய்து விடுவாளோ என்ற பயமும் கணேசனை இவ்விஷயத்தில் ஊமையாக்கி விட்டிருந்தது.

கணேசனுடைய பார்வை மிகவும் தீர்க்கமானதாக இருந்திருக்க வேண்டும். ஏதோ ஒரு அருட்டுணர்வினால் விழிகளைத் திறந்த சுதா, கணேசன் தன்னையே உற்றுப் பார்ப்பதைக் கண்டாள். நித்திரை மயக்கம் முற்றாகக் கலையாமலே "என்ன பாக்கிறியள்!" என்று மெல்லக் கேட்ட சுதாவினுடைய அந்த அகன்ற கருவிழிகளிலிருந்து தன் விழிகளைப் பெயர்க்காது அவன் வினவினான்,

"சுதா! நான் உன்னட்டை ஒண்டு கேட்பன்.... ஒளிக்காமல் எனக்கு உள்ளதைச் சொல்லவேணும்!..."

எதற்காக இப்படிக் கேட்கிறான் என்பது புரியாமலே சுதா "ம்ம்" என்றாள்.

சுதா! நீ இங்கு வந்ததிலிருந்து நானும் பார்க்கிறேன்.... உன்னிடம் ஒரு மாற்றத்தை என்னால் உணர முடிகிறது.... ஊரிலே காலமை ஒரு சட்டை, பின்னேரம் ஒரு உடுப்பு என்றெல்லாம் உன்னை அலங்கரித்துக்கொண்டு வண்ணத்துப் பூச்சியாகப் பறப்பாயே!.... அணிகள் ஆபரணங்கள் என்றால் உனக்கு மிகவும் விருப்பமல்லவா?... இன்று உன்னிடம் இருக்கும் உடைகள் எதுவும் ஆடம்பரமானதாக இல்லையே!.... நீ கொண்டுவந்த உனது நகைகள் கூட இங்கே நாலு இடத்துக்குப் போகும் போது அணிந்துகொள்ள மறுக்கின்றாயே?... இந்தப் புதிய நாட்டின் மனிதர்களையும், காட்சிகளையும் காணும்போதெல்லாம் நீ அவற்றைக்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கூர்ந்து கவனித்தாலும் பிரமிப்பு அடைவதாகத் தெரியவில்லையே... ஏன் சுதா?... கலகலவென இடைவிடாது சிரித்துப் பேசி மகிழும் நீ இப்போது ஏன் அமைதியாகிப் போனாய்?... என்னை உனக்குப் பிடிக்கவில்லையா? உனக்கு விருப்பமில்லாமல்தான் என்னை மணக்க இசைந்தாயா? எனத் தன் மனத்தைக் குடைந்து கொண்டிருந்த கேள்விகளைக் கொட்டிவிட எண்ணிய கணேசன் அவ்வாறு யாவற்றையும் விளக்கமாகக் கேட்காமல்... சுதா!.... நீ முன்பு ஊரிலை இருந்தது போல கலகலப்பாக இல்லையே.... ஒரு வேளை என்னை உனக்கு விருப்பமில்லாமற்தான்.... என்று இழுத்தான். அவன் உணர்ச்சி வசப்பட்டிருந்ததனால் குரல் சற்றுக் கரகரத்தது. அவள் அவனுடைய வாயைத் தன் விரல்களினால் மூடி... சிச்சீ... அப்படி ஒன்றுமில்லை! நான் விரும்பித்தான் சம்மதிச்சனான்.... இல்லாவிட்டால் இங்கே வந்திருப்பேனா? எனக் கூறினாள்.

அவளுடைய பதில் கணேசனுக்குப் பூரண திருப்தியைக் கொடுக்கவில்லைத்தான். ஆயினும் அவளுடைய கண்களில் எதுவித களங்கமோ கலக்கமோ இல்லை. அவளுடைய இதயத்தில் உள்ளதைத்தான் அவை வெளிக்காட்டுகின்றன என்பதை உணர்ந்த கணேசன் மனம் நிறைந்தவனாக விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துக் கொண்டான்.

சுதாவினுடைய அன்பான அணைப்பினுள் கட்டுண்டவன் அப்படியே உறங்கியும் போனான்.

★★★

சுதாவின் விழிகள் மூடியிருந்த போதும் அவளால் உறங்க முடியவில்லை. இவர் இப்படிக் கேட்கின்றாரே!.... இவருடைய தங்கை புவனாதான் என்னை இந்தத் திருமணத்திற்கு சம்மதிக்க வைத்தாள் என்பதை அறிந்தால் என்ன சொல்வாரோ? அவள்மீது இவர் எவ்வளவு பாசமாக இருந்தார்!... ஓ. எல். பரீட்சையில் முல்லை மாவட்டத்திலேயே மிகச் சிறந்த பெறுபேறுகளை அவள் பெற்றபோது எவ்வளவு மகிழ்ச்சியோடும் பெருமையோடும் அவளுக்குக் கடிதம் எழுதிப் பரிசாகப் பணம் அனுப்பியிருந்தாரே!... அவள் இயக்கத்தில் சேர்ந்துவிட்டாள் என அறிந்தபின் பெற்றோருக்கு எழுதும் கடிதத்தில் அவளையிட்டு ஒரு வரிகூட எழுதாமல் விட்டுவிட்டாரே!... ஒரே ஒரு உடன் பிறப்பு என்ற பாசத்தைக் கூட அறுத்துக் கொண்டு விட்டாரே!.... என் அருமைப் புவனாவை அறிந்தவர் எவரும் அவளை வெறுக்கக் கூடுமா!...

புவனாவை நினைக்கையில் சுதாவின் கண்கள் கலங்கிக் கொண்டன. அவள் இயக்கத்துக்குப் போகமுன் கூடாகக் கண்டாள். இயக்கப் போராளிகளில் அவள் பெருமதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தாள். ஆனால் ஆயுதம் ஏந்திக் களத்தில் குதிக்கும் அளவுக்கு அவளுடைய உள்ளம் உரம் பெற்றிருக்கவில்லை. தன்னுடைய கோழைத்தனத்தை நினைக்கையில் அவளுக்குத் தன்மீதே வெறுப்பு ஏற்பட்டது. புவனாவின் வினாவுக்கு விடை கூற முடியாமல் அவள் தலைகுனிந்து கண்ணீர் விட்டபோது அவளை அன்புடன் அணைத்துக் கொண்டு "சுதா!... நாமிருவரும் பிள்ளைப் பருவத்திலிருந்தே ஒன்றாகப் பழகியவர்கள்!... உன்னுடைய பயந்த



னர் கூட சுதாவிடம் சொல்லிக் கொண்டுதான் போயிருந்தாள். சுதா! நாம் சுதந்திரமாக, சமாதானமாக, சந்தோஷமாக வாழவேண்டுமென்றால் நமக்கென்று ஒரு தேசம் வேண்டும். இதற்காக இன்று எத்தனை வாலிபர்களும் யுவதிகளும் தமது உயிரையும் கொடுத்துப் போராடுகின்றனர்!.... அதைப் பார்த்துக்கொண்டு என்னால் வெறுமனே வீட்டில் இருக்கமுடியவில்லை!... நானும் என் பங்கைச் செய்தாக வேண்டும்!.... நீ என்ன செய்யப் போகின்றாய்? என்று புவனா கேட்டபோது சுதாவுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

எங்கும் சுதந்திர தாகம் என்ற உணர்வு பொங்கி எழுந்து பிரவாகமாகப் பெருகுவதை அவள் கண் சுபாவம் எனக்கு நன்றாகத் தெரியும்! போராட்டம் என்பது ஆயுதத்துடன் களத்தில் இறங்குவது மட்டுமல்ல! இப்போராட்டத்தில் இன்னும் எத்தனையோ வகையில் நீ கலந்துகொள்ளலாம். போராளிகளையும் அவர்களது தியாகத்தையும் மனதாரப் புரிந்துகொள்வதே போராட்டத்துக்கான முதற் பங்களிப்பாகும். உன்னுடைய உள்ளம் களங்கமற்றது.... இரக்க சுபாவம் உள்ளது. எனவே நாளடைவில் இப் புனிதப் போரில் உன்னுடைய பங்கு, பணி என்ன என்பதை நீயே புரிந்து கொள்வாய்!.... மறுபடியும் நான் உன்னைக் காண்பேனோ தெரியாது!...." எனக் கூறியபடி சுதாவின் கண்ணீரைத் துடைத்து அவளை முத்தமிட்டுப் போய்விட்டாள் புவனா.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அதன் பின்னர் ஐந்து வருடங்க ளின் பின்னர்தான் சுதா புவனா வைக் காணும் சந்தர்ப்பம் ஏற்பட்டி ருந்தது. புவனாவின் தாயார் மரணப்படுக்கையில் இருக்கின்றாள் என்பதால் அவள் ஊருக்கு வந்திருந் தாள். மகளைக் கண்டு அவளுடன் இரண்டொரு வார்த்தை பேசிய பின்னரே தாயினுடைய உயிர் பிரிந் தது. மரணச் சடங்குகள் யாவும் முடிந்து இரவானபோது புவனாவும் சுதாவும் தனிமையாகப் பேசும் சந்தர்ப்பம் கிடைத்தது.

அந்த ஐந்து வருடங்களில் புவனா மிகவும் மாறிப்போய் இருந்தாள். பயிற்சிகளும், வெயில், மழை பனி எனப் பாராமல் கடமையாற்றுவதும், கண்விழிப்பதும் என்று கடுந்தவ வாழ்க்கை அவள் உடலைக் கறுக்க வைத்து கடினப்படுத்தியிருந்தது. எம் மண்ணின் பெண்கள் அழகிய மயில் கள்தான்! ஆனால் இது போர்க் காலம்! இக்காலத்தில் அம் மயில்க ளினது தோகைக் கண்கள் வெறும் அழகு அங்கமாக இருக்காது, அவை கூரிய வேல்களாக மாறவேண்டும்! அதுதான் போர்க்காலத் தர்மம்!... என்று ஒரு தடவை அவள் சொன் னது போன்று அவளே ஒரு சக்தி மிகுந்த ஆயுதமாக இன்று உருவாகி யிருந்தது அவளுடைய கண்களில் பிரகாசித்த ஒளியில் தெரிந்தது. இப்போ அவள் முன்போல் அதிகம் பேசவுமில்லை.

அவர்கள் தனிமையிலிருந்தபோது புவனா செய்த முதற் காரியம், தனது சேட் பையிலிருந்து ஒரு வெளிநாட்டுக் கடிதத்தை எடுத்து சுதாவிடம் கொடுத்ததுதான்.... அது அண்ணன் அம்மாவுக்கு எழுதிய கடைசிக் கடிதம்.... அம்மா தன்ரை உயிர் போகமுதல் என்னிடம் தந்தது இதைத்தான்.... முதலில் நீ இதை வாசி!... எனச் சொல்லியிருந்தாள்.

அதில் கணேசன் தன் விருப் பத்தை எழுதியிருந்தான். சிறுவயது தொட்டே தான் சுதாவை விரும்பி வந்ததையும், தான் அவளை மணக்க விரும்புவதையும், எப்படியாவது சுதாவின் பெற்றோருடனும் சுதா விடமும் பேசி சம்மதத்தைப் பெறு மாறு மிகவும் உருக்கமாகக் கேட்டி ருந்தான்.

அதைப் படித்த சுதாவின் மன தில் பலவிதமான உணர்வுகள் ஒன்றுசேரத் தோன்றி அவளைக் குழப்பத்தில் ஆழ்த்தின. என்ன செய்வது! என்று புரியாமல் அவள் புவனாவைப் பார்த்தாள்.

.....சுதா!... நான் சொல்வதைக் கவனமாகக் கேள்! அண்ணாவைப் போல் இன்னும் பலர் இருக்கத் தான் செய்கின்றனர்..... அவர்களுக்கு தான், தன் குடும்பம் என்ற குறுகிய வட்டத்திற்கு வெளியே வந்து சிந்திக்க முடிவதில்லை. தானும் தன் குடும்பமும் பாதுகாப்பாக, நிம்மதி யாக, நலமாக வாழ்ந்தால் போதும் என்று எண்ணும் ஒரு சராசரி மனிதன் அவன். அவனைப் போன் றவர்கள் இங்கு நமது மண்ணில் நிகழ்ந்துகொண்டிருக்கும் மகத்தான

**மு**த்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் சிந்திப்பதை நிறுத்திவிட்டார் என்ற செய்தி எம்மைத் திடுக்குற வைத்தது. எண்பது ஆண்டுகாலமாக தமிழென்றும், தமிழர் வாழ்வென்றும், தமிழரின் வீரம், மானமென்றும், தமிழர் மருத்துவமான சித்தமருத்துவமென்றும், இவை அனைத்தினதும் வளர்ச்சியென்றும் தினசரி சுற்றிச் சுழன்றுகொண்டிருந்த 'திருச்சிப்புயல்' தன் தொண்ணூற்றி ஆறாவது வயதில் எம்மையெல்லாம் சோகத்தில் ஆழ்த்திவிட்டு அமைதியானது. 'உச்சிமலைப் பிள்ளையாக' நின்று எமக்குத் தமிழுணர்வேற்றிக்கொண்டிருந்த 'தமிழக்காவலர்' காலமாகிவிட்ட செய்தி எம்மைக் கலங்கவைத்தது.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் முதலிலும், பின்னர் பல தடவைகளும் ஐயா அவர்கள் தமிழீழம் வந்ததையும், ஓடி ஓடி ஊரெங்கும் இங்கு பேசியதையும், தன் பேச்சுக்கள் மூலம் தமிழனின் தன்மான உணர்வுக்கு உரம் வீசிச் சென்றதையும் பலர் மறந்திருக்கமாட்டார்கள். பின்னர் 1989ம் ஆண்டு இந்திய ஆக்கிரமிப்புப் படை தமிழீழத்தை சின்னாபின்னமாக்கிக் கொண்டிருந்த கோர நாட்களில் ஐயா கொழும்புக்கு வந்திருந்த போதிலும் தமிழன் வளம் பற்றியும், தமிழனின் திறம் பற்றியும், விடுதலைப் புலிகளின் வீரம் செறிந்த போராட்டம் பற்றியும், எமது தேசியத் தலைவரின் அஞ்சாமை பற்றியும் விதந்துரைத்தார்.

குறிப்பிட்டுக் கூறுவதானால் இப்படித்தான்; "பிரபாகரன் தமிழனென்பதையிட்டு நான் பெருமைப்படுகிறேன். ஏன் தெரியுமா? நான் தமிழனென்பதால்" என்று அஞ்சாது நெஞ்சு நிமிர்த்தி, கொழும்பில் தன் கருத்தைக் கூறி எல்லோராலும் 'கதிகலக்கிய புலி' என்று வர்ணிக்கப்பட்டார்.

திருக்குறளை ஐயா பேசப்பேச அவையில் இருந்து கேட்பதே ஒரு ஆனந்த அனுபவம். பஞ்சகச்சமாக கட்டிய வேட்டியுடன் முத்தமிழ்க் காவலரை மேடையில் காண்பதே அழகு. வார்த்தைக்கு வார்த்தை அங்கதம் இழையோட தன் கருத்துக்களை சரளமாகக் காவலர் வெளியிடும் பாங்கை ஒருதரம் அனுபவித்தவர்கள் அதை வாழ்நாளில் என்றுமே மறக்கமாட்டார்கள்.

"புறநானூற்றுக் காலத்துக்குப் பின்னர் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளில் தம்பி பிரபாகரன் போன்ற வீரன் எம்மத்தியில் பிறக்கவில்லை" என்று காலத்தின் குரலான சத்தியவரிகளை எழுதிய முத்தமிழ்க் காவலரின் கைகள் இனி எழுதாதென்பதே எமக்குத் துயரம்.

முத்தமிழ்க் காவலரின் இழப்பு ஈடுசெய்யமுடியாதது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



விஷயங்கள் பற்றித் தெரிந்துகொள்ளாமல் இருக்கின்றனர்.... அவற்றையிட்டு அறிந்துகொள்வதற்கு அக்கறை காட்டுவதில்லை என்பதுடன், சிலசமயம் அலட்சியப் படுத்தவும் முனைகின்றனர். என்னதான் இருந்தாலும் தாம் செய்வது தவறு, தாம் பிறந்த மண்ணும் அதன் மக்களும் எதிர்கால விடிவிற்காக வேதனையில் ஆழ்ந்திருக்க, தாம் மட்டும் அதற்குத் தப்பிப் போய் வாழ்வது அவர்களுடைய மனதை உறுத்தத்தான் செய்கின்றது. மனச்சாட்சியின் உறுத்தல்களை மழுங்க வைப்பதற்குத்தான் அவர்கள் பற்பல காரணங்களைக் கண்டுபிடித்து, அவற்றை வளர்த்து, நாளடைவில் அவை தரும் பொய்யான பாதுகாப்பு அரணுக்குள் வாழ்கின்றனர். இதற்கு உறுதுணையாக, விடுதலைப் போராட்டதையே மாசுபடுத்துவதற்கென சில சுயநலக் கும்பல்களும், தனிமனிதர்களும் அங்கு இயங்கிக் கொண்டிருக்கின்றனர். தமது இன்னுயிரையே விலையாகக் கொடுக்கும் ஒரு இளங்குலத்தின் தியாகத்தினால் இன்று ஒரு புதிய தேசம் நமக்காக உருவாகின்றது என்ற . உண்மையை நேரில் அனுபவித்த உன்னைப் போன்றவர்கள்தான் அங்கு சென்று செய்தியைச் சொல்ல வேண்டியவர்கள்!.... முதலில் என் அண்ணன் திருந்த வேண்டும்!... உன்மேல் தன் உயிரையே வைத்திருக்கும் அவனைச் சரியான முறையில் சிந்திக்க வைப்பதற்கு உன்னைவிடப் பொருத்தமானவர் வேறு எவருமில்லை!.... நாளடைவில் அவன் தனது கடமைகளை உணர்வது மட்டுமல்ல, நீங்கள் இருவருமாக அங்கு ஒதுங்கி வாழும் எம்மவரையும் எம் மண்ணுடன் மீண்டும் இணைத்துக் கொள்ளலாம் அல்லவா!... என்ன சொல்கின்றாய்?.... என்று தனது வலிமையான கரங்களினாலே சுதாவின் தோள்களை இறுகப் பற்றிக் கொண்டு கேட்ட புவனாவின் விழிகள் சிவந்து கலங்கியிருந்தன.

தனது அருமைத் தோழி புவனாவைப் போன்றும், அவளையொத்த இளவயதினரைப் போன்றும் தன்னால் போராட்டத்தில் முழுமையாகப் பங்குகொள்ள முடியவில்லையே என்ற ஒரு ஊமை உறுத்தலால் இதுவரை மனதுக்குள் மறுகிக் கொண்டிருந்த சுதாவுக்கு சட்டென ஒரு புதிய பாதை தன்முன்னே திறப்பது போலிருந்தது.

நான் பிறந்த மண்ணையும், பெற்றோரையும் பிரிய வேண்டும் என்பதைத் தவிர நான் எதைத்தான் இழக்கப் போகிறேன்? எழுந்து வரும் என் தேசத்துக்காக இதைக் கூட நான் செய்யாவிட்டால் நான் மிக அற்பமானவளல்லவா!.... என்ற சிந்தனை ஒரு கணப்பொழுதினுள் அவளுள் மின்னலிட்டது.

★★★

அருகில் தூங்கிக்கொண்டிருந்த கணேசன் விழித்தெழுந்தபோது சுதாவின் சிந்தனையும் அறுந்து போயிற்று.

"அப்படியே படுத்திரு சுதா!... நான் போய் போறணையில் சுடச் சுடப் பாண் வாங்கி வாறன்!... ஒரு சம்பல் அரைச்சு ஊரில சாப்பிட்டது போலை சாப்பிடலாம்!".... என உற்சாகத்துடன் கூறிவிட்டுப் போய் விட்டான் கணேசன்.

சுதா வெறுமனே படுத்திருக்கப் பிடிக்காமல் எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு கோப்பி மெஷினில் தண்ணீரையும், கோப்பித் தூளையும் போட்டு வடியவிட்டுக் கணேசனுக்காகக் காத்திருந்தாள்.

இருவர் மட்டும் நின்று புழங்கக் கூடிய அந்தச் சிறிய சமையல் அறையில் தேவையான யாவும் கச்சிதமாக அமைக்கப்பட்டிருந்தன. அவற்றை எல்லாம் பளிச்சென்று தூய்மையாக வைத்திருக்கும் கணேசனுடைய திறமையை சுதா மறுபடியும் மனசுக்குள் மெச்சிக்கொண்டாள். இந்த ஐந்து ஆண்டுகளில் சமையல் கலையை அவன் திறமையாகக் கற்றுக்கொண்டதை அவனுடைய கைவண்ணத்தில் தயாரான உணவு வகைகளில் அவள் கண்டு தனக்குள் ஆச்சரியப்பட்டுப் போனாள். நொடிக்கொரு தடவை அவன் தன்னைச் சுதா சுதா என் அன்பொழுக அழைப்பதும், தன் கண்ணின் மணிபோல அவளைக் கவனிப்பதும் அவளுடைய இளம் மனதுக்கு இதமாகவும் பெருமையாகவும் இருந்தது. இந்த வாழ்க்கைக்குக் காரணமாகவிருந்த தனது அன்புத் தோழி புவனா இப்போது எங்கே, என்ன செய்துகொண்டிருப்பாள் என்ற ரீதியில் அவளது நினைவுகள் படர ஆரம்பிக்கையில் கதவைத் திறந்து கொண்டு கையில் பாணுடன் கணேசன் பிரவேசித்தான்.

அவனுடைய முகத்தைக் கவனித்த சுதாவுக்கு திக்கென்று இருந்தது. அந்த அளவுக்கு அவன் முகம் இருண்டு கலவரமடைந்திருந்தது.

என்ன எது என்று அவள் கேட்பதற்குள் அவனே பட்டென்று பேச ஆரம்பித்தான். "எங்கடை அப்பாட்மென்றுக்கு முன்னால் இருக்கிற அப்பாட்மென்ரிலை ஒரு பெட்டையை நீ கண்டிருக்கிறாய் இல்லையே?.... நாங்கள் வெளியிலை போக வரேக்கை சிலவேளை வாசலடியிலை ஒரு நாயையும் கொண்டு போவாள்.... அவள் செத்துப் போனாளாம் சுதா!...."

"செத்துப் போனாளோ?.... எப்பிடி?"

"அவள் செத்து நாலைஞ்சு நாள் இருக்குமாம்!.... உள்ளே நாய் ஊளையிடுற சத்தம் கேட்டுப் பக்கத்து வீட்டுக்காரன் பொலிசிற்குப் போன் பண்ணியிருக்கிறான்!.... இப்ப கொஞ்ச நேரத்துக்கு முன்னால்தான் பொடியைக் கொண்டு போயிருக்கிறாங்கள்!...." கணேசனுடைய குரல் மட்டுமல்ல உடலும் படபடத்தது.

நாயுடன் கண்ட பெண் என்றதுமே சுதாவுக்கு அந்தப் பெண்ணை ஞாபகம் வந்தது. கிழிசல்கள் கொண்ட நீல ஜீன்சும், பெரியதொரு பழைய லெதர் ஜக்கெற்றும் அணிந்தவாறு, போதையில் கிறங்கியவை போன்ற பூனைக் கண்களோடு, அவளை இரண்டொரு தடவை சுதா கண்டிருந்தாள்.

அந்த இளம் பெண் எப்படி இறந்திருப்பாள்?.... கொலையா?.... விபத்தா?.... என்ற வகையிலே சுதாவின் சிந்தனை ஓடியது.

அந்நேரம் அவளுடைய முகத்தை அவதானித்த கணேசன் தன் படபடப்பையும் மறந்து அவளைக்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கூர்ந்து நோக்கினான்.

"சுதா!... உனக்குப் பயமாய் இல்லையே?... எங்கடை படுக்கை அறைக்கும் அவளின்ரை... சவம் ... கிடந்த அறைக்கும் இடைவெளி கிட்டத்தட்ட ஆறு யார்தான் இருக்கும்!... அதுகும் நாலைஞ்சு நாளாய் அதுக்கை பிரேதம் கிடக்க நாங்கள் இஞ்சை சமைச்சுச் சாப்பிட்டுக் கொண்டு சந்தோஷமாய் இருந்திருக்கிறம்!.... எனக்கெண்டால் நினைக்க ஏதோ செய்து மயிர்க்கூச்செறியுது!... அதோடை அந்த மணம்!... இப்பதான் பொடியைக் கொண்டு போன தாக்கும்!..." கணேசன் அருவருப்பு மேலிடக் கூறியபோது அவனுடைய உடல் ஒரு தடவை குலுங்கிச் சிலிர்த்துக் கொண்டது.

அவனுடைய அவதியைக் கண்டபோது சுதாவுக்கு வியப்பாக இருந்தது. "பயமோ?.. இதுக்கு ஏன் பயப்பிடவேணும்!..." என அவள் நிதானமாகக் கேட்டபோது கணேசனுக்கு புதினமாக இருந்தது. ஊரில தங்கள் வீட்டுக்கு வரும் சமயங்களில் கொட்டிலில் கட்டியிருக்கும் பாவிப் பசு உற்றுப் பார்த்தாலே வெலவெலத்துப் போகும் அந்த சுதாவா இவள்!

கணேசனுடைய முகத்தில் பிரதிபலித்த வியப்பைப் புரிந்துகொண்ட சுதா அவனருகிலே வந்து "முந்தி எல்லாத்துக்கும் பயந்து சாகும் நான் எப்பிடி இவ்வளவு துணிஞ்சவளாய் மாறிவிட்டன் எண்டு யோசிக்கிறியளோ? நீங்கள் இஞ்சை வந்தபிறகு அங்கை எத்தினை பாரதூரமான விசயங்கள் நடந்திருக்குது!.... எங்களைப் படிப்பிச்ச பெரியம்மாத்தியாரையும் அவவின்ரை மூத்த மோனை இந்தியன் ஆமி வெட்டிக் கொல்லி அதுகளின்ர பிரேதம் ஆக்கள் போய் எடுக்கக்கூட ஏலாமல் போனது உங்களுக்குத் தெரியாதே!... அம்மாத்தியாருக்கு வயது எண்பது!.... மோன் பாரிசவாதக்காரன்.... இதுகள் இரண்டும் இந்தியன் ஆமிக்கு என்ன செய்ததுக்கு வெட்டிக் கொண்டவங்கள்!.... இப்படி எத்தனை சனம் அநியாயமாய் செத்திருக்குது!.. எத்தினை ஷெல்லடி!... எத்தினை குண்டு வீச்சு!... எவ்வளவு கஷ்டத்தை அனுபவிச்சிருப்பம்!... அப்ப பொலிஸ்காரனுக்குப் பயம்!.... ஆமிக்காரனுக்குப் பயம்!.... நாங்களும் பயந்து பயந்து ஓடத்தான் அவங்களும் பாய்ஞ்சு, பாய்ஞ்சு அடிச்சவங்கள்!... எப்ப எங்கடை பொடியள் திருப்பி அடிக்கத் தொடங்கினாங்களோ அண்டையிலிருந்து நிலைமை மாறிவிட்டது!..." என ஆரம்பத்தில் அமைதியாகச் சொல்லிக்கொண்டு வந்த சுதாவின் குரல் மெல்ல மெல்ல இறுக்கமாகவும் தெளிவாகவும் ஒலிக்கத் தொடங்கியது.

"எத்தனையோ அவலச் சாவுகளையும் அழிந்த பிரேதங்களையும் நேரிலை கண்டவள் நான்!... பிரேத மணம் எனக்கு நல்லாத் தெரியும்!.... ஆனால் என்னைத் தைரியசாலி ஆக்கினது என்ன தெரியுமோ?... எங்கடை ஊர் மாவீரர் மைதானத்திலை இறுதி அஞ்சலிக்கு கொண்டு வந்து வைக்கிற அந்த இளம் பொடியள் பெட்டையளின்ரை முகங்களை நீங்கள் பாத்திருக்க வேணும்!... ஆரெண்டாலும் சரி... அந்த முகங்களைப் பாத்த பிறகும் கோழையாய் இருக்க ஏலாது!..." என சுதா உணர்ச்சி பொங்கக் கூறி நிறுத்திய போது கணேசன் மலைத்துப் போனான். அவனது படபடப்பும் அகன்று விட்டிருந்தது.

பெருமுயற்சி செய்து புறக்கணித்து வைத்த எதுவோ ஒன்று இப்போது எதிரில் விசுபரூபம் எடுத்து நிற்பது போல அவன் உணர்ந்தான். ஆயிரக் கணக்கில் தம் உயிரை எதிர்கால சுபீட்சம் நாடி வழங்கிய தியாகபலி என்பது மறைத்து வைத்து மறந்து போகக்கூடிய ஒரு சாதாரண விஷயமா!.... என இதுவரை காலமும் உறங்கிக் கிடந்த அவனது மனச்சாட்சி திடீரென விழித்துக் கொண்டது போல அவனைச் சாடியது.

கணேசனுடைய முகத்தில் ஏற்பட்ட மாற்றத்தை அவதானித்த சுதா அவனருகில் அமர்ந்துகொண்டு அவனுடைய கைகளைப் பற்றிக் கொண்டாள்.

"இந்தப் பெட்டையை உங்களுக்குப் பழக்கமே?..."

"இல்லை சுதா!... அவள் இங்கை குடிவந்து இரண்டொரு மாதந்தான்! இந்த நாட்டிலை பக்கத்து வீட்டுக்காரர் எண்டாலும் ஆக்கள் அவசியமில்லாமல் பழகிறேல்லை!... இவள் போதைப் பொருளுக்கு அடிமையாய்ப் போனவளாம்!... தானும் தன்ரை நாயுமாகத் தனியத்தான் திரிவாள்!... வயதுகூட கனக்கை இல்லை.... உன்ரை வயதுதான் இருக்கும்!... பாவம்!... இளம் வயதிலை இப்பிடியொரு விதி!...." எனக் கழிவிரக்கத்துடன் கூறினான் கணேசன்.

"புவனாவுக்கும் என்ரை வயதுதான்!.... அதை மறந்து போனியளோ?" என சுதா மெதுவாகக் கேட்ட போது கணேசனுக்குச் சுரீ

---

**"ஈழத்தில் நடைபெறும் போராட்டத்தினால் தமிழனுக்கென்று ஒரு நாடு கிடைக்குமென்ற மகிழ்ச்சியில் நாமெல்லாம் இருக்கின்றோம். தம்பி பிரபாகரன் நடத்தும் நேரிய (நியாயமான) போராட்டத்தில் அவனுக்கு வெற்றி கிட்டுமென்பதில் ஐயமில்லை. அந்த வெற்றிக்காக நீங்களும் உங்களால் முடிந்ததைச் செய்யவேண்டும்.**

**தம்பி பிரபாகரன் இன்று தனித்து நின்று இரண்டு அரசுகளுக்கு எதிராக அந்த நாடுகளின் கடல், தரை, வான்படைகளுக்கு எதிராகப் போராடுகிறான். அவனுக்குப் போதிய படைக்கலமோ, காசோ இல்லை. எந்த வாய்ப்புக்களுமின்றிப் போராடுகிறார்கள் அந்த இளம் வீரர்கள். பிரபாகரன் செய்வது நல்லதா கெட்டதா அவன் வெற்றி பெறுவானா இல்லையா என்று எண்ணுபர்கள் கூட அவன் பெரு வீரன் என்பதில் ஐயப்பாடு கொள்வதில்லை. அவனது போராட்டத்தைக் கண்டு உலகமே இன்று வியந்து நிற்கின்றது. புறநானூற்றுக் காலத்துக்குப் பின்னர் இரண்டாயிரம் ஆண்டு காலமாக பிரபாகரன் போன்று வீரனொருவன் தமிழரிடையே தோன்றவில்லை."**

***முத்தமிழ் காவலர்***
***கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள்***

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ரென்றது. தலை குனிந்தவாறு அமர்ந்திருந்தவன் நிமிர்ந்து சுதாவைப் பார்த்தான்.

"உங்களுக்குப் புவனாவிலை சரியான கோபம்.... அதுதான் நீங்கள் அவளுக்கு கனகாலமாய் கடிதம் போடேல்லை... என்ன?" எனக் கேட்ட சுதாவின் குரலில் கொஞ்சமேனும் குற்றம் சாட்டும் தொனி இருக்கவில்லை. மாறாக அதில் அனுதாபமும் புரிந்துணர்வுமே மேலிட்டன.

கணேசனுடைய கண்கள் அவனையறியாமல் கலங்கின.

அவனுடைய கரத்தை இன்னும் இறுக்கமாகவும், ஆதரவாகவும் பற்றிக்கொண்ட சுதா தொடப்ந்து பேசலானாள். "டென்மார்க்கிலை ஆரும் சாப்பாடோ, வீடோ, உடுப்போ இல்லாமல் தவிக்கக் கூடாது எண்டு இந்த நாடு அப்படிப்பட்ட ஆக்களுக்கு எல்லா உதவிகளையும் செய்யுமெண்டு கேள்விப்பட்டிருக்கிறன்... இங்கை அன்னியரின்ரை ஆட்சியோ அடக்குமுறையோ இல்லை.... வறுமை இல்லை.... ஒண்டுக்கும் பயமில்லை.... எந்த வயதிலும் படிக்கிறதுக்கு வசதி இருக்குது.... அப்படி இருந்து ஏன் இந்த இளம் பெட்டை இப்பிடிச் சாகவேணும்?"

கணேசனால் சுதாவினுடைய கேள்விக்கு உடனடியாகப் பதிலளிக்க முடியவில்லை.

உலகத்தின் செல்வந்த நாடுகளில் நான்காவதாக கருதப்படும் டென்மார்க்கின் 50 இலட்சம் மக்களில், நாளொன்றுக்கு குறைந்தது 50 பேராவது தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றனர் என்று அண்மையில் பத்திரிகை ஒன்றில் படித்திருந்தான். சுதா கேட்பது போன்ற இத்தனை வசதிகள், வாய்ப்புகள், பாதுகாப்பு இருந்துங்கூட, இந்த இளம்பெண் எதற்காக இப்படி மரணிக்கவேண்டும்?

50 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த போரில் இந்த நாடும் அன்றைய மக்களும் அனுபவித்த கொடுமைகளும், அவற்றை எதிர்கொள்ளும் முகமாக அவர்கள் மேற்கொண்ட கடும் உழைப்பும், தியாகங்களுந்தான் இன்றைய டென்மார்க்கின் செல்வச் செழிப்புக்குக் காரணம் என்றும் கணேசன் அறிந்திருந்தான்.

அன்றைய சந்ததியினரின் வியர்வையிலும், கண்ணீரிலும், குருதியிலும் உருவாகிய இந்தத் தேசத்தின் இன்றைய இளஞ் சந்ததியினர் சிலர், திட்டவட்டமான இலக்குகளோ, இலட்சியங்களோ இல்லாது திசை தெரியாது தவிக்கின்றனர். இங்கு நடைபெறும் திருமணங்களில் அரைப்பங்குக்கு மேற்பட்டவை விவாகரத்தில் முடிவதும், தந்தை, தாய் பாசம் என்ற இறுக்கமான கட்டுக்கோப்புக்கள் குலைந்து, சிறுவயதினரும் இளங்குமரப் பருவத்தினரும் அன்பு, பாசம் என்பவற்றை இழந்ததால் அவர்களது வாழ்க்கை தடம் புரண்டு போவதும், கணேசன் இன்று கண்கூடாகக் காணும் விடயங்களாக இருந்தன.

முன்வீட்டுப் பெண்ணின் அகாலமான, அநியாயமான மரணத்துக்கு யார் காரணம்?.... அவளுடைய மரணத்தின் அர்த்தம் என்ன?.... என்ற ரீதியில் சிந்தித்தவனுக்கு இப்போ சுதா குறிப்பிட்ட அந்த மரணங்கள் மனதை நெருடின.

பூப்போல் இருந்த சுதா இன்று ஒரு புதுப்பிறவியாய் ஆகிப்போனதற்குக் காரணமான அந்த மரணங்கள் அகாலமானவை என்றாற்கூட அர்த்தமில்லாத மரணங்கள் அல்லவே!.... மரணத்தைத் துணிவோடும் விருப்போடும் எதிர்கொள்ளும் எமது இளைய பரம்பரை, தனது நாளைய சந்ததிக்காக அல்லவா ஒரு நாட்டை உருவாக்குகின்றனர்!.... அவர்களது வாழ்வுக்கு மட்டுமல்ல, மரணத்துக்கு கூட அர்த்தமுள்ளதே!.... என்று நினைக்கையில் கணேசனுடைய உடல் ஒரு தடவை சிலிர்த்துக் கொண்டது.

அந்த வீரவேங்கைகளில் ஒன்றாக இன்று எங்கோ ஓர் காட்டுப் பாசறையிலோ, கருங்கடற் பரப்பிலோ கடமையாற்றிக் கொண்டிருக்கும் தனது தங்கை புவனாவை அவன் இப்போது நினைத்தான். அவளுக்கு ஆதரவாக ஒரு வரிகூட எழுதாமல் இருந்துவிட்டதை நினைத்தான்.

உள்ளத்தில் எழுந்த உணர்ச்சிக் கொந்தளிப்பின் காரணமாக அவனுடைய உடல் குலுங்கியது. கண்களில் நீர் திரண்டது.

அவனுடைய நிலையைக் கண்ட சுதா அவனைத் தன்னுடன் சேர்த்து இறுக அணைத்துக் கொண்டாள். புவனா தனக்குத் தந்த பணியைச் சிறப்பான முறையில் ஆரம்பித்து விட்ட திருப்தி அவளுடைய கண்களில் பிரதிபலித்தது.

★★★

**தங்குதடையற்று நீ முன்னேறிச் செல்லவேண்டுமானால் சமயங்களில் நீ உன் விம்பத்துக்கு மாறான காரியங்களைக் கூடச் செய்யவேண்டும். அதற்காக நீ சகலத்தையும், உன் பரிபூரண இதயத்தையும் விட்டுக்கொடுக்கத் தயாராய் இருக்கவேண்டும். கொள்கைக்காக நீ உன் உயிரை இழப்பது மிகவும் இலேசான காரியம். அதைவிட மகத்தானவற்றை, உன்னுடைய சொந்தவாழ்வில் உனக்கு மிகவும் அருமையும் விருப்பமும் நிறைந்தவற்றைக் கூட நீ தியாகம் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட மகத்தான தியாகத்தினால்தான், நீ எந்த ஒரு சத்தியத்துக்காகப் போராடுகிறாயோ அந்தச் சத்தியம் எப்படி ஒரு மகா சக்தியாக வளர்ந்தோங்கிப் பெருகுகிறது என்பதை உன்னால் பார்க்கமுடியும். அந்தச் சத்தியம்தான் இந்த உலகத்தில் உனக்கு மிகவும் அருமை வாய்ந்த, அரிய பொருளாக இருக்கும்!**

***மார்க்ஸீம் கார்க்கியின்***
***'தாய்' நாவலிலிருந்து***

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தென் தமிழீழத்தில் ஓர் மௌன அலறல்

# தொடரும் தாய்மாரின் அவலம்

மீன்பாடும் பாடலையே கேட்டு மகிழ்ந்திருந்த மக்கள் இன்று நாள் முழுவதும் மரண ஓலத்தையே கேட்டபடி வாழ்கின்றார்கள். அங்கு மக்களின் வாழ்க்கை என்பது அணுவணுவான சித்திரவதைகளுக்குள்ளும், அடுத்த கணம் என்ன நடக்கும், நாளை நிம்மதியாய் விடியுமா என்ற அச்சம் நிறைந்த, நொருங்கிப்போன எதிர் பார்ப்புகளோடும் கழிகிறது. சிறகுகள்ற் குஞ்சைக் காப்பது போல முன்னர் ஒரு காலத்தில் தாமரை பூத்துக் குலுங்கி நீர் தெரியாது நிறைந்த வாவிகளில் இப்போதெல்லாம் இனங்காணமுடியாது உப்பிப்போன பிணங்கள் மிதந்தபடி வருகின்றன. நன்னீர் ஆறும் உப்புக் கடலும் இன்று தமிழரின் குருதி தோய்ந்தவாறு ஓடிக்கொண்டிருக்கின்றது.

தென் தமிழீழத்தின் திசைவெளி யாவும் அடிக்கடி நிகழும் சுற்றி வளைப்புக்களும் சிறீலங்கா இராணுவத்தின் கோரமான படுகொலைகளும் என்ற செய்தியை ஒவ்வொரு நாளின் . விடிவிலும் கேட்டபடி இருக்கின்றது. நிம்மதி என்ற சொல்லின் அர்த்தம் தொலைந்து போனவர்களாய் அவர்கள் வாழ்கிறார்கள்.

1990 இன் நடுப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா இராணுவத்தினருக்குமிடையே சண்டை மூண்டது. இராணுவ முகாம்கள் தமிழீழ மக்களின் குடியிருப்புக்களை ஆக்கிரமிக்கத் தொடங்கின. மூலைக்கு மூலை சிறீலங்கா இராணுவத்தின் தளங்களும் அவர்களின் நடமாட்டமுமே இருந்தன. காலை விடிவதற்கு முன்னர் அந்த மக்கள் இராணுவச் சுற்றிவளைப்புக்களால் உறக்கம் கலைந்து எழும்புகின்றனர். காலைத் தேநீரைத் தயாரிக்கவெனப் பற்றவைக்கப்பட்ட அடுப்புக்கள் அரைகுறையுடனும், இன்னும் நித்திரை விட்டு எழும்பியும் எழும்பாமலும்.... மக்கள் நிம்மதியான தூக்கத்தை மறந்தனர். நாளின் அரைவாசிப் பொழுதுகள் காட்டிலும், மிகுதி நேரங்கள் அடைபட்ட வீட்டிலுமாக அவர்கள் வாழ்க்கை துயரப்பட்டுப் போனது.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களினால் தமிழீழ மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. அவர்கள் பரம்பரை பரம்பரையாக நெல் விதைத்த வயல்களை இன்று இவர்கள் எட்டியும் பார்க்க முடியாத நிலை. அவர்களின் வயல்களில் நெல்லு விளையவில்லை. மாறாக தமிழர்கள் ரயர் போட்டு எரிக்கப்படுகிறார்கள். அந்த மக்கள் மீன் பிடித்த கடல்களையும் ஆறுகளையும் விட்டு புலம் பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அங்கு பெண்களுக்கு நடக்கின்ற துன்பங்களும் சித்திரவதைகளும் மிக மோசமானவை. அங்குள்ள பெண்களுக்கு நடந்த கதைகள் உலகில் எந்த மனித உரிமை மீறல்களிலும் நடக்காதவை.



வந்தாறுமூலை அழகிய கிராமம். தை, மாசியில் வயல்களில் நெற்கதிர் பூத்துக் குலுங்கும். வயற்காட்டுப் பக்கம் வாவிகளில் தாமரை கட்டாய்ப் பூக்கும். இது இராணுவ ஆக்கிரமிப்புக்களும், கிராம எரிப்புகளும் நடப்பதற்கு முன்னர் இருந்த நிலை. ஆனால் இப்போது அது மயானம். ஒவ்வொரு நாளும் அங்கு எந்த வீட்டிலாவது யாரும் இராணுவத்தால் காணாமற் போன அவலம் தெரியும். அல்லது எந்த வீடாவது அவர்களால் எரிக்கப்பட்டிருக்கும்.

அவள் பிறந்தது அந்த வந்தாறுமூலையிற்தான். அவளுக்கு அப்பொழுது பதினெட்டு வயது. அவளை தேசவிரோதி ஒருவன் சிறீலங்கா இராணுவத்துக்குக் காட்டிக்கொடுத்ததன் பேரில் கைதுசெய்து சென்றார்கள். அந்தப் பெண்ணைக் காட்டிக்கொடுத்தவன் தன்னைத் திருமணம் செய்யுமாறு கேட்க இவள்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


மறுப்புத் தெரிவித்தாள். விளைவாக அவளைப் பழிவாங்கும் நோக்குடனேயே காட்டிக் கொடுத்தான். இராணுவம் அவளைப் பிடித்து மோசமான சித்திரவதைக்கு உள்ளாக்கியது. ஒன்றரை வருடங்களுக்குப் பின்பே அவளை விடுதலை செய்தார்கள். மிகமோசமான சிறை வாழ்க்கை. வயர், தடிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டிருந்தாள். ஆழமான வெட்டுக் காயங்களோடு வந்து சேர்ந்தபோது அவளின் உடலிற் சில பகுதிகள் உணர்விழந்து போயின.

"ரவுண்ட் அப் என்று சொல்லி சிறுகுழந்தை தொடக்கம் வயது



போன கிழவன், கிழவி வரை பிடித்துக்கொண்டு போவாங்கள். கொண்டு போய் முண்டத் (தலையாட்டி) திட்டைக் காட்டுவாங்கள். அவன் ஆட்டினால் அவ்வளவுதான். பின்னர் அது பெண்ணோ, ஆணோ இவரின் நிலை படுமோசமாகிவிடும்" என்றார் இன்னொரு தாய்.

"இரவில் வந்து கதவு தட்டுவானுகள். திறந்தால் அப்படியே கொண்டு போய் விடுவாங்கள். பின்னர் அங்கு பிடிபட்டவர்களைக் காணமுடியாது. ஆறுமணியெண்டா நாங்கள் கதவைப் பூட்டிப்போடுவம். பிறகு என்ன அவசர தேவைக்கும் வெளியில போகமாட்டம்.

எங்கட வயலை எல்லாம் ஆமி எடுத்துப்போட்டான். நாங்கள் அப்பம் சுட்டுத்தான் சீவிக்கிறம். எங்கடை அம்மா ஒரு நாள் ஓலை பின்னிக்கொண்டு இருக்கேக்குள்ள ஆமி வந்து கத்தியாலை தலையை வெட்டப் போனான். பிறகு அடிச்சுப் போட்டுப் போட்டாங்கள். அவவுக்கு ஐம்பத்தெட்டு வயது. சாகும் வயதில் இருக்கும் கிழவிக்கும் அடிதான்." என்றார் அந்தப் பெண்.

இவ்வாறு நாம் சந்தித்த பெண்களின் துன்பம் நிறைந்த கதைகள் இருந்தன. உழைப்பதற்கென சென்ற கணவன் உயிரோடு திரும்பிவராத சம்பவங்களால், காணாமற் போன தங்களது பிள்ளைகளால் அங்குள்ள பெண்கள் பாதிக்கப்பட்டுப் போனார்கள். கணவனை இழந்த தாய்மார்களின் எண்ணிக்கை தென் தமிழீழத்தில் கூடிக்கொண்டே போகிறது.

இராணுவத்தின் மிகவும் கொடுமையான விடயமான பெண்கள் மீதான சிறீலங்கா இராணுவத்தின் பாலியற் துன்புறுத்தல், வன்முறை என்பவற்றால் பெண்கள் மிகுந்த தாக்கத்திற்கு உள்ளாகினர்.

பதினாறு வயதுடைய ஒரு பாடசாலை மாணவியைப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்திய சிறீலங்கா இராணுவம், அப்பெண்ணை மயானத்துக்குள் புதைத்துச் சென்றார்கள். இவ்வாறு அங்கு வாழும் பெண்களின் வாழ்க்கை மிகவும் சோகமானதொன்றாக இருக்கிறது.

இராணுவ முகாமுக்கு அண்மையாயுள்ள வீடுகளில் ஆண்களின் தலைக் கறுப்பைக் காணமுடியாது. ஒன்றில் அங்குள்ள ஆண்களை இராணுவம் கைது செய்து கொலை செய்திருக்கும். அல்லது அங்குள்ள ஆண்கள் தலைமறைவாகி காட்டில் வாழுகின்ற நிலை ஏற்பட்டிருக்கும்.

இதனால் அங்கு பெண்களே அதிகம். எந்த வேளையும் வீடுகளைப் பூட்டிய நிலையில், உள்ளுக்குள் உடைந்து போனவர்களாய், தாங்கள் இருக்கிறோம் என்பதை இராணுவம் அறியக்கூடாது என்ற அச்சத்தோடு வாழ்கிறார்கள்.

"உறவினர் யாரும் இறந்துவிட்டால் அழக்கூடாது. உடனே இராணுவம் வந்துவிடும். எங்கட பிள்ளையள் இயக்கத்துக்குப் போய்ச் செத்தாலும் நாங்கள் அழக்கூடாது."

"எங்கடை கவலையெல்லாத்தையும் எங்களுக்குள்ளேயே மறைச்சு மௌனமாய் அழுகிறம்"

என்றனர் அந்தப் போராளிகளின் தாய்மார்.

இந்தவகையில் அவர்கள் இந்தப் போராட்டத்துக்குச் செலுத்திய விலை அதிகம். சொத்துக்களை, வீடு, வாசல்களை இழந்து, வீட்டில் உறவினர்களை இழந்தது மட்டுமில்லாமல் அங்குள்ள தாய்மார், பெண்கள் நேரடியான இராணுவ வன்முறைகளையும் சந்தித்துள்ளார்கள்.

இவ்வளவு தூரம் அந்தத் தாய்மார், பெண்கள் இழப்புக்களைக் கொடுமைகளைச் சந்தித்தார்கள். வீடிழந்து, சொத்துக்கள் இழந்து, உறவினர்களை இழந்து அவர்கள் நின்றாலும், உள்ளங்களில் உறுதியோடு நிற்கிறார்கள்.

**- ஜெயஜோதி -**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அர்த்தநாரீஸ்வரர்கள்

கனவு காண்பதும் காதல் செய்வதும்
கட்டித் தழுவியே நேசம் கொள்வதும்
கபடமின்றியே பாடி மகிழ்வதும்
காடு மேடெல்லாம் கூடியாடியே மதுக்குடித்துக்
கிடப்பதும்

அவனுயிரிப் பாங்குகள்
காடும் மலையும் மரமும் மயிலும் குயிலும்
ஆடும்பாம்பும் ஓடும் நதியும் அவனுயிர்த்
தோழர்கள்.

கட்டுக்கள் எதுவுமற்றவன்
வீசும் காற்றறைப் போன்றவன்
கறுப்பன். ஆபிரிக்கன்.
அதோ, அவனருகே
ஒரு வெள்ளைப் பிசாசு,
அதன் இடதுகரத்தில் துப்பாக்கி



வலக்கரத்தொன்றில் சவுக்கொன்று.
சவுக்கின் கொடுக்கலில்
பட்டை பட்டையாய் உரிந்து போயின
பண்பாடுகள்
அவன் முதுகுத் தோலாய்!
அன்பினை வென்றே பாடிக் களித்தாடி
நின்றதும்
வேட்டையாடியபடியே முயலைப் பிடித்ததும்....
எல்லாமே எல்லாமே தொலைந்து போயின்.
சவுக்கின் வீச்சில்
அவனின் தன்மானமும் ஆடைகளும்
களையப்பட்டன.
ஒரு விலங்குபோல் விலங்கிடப்பட்டவன்
கப்பலில் ஏற்றப்பட்டான்.
அமெரிக்காவில்,
கறுப்பன், கனவு காண்பதும் காதல் செய்வதும்
தாயின் மொழியிலே கதைத்துத் திரிந்ததும்
தண்டனைக்குரியதாயிற்று.
முலை பெருத்த இளம் கறுப்பியோ
தினவெடுத்த வெள்ளை நாயின்
தலையணை யென்றனர், அவள் முலை
சொரியும் பாலெல்லாம் வெள்ளைக்
குழந்தைக்கு
உணவாய்த் தந்திடு என்றே
கட்டளையிட்டனர்.
கும்பிட்டுக் கும்பிட்டு இழகிக் கண்ணீர் விட்டே
கால் பற்றிக் கதறி அழவும்
கட்டிய கணவனைக் கொஞ்சும் குழந்தையை
கெஞ்சும் அண்ணனைத் தம்பியை அன்பின்
பிணைப்பானை
அறுத்தே அடிமைச் சந்தையில் விற்றனர்.
நெஞ்சு வெடித்திடும் எத்தனை சோகம்?
அடிமையாய் இருப்பது எத்தனை வெட்கம்;
துக்கம்?
ஆண்டு நூறு அடங்கிக் கிடந்தவர்
வெஞ்சினம் கொண்டே எழுந்தனர்.

தாயகம் பறிக்கப்பட்ட அவன்
உலகின் திசையெல்லாம் பரவிக் கிடந்தனன்
'இஸ்ரவேல் எனது தாயகம், இதுவே எனது
சிவாயநம'
அறிவைத் தேடுவது அவன் மூச்சு
விஞ்ஞானமும் மெஞ்ஞானமும் அவனிரு
நுரையீரல்கள்
அவன் ஒரு யூதன்.
அதோ அவனைச் சூழ
நறுக்கு மீசையுடன் நாஜி ஜேர்மனியன்.
வெறி கொண்ட அவன் குரல் திக்கெல்லாம்
ஓங்கி ஒலிக்கிறது.
'ஜேர்மனியனே மேலவன்'
'யூதனைக் கொல்வோம்'
கடவுளின் குழந்தைகளால் கடவுளிற்கு
யூதனின்
உச்சிமுடியும் உள்ளாடைகளும் படைக்கப்பட்டன.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஜேர்மனியனின் மேன்மைக்காய்
ஐம்பது லட்சம் பலியிடப்பட்டனர்,
தப்பிநின்றவர் கண்விழித்தனர்;
தாயகமொன்றே வாழ்வென்றுணர்ந்தனர்
குழம்பி நின்றவர் கொதித்தெழுந்தனர்.
காடு மேடு கடலெல்லாம் தாண்டியே
தாயகம் நோக்கிய பயணம் தொடங்கினர்.
வாழ்வை வென்றனர், 'இஸ்ரவேலெ'னும்
தாயகம் கண்டனர்.

சிங்கத்தினாட்சியில் சிறுவிலங்குக்
கூட்டங்களாய்
அஞ்சிக் கிடந்திட்ட பெருங்கறுப்பர்,
அடிமையாய்க் கிடப்பதன் அரியண்டம்
புரிந்தனர்.
நிறவெறியின் நேர்மையைத் தெளிந்தவர்
நெஞ்சிலே குண்டேந்திச் செத்துச் செத்தே
எழுந்தனர்,



நேற்றுப் புது தென்னாபிரிக்கா படைத்தனர்.

கல்லடர்ந்த கட்டாந்தரையும் இவன்
கைக் கடங்கிக் காட்சிதர
ஆழ நீர் கோலியிறைத்துப் பயிர் வளர்த்தபின்
தேட்டமெலாம் சேர்த்தவன்
பிள்ளைக்காய் வீடொன்று கட்டி....
உழைப்பதே இவனுயிர்.
திருநீறும் திருவடியும்
காவடியும் கூத்தும் விரதமும் இவன்
அருமருந்துகள்
கல்வியும் கடவுளும் இவனிரு கண்கள்
இவன் சுதந்திர இலங்கையின்? தமிழன்?
இதோ இதோ இவனிற்கருகே
மழித்த தலையும் தரித்த காவியும்
தீயுமிழும் கண்களும்....
கையில் கோடாரியும் கொடுவாளும்...
பிட்சா பாத்திரம் துறந்த துறவி....
அவரின் உதடுகள் புலம்பின

'கொத்துவேன்; வெட்டுவேன்; நன்றாய்க்
கொழுத்துவேன்
கண்ணைப் பிடுங்கியே தரையில் வீசுவேன்.
என்
வாழேந்திய சிங்கத்தின் பசியாறும் வரை
"நீ வீடு கட்டலாம்
வேட்டி உடுக்கலாம்
சாமி காவலாம்
சந்தணம் வைக்கலாம்; எல்லாம் செய்யலாம்.
.......
என் சிங்கம் மீண்டும் சந்நதம் கொள்ளும்வரை"

"நான் சுதந்திரமானவன்; இலங்கைத் தமிழன்"
. ஓர் கீச்சுக்குரல்.
துறவியின் தீயுமிழும் கண்கள் துடிக்க
பேயுமிழும் வார்த்தைகள் குதித்தன .
"முடியாது!
பௌத்தன் மட்டுமே சுதந்திரன்; பூரணன்
நீ வளர்ப்பு நாய்.
கூடுண்டு உனக்கு; குளிக்க வார்க்க ஆட்களும்
உண்டு;
மணியடிக்கச் சோறுண்டு.
எல்லா முண்டேயாயினும்,
உனதெண்ணப்படி ஓடவும்; ஓடியோர் துணை
தேடவும்
தேடிக் கூடவும் முடியாது.
உன்னைக் கூண்டோடு கொழுத்தவும்
கொழுத்திய சாம்பல் மேட்புலோர்
வீடெனக்குக் கட்டவும் என்னால் முடியும்.
நானோ உன் எஜமான்"

ஆபிரிக்கக் கறுப்பனாய்
யூதனாய்
எல்லாத் தமிழரும் ஏன் இல்லாது போனோம்?
எங்களிற் பலரோ
அர்த்தநாரீஸ்வரர்களாய்.....
சுகமும் போகமும்; படுத்துறங்கிச் சிறுதுண்டு
சாக்கும்
போதுமெனும் பேதமை....
அடிமையின சோகம்
சுதந்திரமாய் இருக்க விடப்படுபவர்களாய்......
பதியை மறைத்திடும்
பாசத்தை பற்றிய பசுக்களாய் இன்னும்.......
"என்று மடியுமிந்த அடிமையின் மோகம்?"

**க. சிவஞானம்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# நீ மனிதன் !

## மனிதமுள்ள.... ஓராயிரம்செயல்களின் கருச்சுமந்த...



எமக்கென
ஒன்றுமற்றுப்போன
அந்த வேளையில்தான்
நீ நீள்வானத்தில்
நிமிர்ந்தெழுந்தாய்

★

சிறகொடிந்த வெறும்
விறகுக் கரங்களுக்கு
உயிர்ப்புண்டு எனத்
துடிப்புக் கொடுத்தவன்
நீ

★

எட்ட முடியாது என
எண்ணிய
இலக்கினையும்....
இல்லாமற் செய்த
பெருமை
எங்களுக்குரியது.
அதை எமக்கென
உரித்தாக்கிய
காவலன் நீ.

★

புண் சுமந்த
மனங்களின்
கண்ணீர் விதிகளில்
புதியதொரு
பறவையைச்
சிறையுடைத்துச்
சிறகடித்துப்
பறக்கவிட்டாய்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கருமேகத் திரள் வானம்,
களங்கம் சுமந்த வீதிகள்,
எல்லைகள் பிடுங்கப்பட்டுப்
பிய்த்தெறிந்த வீடுகள்
எங்கள் வானத்தில்
எமக்கென ஒன்றுமற்றுப்போன
அந்த வேளையில்தான்
நீ நீள்வானத்தில்
நிமிர்ந்தெழுந்தாய்.
ஆதவனாக இல்லை.
அக்கினிக் குழந்தைகளின் அன்னையாய்,
ஓராயிரம் விடிவெள்ளிகளுக்கு,
இன்னும் இறுகிக் கறுத்து
இலக்குகள் தேடும்
கறுப்பு மனிதர்களின் உணர்வுப் பொறியாய்,
எங்கள் வீதிகளில்,
வீட்டு வாயிலின் அருகுவந்து
விளக்கேற்றிய அன்புச் சுடராய்,
வர்ணிக்க முடியாத வர்ணமானாய்.

உலகம் உற்றுப் பார்த்த எம் திசையில்,
எங்கிருந்தோ விலங்குச் சங்கிலிகளை
உனக்காக எண்ணிக்கொண்டிருக்கும்
விலங்குகளின்
அர்த்தமற்ற பேச்சுகளுக்கு
அப்பால்,
இன்னும் இன்னும் எங்கள் இதயங்களுக்கு
அருகில் வந்து
முகம் காட்டுகிறாய்.
யாரும் காணாத தெய்வமாகவல்ல,
வீடு தேடிவந்து விசாரிக்கும்
எல்லோர்க்கும் உரிய மனிதனாய்...

உணர்வு கலந்த வரிகளில்
உன்னை வர்ணிக்க முடியாத
ஒரு உண்மையான போராளி மனிதனுக்கு
அப்பாற்பட்டு நான் என்ன சொல்ல?

ஆயினும் எங்களின்
துப்பாக்கிகளுக்குத் தோட்டாக்களேற்றி
வைத்தவன் நீ.
சிறகொடிந்த வெறும்
விறகுக் கரங்களுக்கு
உயிர்ப்புண்டு எனத்
துடிப்புக் கொடுத்தவன் நீ.
கரைகாணாத கண்ணீர்ச் சுழல்களுக்கு
நடுவே கத்தித் தொலைக்கமுடியாமல்
அழுதுகொண்டிருந்தவளை
அகலிகையின் சாபவிமோசனமாகவல்ல,
அக்கினிக் குழந்தையாய்
பெற்றெடுத்தாய்.
இன்று தழல் சுமந்த விழியுடன்
தடுக்கின்ற மேனிகளில்,
உதிரம் ஊறிக்கிடக்கும்
மயிர்க்கலங்களில்,
தாயகக் காதலை
சுமந்து நின்ற
கறுப்பு மனிதர்களாய்
உருமாற்றினாய்.
நேற்றுவரையும் கூனலிருந்தது.
இன்று நீ பெயரிட்டுப்
பிரசவித்த அக்கினிக் குழந்தை
நிமிர்ந்து நிற்கின்றது.

ஆழக் கடற்படகை
அள்ளிவந்த ஆயுதத்தை,
நீள நெருப்புச் சுமந்த
காப்பரண் வேலித் தங்ககங்களை,
எட்ட முடியாது என எண்ணிய
இலக்கினையும்....
இல்லாமற் செய்த பெருமை எங்களுக்குரியது.
அதை எமக்கென உரித்தாக்கிய
காவலன் நீ.

புண் சுமந்த மனங்களின்
கண்ணீர் வீதிகளில்
புதியதொரு பறவையைச்
சிறையுடைத்துச் சிறகடித்துப்
பறக்கவிட்டாய்.
இன்று அத்திசையில்
ஆயிரம்.... ஆயிரம்.... ஆயிரம்
நீ காட்டுகின்ற பாதைகளில்
உன் காற்றடங்கள்
சரியாகப் பதிந்ததால்
எங்கள் பயணம் இலகுவாய் விட்டது.
மனிதா,
நரைவிழுந்த அகவையா உனக்கு?
உனது கனவுகள்....
அவை அப்படியல்ல.
உன் செயல்களின்
கருப் பொருள்கள் எல்லைதொடும்
வெகுவிரைவில்.

வாழ்த்துச் சொல்ல . எம்
வாய் மட்டும் போதாது.

நீ துடிப்பேற்றிய
சிறகொடிந்த விறகுக் கரங்களும்
தோட்டாக்களேற்றிய துப்பாக்கிகளும்
துணை நிற்கும்
என்பதை மட்டும் துணிந்து கூறுவேன்.
நீ மனிதன்.... நீ மனிதன்....
வார்த்தைகளின் வர்ணிப்புக்கு அப்பால்,
ஒரு போராளி மனிதனின்
உணர்வு வரிச் சாட்சியாய்,
வெள்ளியென சூரியன் என
தெய்வமென இல்லாத
மனிதன் நீ.... வெறும் மனிதன் தானா?
இல்லை.
ஓராயிரம் செயல்களின் கருச்சுமந்த
மனிதமுள்ள மனிதன் நீ

- அணங்கு -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கேள்வி - பதில்

**"சமஸ்டி" தீர்வின் மூலம் இலங்கையில் தமிழரின் பிரச்சினையை தீர்க்கமுடியும் என்கிறார்களே, இது தமிழீழ மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுமா? மாவீரரின் கனவான தமிழீழத்திற்கு ஈடானதா?**

ந. ராஜா - தூசிஸ்

சமஷ்டி என்பது பரந்துபட்ட, பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட கருத்துருவமாகவும், அரசியல் அமைப்பு முறையாகவும் விளங்குகிறது. அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு வசதியான அமைப்பு முறையே இது. ஆயினும் சுதந்திரத் தமிழீழம் தான் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு ஒரு இலட்சியத் தீர்வாக விளங்குகிறது. அதேவேளை, ஒரு அரசுக்குள் அமைகின்ற சமஷ்டித் தீர்வானது, மாற்றீடாக அரசாங்கத்தால் முன்வைக்கப்படுமானால் அதனைப் பரிசீலித்துப் பதில் சொல்லவேண்டிய உலகளாவிய கடமையும் விடுதலைப்புலிகளுக்குண்டு.

**தமிழீழ விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினையை தீர்க்க வேண்டுமென அமெரிக்கா அறிவிக்கவேண்டுமென்று சிறிலங்கா அரசு கேட்டுக்கொண்டமை இனப்பிரச்சினையை சர்வதேச வல்லரசு மட்டத்திற்கு கொண்டுசெல்லும் முயற்சியா? அல்லது புலிகளின் மேல் அழுத்தம் கொடுக்கும் முயற்சியா?**

சி. சதா - தூசிஸ்

புலிகளுக்கு சர்வதேசரீதியான அழுத்தம் கொடுக்கும் முயற்சியே இது. உள்ளூர் மட்டத்தில் பிரச்சினையைத் தீர்ப்பதே இன்றைய அரசினதும் கொள்கையாக இருக்கிறது. இதற்கு ஆதரவாக சர்வதேச, பலம் பொருந்திய அமெரிக்கா போன்ற அரசுகளின் உதவிகளைப் பெறுவதும் அரசின் நோக்கமாக இருக்கிறது.

**பத்திரிகைச் சுதந்திரம் போராட்டகாலத்தில் சாதகமாக இருக்கவேண்டுமா? நடுநிலையாக இருக்கவேண்டுமா?**

க. ஜீவா - தூசிஸ்

தேசிய விடுதலைப் போராட்டமானது, கருத்துச் சுதந்திரம் உட்பட்ட ஒரு மக்களின் சகல அடிப்படைச் சுதந்திரங்களையும் வென்றெடுக்கும் நோக்கம் கொண்டது. சகல உரிமைகளுக்கும் ஆதாரமானது; அத்திவாரம் போன்றது. எனவே கருத்துச் சுதந்திரம், சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவாக இருக்கவேண்டுமே தவிர, போராடுகிறவனுக்கும் அடக்குபவனுக்குமிடையே நடுநிலையாக இருத்தல் முடியாது.

**சிறிலங்காவின் பாதுகாப்புச் செயலாளர் தனது பதவியை இராஜினாமா செய்தாரா? அல்லது செய்ய வைத்தார்களா?**

செந்தில் - தூசிஸ்

பழைய அரசாங்கத்தின் எச்சசொச்ச இராணுவத் தலைமை; ஆயுதத் தளபாட பேர ஊழல்களில் உடந்தை; அரசுக்குள் இன்னொரு அரசாக இயங்க விரும்பும் இராணுவவாதிகளுக்கு ஆதரவு; தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் போன்ற இன்னோரன்ன காரணங்களால் ஜனாதிபதியால் பதவிநீங்க வைக்கப்பட்டுள்ளார்.

**இன்றும் சில பத்திரிகைகள், பூநகரி சிறீலங்கா இராணுவ முகாமை அகற்றும்படி புலிகள் கோரியதை நிபந்தனை என்கிறார்கள்; இது நிபந்தனையா? சாத்தியப்படுமா?**

செ. சுதா - தூசிஸ்

பூநகரி முகாம் அகற்றல் பாதுகாப்பான, நிரந்தரமான பாதைத் திறப்புக்கு விடுதலைப் புலிகளின் ஒரு நியாயமான கோரிக்கை. தமிழ் மக்களின் அபிலாசைகளை இராணுவ ரீதியில் ஒடுக்குகின்ற நோக்கத்தை இன்றைய அரசும் வைத்துக்கொண்டுள்ளது என்பதற்கு பூநகரி முகாம் அடையாளமாக மட்டுமல்ல, பூடகமான உண்மையாகவும் உள்ளது. எனவே சமாதானத் தீர்வை நோக்கி, பேச்சுவார்த்தை ஆக்கபூர்வமாக முன்னெடுக்கப்படவேண்டுமெனில் இவ் ஒடுக்கு முறைக் கருவி அகற்றப்படவேண்டும். இது முன்நிபந்தனை அல்ல; சமாதானப்பாதையில் தடை நீக்கம். இத்தடை நீக்கம் சாத்தியமும் அவசியமாகும்.

**மோதல் தவிர்ப்பு கண்காணிப்பு குழுவில் இந்தியா தவிர்க்கப்பட்டமையும், இந்தியாவைக் கடந்து தமிழீழ விடுதலைப் போராட்டம் சர்வதேச மயப்படுத்தப் பட்டமையும் இந்தியாவை தற்போதைய பேச்சுவார்த்தை நடவடிக்கைக்கு குந்தகம் விளைவிக்கும் நடவடிக்கையில் இறங்கத்தூண்டுமா?**

கண்ணன் - தூசிஸ்

எமது போராட்டம் குறித்த இந்தியாவின் பிழையான அணுகுமுறையே எமது பிரச்சினையில்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தீவிரமான பங்குபற்றலில் இருந்து இந்தியா ஒதுக்கப்பட்டதற்கான காரணம். பேச்சுவார்த்தையைக் குழப்புதல், போராட்டத்தை நசுக்குதல் ஆகியவற்றை இந்தியக் கொள்கை வகுப்பாளர்களில் ஒரு பகுதியினர் கருதிய போதிலும் அதனை நடைமுறைப்படுத்த தேவையான உள்நாட்டு அரசியல் ஸ்திரம், வெளிநாட்டுச் செல்வாக்கு போதியதாக இல்லை என்பதே உண்மை. ஆயினும், இந்தியாவின் பிராந்திய, சர்வதேசரீதியான முக்கியத்துவம் எமது போராட்டத்தைப் பொறுத்த வரையில் எப்போதும் கருத்தில் கொள்ளவேண்டியது ஒன்றே.

**எமது தேசியத் தலைவர் சுதந்திர தமிழீழக் கொடியை எப்போது ஏற்றுவார்?**

**சி. தயா - தூசிஸ்**

உங்கள் கேள்வியிலேயே விடை உள்ளது.

**தமிழீழ விடுதலையை வென்று தரும் தமிழீழ விடுதலைப் புலிகளை விட, நேற்று வந்த சந்திரிகா அம்மையாரை இன்று நம்பும் தமிழ் மக்களுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

**சி. சிறீதரன் - தூசிஸ்**

பெரும்பான்மையான தமிழ் மக்கள் விடுதலைப் போராட்டம் குறித்தும், அதனை வழிநடத்தும் எமது இயக்கம் குறித்தும், தமது எதிர்காலம் குறித்தும் எப்போதுமே தெளிவாக இருந்துள்ளனர். புதிய அரசாங்கத்தின் இன்னொரு அணுகுமுறையை, கஸ்ட நிவாரணமாக மட்டுமல்ல; நிரந்தர சமாதானத்துக்கும் விடுதலைக்கும் வழியாகக் காணும் சலனப் பேர்வழிகளும் எம்மிடையே உண்டு. எமது விடுதலை எம்மாலேயே வென்றெடுக்கப்படவேண்டும் என்பது அத்தகையோருக்கும் அறிவுறுத்தப்படவேண்டும்.

**தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மீண்டும் ஆதரிக்கவேண்டிய நிலை இந்தியாவுக்கு எப்போது ஏற்படும்?**

**இ. சுகந்தன் - தூசிஸ்**

தமிழீழ விடுதலையையோ, தமிழ் மக்களின் பூரண சுதந்திரத்தையோ இந்தியா என்றும் ஆதரித்ததில்லை. எமது போராட்டம் எந்த சக்தியாலும் (இந்தியா உட்பட) நசுக்க முடியாதவாறு வெற்றிப் பாதையில் வீறுநடைபோடும் வேகத்திற்கு ஏற்றவாறே இந்தியாவின் அணுகுமுறையிலும் மாற்றம் ஏற்படும். அந்த நிலையைத் தோற்றுவிக்கவேண்டியவர்கள் நாமே.

# உயிர்ப்பூ

உயிப்பூவின் உன்னதத்தை பேசி முடியாது. தமிழீழத்தில் வெளிவந்துள்ள அருமையான திரைக்காவியம். காட்சிக்கு காட்சி கவிதையின் படிமங்களாய் விரிந்து மனித ஆழ் உணர்வுகளோடு உரசும் ஒரு உறவை அது இறுதி வரை வைத்திருந்தது. கடலை நம்பி அந்தக் கரையோரக் கிராம மக்கள் தம் வாழ்க்கையை வாழ்ந்து வருகிறார்கள். இந்த வாழ்வினைச் சுட்டுப் பொசுக்குகிறது சிறீலங்கா கடற்படை. இந்தக் கிராமத்து வாழ்வின் உயிர்நாடியே நின்று விடுகிற அளவுக்கு கொடூரம் விளைத்தார்கள். அவசியமும் அவசரமுமானதுமான ஒரு கரும்புலித் தாக்குதல் திட்டமொன்று தீட்டப்படுகிறது. அந்தத் தாக்குதலுக்கு பங்குபற்ற இருந்த கரும்புலி வீரனிடம் "இந்த டோராவை நான்தான் அடிக்கவேண்டுமென்று அடம்பிடிக்கிறான்" இன்னொரு கரும்புலி வீரன். திரையில் கதை விரிகிறது.

"டேய் அப்பருக்கு நல்ல சூடை பட்டிருக்காம். எழும்படா! எழும்படா!" தாய் அதட்டி எழுப்புகிறாள்.

அவன் அசையாமல் கிடக்கிறான். தாயின் கரைச்சல் தாங்காமல் எழுந்தவன் "ஆழிக்குப் போய் சுறா பிடிச்ச கை, சூடை தெரியப் போகேலாது" என்று கூறி மறுத்துவிட்டு இறுகப் போர்த்திக்கொண்டு கிடக்கிறான். இவன் இப்படித் தூங்கிக்கொண்டிருக்க இவனுக்கு வேண்டியவள் இவனின் முகத்தில் மீசைக் கோலம் போட்டுவிட்டாள். சூடை தெரிய வரவில்லை என்ற ஆத்திரத்தில் மாமன் கடுங்கோபத்தோடு தடியோடு வந்து அவனை அதட்டுகிறார். அவன் விழித்தெழுந்த போது அவனின் கோலத்தைக் கண்டு அச்சத்தால் கத்துகிறார். இவ்வாறு கிராமத்திற்கேயுரிய அத்தகைய சில கேலிப் பண்புகள் ஆங்காங்கே சிரிப்பை மூட்டுகின்றன. "எனக்கு மீசை வைச்சவள் யாரடி?" அந்தச் சினனக் கிராமம் ஒரு கலங்கு கலங்குகிறது. ஒரு யதார்த்தக் காதல் இழையோடித் திரிகிறது. முரடன் போல இருக்கிறான். ஆனால், நெஞ்சு நிறைய அன்பு. தம்பி மேல் அவனுக்கோ உயிர். பாசத்துக்கு அவன்தான் ஒரு உதாரணம். இருவரும் கடலில் குளிப்பதும், மண்ணில் புரள்வதும், காற்றில் திரிவதும் ஒரு கவிதையையே எழுதிவிடுகிறது கமெரா. இத்தனை உயிர்ப்பும், பிணைப்பும் மண்ணோடும், கடலோடும், மனித வாழ்வோடும் இந்த சூட்சுமத்தைச் சொல்லத் துடிக்கின்ற கமெரா தோற்றுப் போய் விடவில்லை. கடலலைகளைப் போல எழுந்து சதா ஒரு தேடலை நிகழ வைத்துவிடுகிறது. முரளியின் இசையும் இசைந்து வருகின்றது. இந்த உயிர்ப்பு நிறைந்த வாழ்வினை இழந்திடல் தகுமோ? இதற்குக் காரணமானவர்கள் மீது கடும் கோபம் வருகிறது. இழப்பின் பின் இழப்பாய் இறுகிய இரும்பு மனிதன் கரும்புலியாகிறான்.

போர் நடக்கும் பூமியிலிருந்து எழுந்த ஒரு காவியம் எத்தகைய இன்னல்களைத் தாண்டி எழந்திருக்கும் என்பது எம்மில் பலருக்குச் சொல்லாமலேயே புரியும். அது பெய்யும் ஆத்ம சுருதி எவராலும் எளிதில் வாசிக்க முடியாதது. எங்கள் மண்ணில்தான் உயிர்ப்பூ பூக்கும்.

இக்காவியம் கடற் கரும்புலிகளுக்குச் சமர்ப்பணம்.

கடற்புலிகளின் ஆதரவுடன் கலை பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து வழங்கும் "உயிர்ப்பூ"வை கதை வசனம் எழுதி பொ. தாசன் அவர்களே இயக்கியிருக்கிறார்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பெப்ரவரி - 1995 இதழின் பின்னட்டையில் அறிவிக்கப்பட்டிருந்த கவிதைப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெறும் கவிதைகளை இங்கே பிரசுரிக்கிறேம்.

# எத்தனை நாள் துயருற்றிருப்பேன்

## முதலாமிடம் பெறும் கவிதை

என் நிலை சொல்வது பெரும்பாடு
நான் ஈழத்தமிழரின் குறியீடு
வாய் மொழி இல்லை சோகம் சொல்ல
இது வார்த்தைக்குள் சிக்கிடும் வாழ்க்கை அல்ல.

இருந்ததை எல்லாம் இழந்துவிட்டேன்
சிரிப்பதை என்றோ மறந்துவிட்டேன்
அழுகின்ற மழலையின் துயர் போகின்
இழந்திட உயிரையும் சம்மதிப்பேன்

நீளுமந்த குருதியின் ஊற்றோடை
அது வற்றிப் போனதில் கடும் கோடை
பஞ்சடை கண்களில் பகற் கனவு
நெஞ்சிடை விடியலின் நிஜ நினைவு

அந்நியன் மண்ணினை அபகரித்தான்
அதனால் துயரத்தை சுவீகரித்தேன்
அழுவதை விடுங்கள்; தேவையில்லை
அணிதிரண்டிடுங்கள்; சேவையென்பேன்.

எதுவரை உங்களின் துயில் நீளும்
அதுவரை எந்தனின் துயர் வாழும்
இளையவன் விழுதென வாழ்வானோ? அன்றி
விடியலின் விலையென வீழ்வானோ?

சுட்டமண் என்னை கழித்திடுங்கள்
பச்சைமண் வாழ கரங்கொடுங்கள்
மனிதனாய் இவன் வர வழிகூறும் - இல்லை
மாவீரன் ஆகிட வழி சேரும்.

- ஞானி -
ஜேர்மனி

## இரண்டாமிடம் பெறும் கவிதை

மடியிலிருந்த கனம்
மண்ணிற்கு ஜனனித்த போது
எதிர்காலச் சுமைகள் பற்றிய எண்ணம்
நெஞ்சத்தை நிறைத்தது
தொண்டைவரை துக்கம் தாளாது
விக்கி நின்றது
பெருமூச்சுக்களினால்
எரிந்துபோனது; அடுப்பே தவிர
இவளுடைய அவலமல்ல
கண்ணீரினால் மறைந்துபோனது
பார்வைகளே தவிர
பாழாகவேண்டிய
இந்த பெண்ணடிமை அவலமுமல்ல

மண்ணிற்கு தந்தவரை
எழுபதுகளிலும்
மணந்து கொண்டவனை
தொண்ணூறிலும்
பலிகொடுத்துவிட்டு
வளைந்து குனிந்து
கேள்விக்குறியாகி நிற்கும்
இவளின் எதிர்காலத்தை
வளமாக்க வழியே இல்லையா...?

பூவைகளாக சித்தரித்ததால் தானே
வாடி நிற்கிறாள்
புயலென்றால் இவளும்
சீறிவிடுவாளோ என்றுதான்
அடக்கப்பட்ட பெண்களிற்கெல்லாம்
சமாதான (வெள்ளை) சீலைகளையே
அளித்திருக்கிறது
நம் சமூகம்.... தம்மை எதிர்க்காதிருப்பதற்காக

இதற்கெல்லாம் நிச்சயமாக
காலம் பதில் சொல்லவில்லை
களத்தில் புலிகள் பதில் சொல்லுகிறார்கள்
கேவலமுமில்லை இனி இங்கெமக்கு

அதனால்தான்
இருளின் மடியில்
தூங்குவதாக பாவனை செய்துகொண்டிருக்கும்
இந்த ஜனனம்
இவளின் முலைப்பாலில்
இறந்தகால அவலங்களை
பருகி (படித்து)க் கொண்டு
கந்தகக் காற்றின் சுவாசத்தோடு
நாளை விடிந்த மண்ணிற்கான
நிகழ்வுகளை மனப்பாடம் செய்துகொள்கிறது

ஆமாம்,
மலரும் தமிழீழம்
அப்படித்தான் இருக்கவேண்டும்!!!

சு. பிரசாந்தன் - ஜேர்மனி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## மூன்றாமிடம் பெறும் கவிதை

ஏக்கப் பெருமூச்சுடன்
எத்தனை நாள் துயருற்றிருப்பேன்
என்றதனை மறந்துவிடு
எமக்கு நாளை விடிவு வரும்
வானம் பெரியது
மிகமிகப் பெரியது
அதனைவிடப் பெரியது
எம்மன உறுதி
பட்டினி போட்டார்கள்
பாதையை அடைத்தார்கள்
பணிந்தோமா நாம் பகைவர்களுக்கு
இல்லவே இல்லை.
வீறுகொண்ட அப்பாவும்
வீர சொர்க்கம் அடைந்ததனால் - இனி
விடிவில்லை நமக்கென்று
வேதனை ஏன் உனக்கம்மா
உன்மடியில் தூங்கும் மகன்
சின்னவன் என்று கலங்காதே
கலங்கரையாய் நானிருந்து - உன்
கண்ணீரைத் துடைத்திடுவேன்.
வானம் பெரியது;
மிகமிகப் பெரியது
அதனைவிடப் பெரியது
எம்மன உறுதி.

குட்டிய கைகள்
கும்பிடும் காலமிது
குனிந்த தமிழன்
நிமிர்ந்த நேரமிது
அடுப்புப் புகைக்குள்
அழுத பெண்கள்
கெந்தகப் புகைக்குள்
சிரிக்கும் வேளையிது
அங்கயற்கண்ணி
நளாயினி மங்கை
அவர்களும் பெண்கள் - ஆனால்
அழுததே இல்லை
அவர்களின் வரிசையில்
இன்னும் இன்னும்
ஆயிரம் பெண்கள்
இதற்குப் பிறகுமா
உன் கண்ணில் கலக்கம்
உன் மடியில் தூங்கும் மகன்
சின்னவன் என்று எண்ணிவிடாதே
நாளைய ஈழத்தில்
நம்பிக்கை நட்சத்திரம்
நாங்கள் தானம்மா.

அப்பாவுடன் உன் தாலியும் பொட்டும்
போய் விட்டதே என்று கலங்காதே
தாலிதான் பெண்ணின் வேலி என்பது
வெறும் புலம்பல் தானம்மா
நச்சுக் குப்பியும்
இரத்தப் பொட்டும்
நம்மினப் பெண்களின்
மூச்சாகி இருக்கும் போது
மூளியாய் நானிருப்பதா?
என்றெல்லாம் எண்ணிவிடாதே
வானம் பெரியது
மிகமிகப் பெரியது
அதைவிடப் பெரியது
எம் மன உறுதி.

செ. செல்வராஜா
ஜேர்மனி

'எத்தனை நாள் துயருற்றிருப்பேன்' கவிதைப் போட்டிக்கு நிறையக் கவிதைகள் வந்து சேர்ந்தன. அவை எமக்கு மகிழ்ச்சியைத் தந்தன. தாய்த் தேசத்தில் ஒரு பெண் தன் குழந்தையை மடியில் கிடத்தியபடி துயருற்றிருக்கிறாள். அந்தக் காட்சியை பல கவிதைகள் படம்பிடித்திருந்தன. துன்பத்தைக் கண்டு கலங்கி துணைநிற்கின்ற பண்பின் அடியாக ஏராளமான கவிதைகள் பிறந்திருந்தன. அந்தக் கவிதைகளுள் முதல் மூன்று இடம்பெறும் கவிதைகளை இங்கு பிரசுரிக்கிறோம்.

முதலாவது இடம்பெறும் கவிதை, துயரை விபரிக்கின்ற விதம் சிறப்பாக இருக்கிறது. யதார்த்தமாக பார்க்கும் போது அந்தப் புகைப்படத்திலுள்ள பெண் என்ன நினைப்பாள்? எதைச் சொல்லுவாள்? என்கிற விதமாக எண்ணி அவரது கவிதை எழுதப்பட்டிருக்கிறது. புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் மீதுள்ள வரலாற்றுக் கடனை,

'அழுவதை விடுங்கள்; தேவையில்லை
அணிதிரண்டிடுங்கள் சேவையென்பேன்' இவ்வாறு வலியுறுத்தியும், வரலாற்றுக் கடனை மறந்தோர் மீது,

'எது வரை உங்களின் துயில் நீளும்,
அதுவரை எந்தனின் துயர் வாழும்' என்று அந்தத் தாய் சொல்வதாக உருவகிக்கிறார்.

அவளே 'பச்சை மண் வாழக் கரம் கொடுங்கள்' என யாசித்து நிற்கிறாள். போராடவேண்டிய தேவையை, அந்தப் பாரத்தை நாமும் சுமக்கவேண்டிய கடமையை அக்குழந்தை மீது ஏற்றி உணரச் செய்கிறார்.

இரண்டாவது இடம்பெறும் கவிதை பெண்கள் சமூகத்தின் ஒடுக்குமுறை பற்றிப் பேசுகிறது. அவளின் துயருக்கான காரணத்தை கடந்த காலங்களின் மீது ஏற்றிநிற்கிறது.

'அவளின் பெருமூச்சுக்களால் எரிந்துபோனது அடுப்பே தவிர, அவளுடைய அவலமல்ல' என்கிறது.

அக்கவிதையில் சிங்களதேச அடக்குமுறையாலும் அவளின் வாழ்வு சிதைந்து போனது என்பதை,

'மண்ணிற்குத் தந்தவரை எழுபதுகளிலும்
மணந்துகொண்டவனை தொண்ணூறுகளிலும்' என்கிற வரிகளில் குறித்து நிற்கிறார்.

இவ்வாறு கலங்கிய அந்தக் கவிஞன், அவள் தன் துயரை வெல்வதற்கான காலத்தில் வாழ்கிறாள் என்ற நம்பிக்கையை எம்முன் வைக்கிறார்.

மூன்றாவது இடம்பெறும் கவிதையில், அடங்கி ஒடுங்கிக் கிடந்த அன்றைய பெண்கள் சமூகத்திற்கும், போர்க்கோலம் பூண்டுநிற்கும் இன்றைய பெண்கள் சமூகத்திற்கும் இடையிலான தொடர்பை,

'அடுப்புப் புகைக்குள் அழுத பெண்கள்
கந்தப் புகைக்குள் சிரிக்கும் வேளை இது' என்ற வரிகளில் அழகாகக் கூறிநிற்கிறார். எத்தனை பெரிய துயர் வரினும் வெல்வோம், வீழ்கிலோம் என்ற சபதத் தொனி அவர் கவிதையில் இழையோடி நிற்கிறது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# 'மனித மாடு' சிறுகதை விமர்சனம்

ஈழத்தின் சிறுகதை மூலவர்களில் ஒருவரான அ.செ.முருகானந்தன் அவர்களின் 'மனித மாடு' என்ற தனியொரு சிறுகதையை மட்டுமே விமர்சனமாக கொள்ளுகின்ற போதும் இக் கட்டுரை சிறுகதை பற்றிய கருத்துக்களைச் சொல்கின்றது. இளம் தலைமுறை எழுத்தாளர்களின் வளர்ச்சிக்கும் கவனத்திற்கும் பெரிதும் பயன்படும் என்ற நோக்குடன் இது இங்கு பிரசுரமாகின்றது.

இலக்கிய வடிவங்களுக்கு இலக்கணம் வகுப்பது கடினம். ஏனென்றால், எல்லாப் படைப்புக்களும் படைப்பின் எல்லா அம்சங்களும் இந்த வரையறைக்குள் அடங்கிவிடும் என்பதில்லை. ஆற்றல் வாய்ந்த கலைஞர்கள் இத்தகையை வரைவிலக்கணங்களை மீறியபடியே, புதுவிதமான அம்சங்களைக் கொண்ட சிறந்த படைப்புக்களை அவ்வப்போது உருவாக்கி வருகின்றனர். வரைவிலக்கணங்கள் எல்லாம் பொருந்தி இருந்துவிடுவதால் மட்டும், ஓர் இலக்கியப் படைப்பு சிறந்ததாக இருக்கும் என்றும் இல்லை. இலக்கணங்கள் எல்லாம் பொருந்தியிருந்தும் அதில் 'உயிர்' இல்லையாயின் வாசகனின் மனதைப் பிணிக்கும் கலைத் தன்மை இல்லையாயின் அதில் பயன் ஏதும் இல்லை. இதனூடாக, இலக்கிய வடிவங்களுக்கு திட்டவட்டமான வரையறைகளைக் கொடுக்க முடியாது என்பதையும், அவற்றின் முக்கிய அம்சங்கள் சிலவற்றையும் புரிந்துகொள்ளலாம் என்பதையுமே நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். இங்கு நாம் எடுத்துக் கொண்டிருக்கும் சிறுகதை என்ற இலக்கியத்திற்கும் இது பொருந்தும்.

சிறுகதையின் முக்கிய அம்சங்களாகச் சில ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கின்றன. அதாவது குறிப்பிட்ட ஒரு சம்பவத்தை, அல்லது அச்சம்பவத்தில் ஒரு பாத்திரத்தின் இயக்கத்தை அல்லது அச் சம்பவத்தின் காரணமாகத் தோன்றிய மனநிலையைச் சித்தரிப்பவை சிறுகதை என்று சொல்லப்படுகின்றது. ஒரு குறித்த விடயத்தைச் சுற்றி ஒருமைப்படுத்தப் பட்டதாய் இருப்பது, இங்கு முக்கியம். நாவல் என்ற இலக்கிய வடிவத்தில் இருப்பது போல பல்வேறு பாத்திரங்களின் இயக்கத்தை _ மிகப் பரந்த காலப் பின்னணியில் _ அப் பாத்திரங்களின் குணவளர்ச்சி வேறு பாடுகளோடு விஸ்தாரமாகச் சித்தரிப்பது, சிறுகதைக்குப் பொருந்தாது. அடுத்ததாக, இறுக்கமான வடிவத்தைச் சிறுகதை கொண்டிருக்கவேண்டும். வளவளவெனத் தொய்ந்து நீண்டு போவதாக அது இருக்கக் கூடாது. இந்த இறுக்கத்தைப் பேணுவதற்கு மொழிநடை முக்கியமானது. தேவையில்லாத பகுதிகள், சொற்கள், சொற்றொடர்கள் எதுவும் இடம்பெறக் கூடாது. இதனையே தமிழ்நாட்டின் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான சுந்தர ராமசாமி "மூன்று வார்த்தைகளில் சொல்லக் கூடியதை நான்கு வார்த்தைகளில் சொல்லலாகாது" என்று குறிப்பிடுகின்றார்.

இதைத்தவிர நவீன இலக்கியங்களில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கும் சில அம்சங்களைச் சிறுகதையும் கொண்டிருக்க வேண்டும். அதாவது,

1) எந்த விடயமும் நம்பும்படியானதாக_யதார்த்தமானதாக_ உண்மையில் நிகழக்கூடியதாக இருக்க வேண்டும்.

2) பாத்திரங்கள் பேசும் மொழி இயல்பான முறையில், அவற்றிற்கே உரிய பேச்சு மொழியில் இருக்க வேண்டும்.

**அ. யேசுராஜா**

இத்தகைய அம்சங்களின் பின்னணியில் மனித மாடு சிறுகதை எவ்வாறு அமைந்திருக்கின்றது அதன் சிறப்பம்சங்கள், குறைபாடுகள் என்ன? என்பதைப் பார்ப்போம்.

இந்தச் சிறுகதை ஒரு கதாபாத்திரம், தான் சம்பந்தப்பட்ட ஒரு சம்பவத்தை நினைவு கூர்ந்து, வாசகர்களிற்குச் சொல்லும் முறையில் அமைந்துள்ளது. ஒரு இருபது வயது இளைஞன் சினிமா பார்ப்பதற்கு எழுபத்தைந்து வயதுக் கிழவனின் றிக்க்ஷோவில் ஏறிச் செல்கின்றான். இரண்டு நாட்களாக பட்டினியாக உள்ள அக் கிழவனை விரைவாகப் போகும்படி தூண்டி சினிமாக் கொட்டகைக்குச் சென்று இறங்கி, கால் ரூபாவைக் கூலியாகக் கொடுக்கின்றான். படம் முடிந்து இரவில் நடந்து வருகையில் ஒரு சாவடியில் அந்தக் கிழவன் வாயில் இரத்தம் வடிந்தபடி செத்துக் கிடக்கின்றான். சனங்கள் நின்று பார்த்துவிட்டு செல்கின்றார்கள். அந்த இளைஞன் தன்னால்தான் அவன் செத்தானோ எனவும் அக் கிழவனின் கஸ்ரங்களையும், அவனிடம்தான் அனுதாபமாக நடந்திருக்கலாம் எனவும் நினைப்பதாகவும் கதை அமைந்திருக்கின்றது.

ஒரு சம்பவத்தை _ அதன் அடிகளாகத் தோன்றும் மன உணர்வுகளைச் _ சொல்வது என்ற முறையில் இது, சிறுகதை வடிவத்தின் முக்கிய அம்சத்தைக் கொண்டிருக்கின்றது. அதுவும் சிறிய வடிவத்தில் சொல்லப்பட்டிருப்பதுவும் பாராட்டத்தக்க அம்சம். றிக்க்ஷோக்காரக் கிழவனின் துன்பமான வாழ்க்கை நிலைமை_வயது சென்றும் உழைக்க வேண்டிய நிலைமை_ 200 இறாத்தல் பாரத்தை இழுத்தபடியே களைப்புடன் ஓட்டிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் _ மூன்று மைல் ஓடிச் சென்றும் கால் ரூபாவையே கூலியாகப் பெறும் நிலைமை என்பனவெல்லாம், அந்தக் கிழவன் மீது

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

எமக்கு அனுதாபத்தை ஏற்படுத்து கின்றது. விரைந்து செல்லும்படி அவனைத் தூண்டாது இருந்திருக் கலாம், அவன் தனது தாத்தாவைப் போன்றவன் என இழைஞன் கழி விரக்கத்துடன் கூறும்போதும், கிழவ னின் மேல் எமக்கும் பரிவு ஏற்ப டுகின்றது; இளைஞனின் மனிதாபி மானம் நிறைந்த நல்ல இதயமும் எமக்குப் புரிகின்றது. கதாசிரியர், இவற்றையே இக்கதையின் மூலம் சொல்ல முயல்கின்றார். வாசக நிலையில் அந்த உணர்வுகள் எமக்கும் தோன்றுவதால் கதாசிரியர் பாராட்டுக்குரியவர் ஆகிறார். சம்பவத்தையும், மனநிலைகளையும் அவர் சிறப்பாகச் சித்தரிப்பதற்கு இரண்டு உதாரணங்களைப் பார்ப் போம். இளைஞன் விரைவாகப் போகும்படி சொன்னதும் கிழவன் ஓடத்தொடங்குகின்றான். அதனை ஆசிரியர் இவ்வாறு சித்தரிக்கின்றார்; "வண்டி ஒருதரம் குலுங்கி எழுந்தது. அடுத்த கணம் மாயாசக்தி பெற்று அது பறக்கத் தொடங்கிற்று. எழு பத்தைந்து வயசுக் கிழவனுக்கு இந்த ஆவேசம் திடீரென்று எங்கிருந்து வந்துவிட்டது? தூக்கிய கால்கள் நிலத்தில் படாமல் விலா எலும் புகள் வெளியே தெறித்துவிடும் போல் இரைக்க இரைக்கத், தலை யும் காலும் ஒன்றாகக் கூனிக் குறுக, மனுஷன் தாவித் தாவி ஓடத் தொடங்கிவிட்டான். தெருவில் போகும் 'சோடி' வண்டிக்காரர்கள் கிழவனையும் 'ரிக்ஷோ'வையும் பார்த்துப் பிரமித்துப் போனார்கள்.

எழுபத்தைந்து வயசுக் கிழம். இரு நூறு இறாத்தல் பாரத்தோடு அடடா, என்ன ஓட்டம் ஓடுகிறது! அந்தச் சமயம் கிழவனை என் னவோ ஒன்று ஆட்டிவைத்தது. அவன் தன் உயிரை வெறுத்து ஓடி னான்" (பக்கம் 30)

இன்னோரிடத்தில், "ரிக்ஷோவில் இருந்து இறங்கிச் சட்டைப் பையி லிருந்து கால் ரூபாவை எடுத்து அவன் கையில் வைத்தேன். ரிக் ஷோவின் கைப்பிடிகளைப் பிடித் துப் பிடித்து மரத்துப்போன அந்தக் கைகளை ஒன்றன் மேல் ஒன்று வைத்து குருக்களிடம் விபூதிப் பிரசாதம் வாங்குவதுபோல, மரியா தையாக வாங்கிக் கண்ணில் ஒற்றிக் கொண்டு திரும்பினான். புகைப் படலம் எழுப்புவதற்கும், எச்சில் துப்புவதற்குமாக ஒரு ரூபாவரை மேலதிகமாகப் பையில் கிடந்தது. உயிரும் உடலும் தேய்ந்துபோக என்னைச் சுமந்து வந்த கிழவனுக் குக் கால் ரூபாவிற்கு மேல் கொடுப் பதற்கு, இந்த மனம் இசையவில்லை. அவன் திரும்பிப் போகும்போது பார்த்தேன். சுகமாக மூச்சுவிடக் கூட முடியாமல் மிகவும் அவஸ் தைப்பட்டுக் கொண்டிருந்தான். ஓர் அடிகூட எடுத்து வைக்கமுடியாமல் தள்ளாடிக் கொண்டிருந்தான்." (பக் கம் 30_31)

தேவையான வார்த்தைகளை மட்டும் பாவித்து தான் வெளிப் படுத்த வேண்டியவற்றை மிகவும் கூர்மையாகக் கூறும் திறன் இங்கு காண முடிகின்றது; மெல்லியதாய் இழையோடும் கேலித்தொனியும் சுவையினைக் கூட்டுகிறது.க

இனி, இந்தச் சிறுகதையில் காண ப்படும் குறைபாடுகளைப் பார்ப் போம்.

கதையின் முடிவில் ரிக்ஷோக்கா ரக் கிழவன் செத்துக் கிடக்கிறான். அதற்கு முன்னர் இளைஞனை ஏற்றி யபடி மூன்று மைல் ஓடிவந்திருக் கின்றான்; இரண்டு நாட்களாய் பட்டினியாக இருந்திருக்கின்றான். என்றாலும் இளைஞன் படம் முடி ந்து வருகையில் கிழவன் செத்துக் கிடப்பது செயற்கைத் தனமாய் நம்ப முடியாததாய் இருக்கின்றது. இந்த முடிவு கதையைப் பலவீனப் படுத் துகிறது.

மேலும், "அப்படியே உட்கார்ந்து விட்டேன். பகவானே! அவன் உயிரைக் குடித்த பழி கடைசியில் என் தலையில்தான் பொறுக்க வேண்டுமா?" என்று இளைஞன் கூறுவதுடன் கதை முடிந்திருந்தால் சிறப்பாயிருந்திருக்கும். ஆனால்

## 'எரிமலை' நடாத்தும் முதலாவது 'சிறுகதைப் போட்டி'

இந்த நாடோடி வாழ்க்கையை வெறுத்து துன்பப்படுகின்ற ஏராளமான உள்ளங்களே, புலம் பெயர் வாழ்வில் நாம் எத்தனையோ புதிய அனுபவங்களைப் பெற்றிருக்கின்றோம். பிறந்த பூமியின்பால் எப்போதும் துடிப்பும், துயரும் உள்ளத்தின் அடியாளத்தில் இருந்து கிளர்த்துகின்றன. அவை எம் துயிலைக் கலைக்கின்றன. முகமிழந்த அகதியாய் வாழும் இந்த வாழ்விடத் துயரம் சாதாரணமானதல்ல. எமது சுய அடையாளம் அழிந்து போய்விடுமோ என்ற அச்சத்தை எமக்குள் ஏற்படுத்துகிறது. இழிந்தும், நலிந்தும்போய் விடுவோமா? எங்காவது எம்மில் ஒட்டிக் கொண்டிருக்கின்ற சில பண்பின் அடையாளங்களை வைத்துக்கொண்டு நாங்கள் 'தமிழர்கள்' என்று கொண்டிருப்போமா? புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ எழுத்தாளர்களே எங்கே _ இன்னுமொரு சந்ததிக்குத் இத் துயர் வந்துவிடக் கூடாது என்று சபதம் எடுங்கள். உங்களைச் சுற்றிலும் ஓராயிரம் கண்ணீர்க் கதைகள். இயந்திரமாய்ச் சுழலும் வாழ்வின் வேகத்தை ஒரு கணம் நிறுத்தி ஆற அமர இருந்து உங்களின் சின்னச் சின்னக் கதைகளை எழுதுங்கள்.

உலகம் பூராவும் பரந்து வாழும் தமிழீழச் சிறுகதை எழுத்தாளர்களே! உங்கள் அனைவரையும் எரிமலை நடாத்தும் இச் சிறுகதைப் போட்டியில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

முதலிடம் பெறும் மூன்று கதைகளும் எரிமலையில் பிரசுரிக்கப்படும். போட்டிக்கு வரும் சிறுகதைகள் திருப்பி அனுப்பி வைக்கப்படமாட்டாது.

உங்கள் சிறுகதைகளை ஆடி 10 ம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்குமாறு அனுப்பிவைக்கவும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அதன் பிறகும் "சனங்கள் வந்தார்கள், வந்து கூட்டமாக நின்று பார்த்தார்கள். பார்த்துவிட்டுப் போனார்கள்.

மனிதனைச் சுமந்து திரிந்த மனித தேகம் தெருவில் புரண்டு போய்க் கிடந்தது.

அதன்மேல் ஏறித்திரிந்து சவாரி செய்தவர்கள் வந்தார்கள். நின்று பார்த்தார்கள். பார்த்துவிட்டுப் போனார்கள்." என்ற வரிகளுடனேயே ஆசிரியர் கதையை முடித்துள்ளார். கிழவனின் மேல் அனுதாபத்தை ஏற்படுத்தும் ஆசிரியனின் நோக்கம் இந்த வரிகள் இல்லாமலேயே முன்னர் நிறைவேறிவிடுவதால், இவை தேவையின்றி எழுதப்பட்டனவாய் உள்ளன. அத்தோடு, மிகவும் வெளிப்படையாகச் சொல்லப்படுவதாயும் (குறிப்பால் உணர்த்தப்படுவதே எப்போதும் சிறப்பானது) இரண்டாம் தடவையும் திரும்பச் சொல்லப்படுவதாயும் இருக்கின்றது.

கதையில் சொல்லப்படும் தரவுகள் (Facts) எப்போதும் சரியானதாக இருக்க வேண்டும்; அப்படியானால்தான் நம்பகத் தன்மையை ஏற்படுத்த முடியும். இளைஞன் தியேட்டரிற்குள் செல்கிறான். ஆசிரியர் அதை 'ஒரு ரூபா கொடுத்து உள்ளே போய்க் கதிரையில் உட்கார்ந்து கனவுகாண ஆரம்பித்தேன். மூன்று நாலு மணி நேரம் நீடித்த கனவு!' என்று எழுதுகிறார். நானறிந்தவரை தமிழ்ப்படங்கள் மூன்று மணிநேரம் கொண்டவை. நான்கு மணிவரை ஓடும் படங்கள் இன்னும் வரவில்லை. இங்கு நேரம் பற்றிய தரவு பிழையாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியரின் மொழி நடையிலும் சில இடங்களில் குறைபாடுகள் காணப்படுகின்றன. ஓரிடத்தில் 'குறுக்கும் நெடுக்குமாக ஓடித் திரியும் இயந்திர பூதங்களுக்கூடாக அந்த உணர்வற்ற சடலங்களில் ஒன்றாக மனிதன், பகுத்தறிவுள்ள மனிதன் _ நாகரிகமடைந்த மனிதன் _ 'பெறற்கரிய மனிதப் பிறவி போய்க் கொண்டிருந்தது' என்று எழுதுகிறார். மனிதனைப் பற்றிய இந்த அடுக்கு வர்ணனை, சிறுகதையில் கையாளப்பட வேண்டிய கூர்மையானதும் இறுக்கமானதுமான மொழி நடைக்கு மாறானதாக இருக்கிறது. இன்னோரிடத்தில், 'இருபது வயசுக் குமரனுக்கு மூன்று மைல் நடந்து போவதற்கு இந்தக் கிழட்டுக் கர்நாடக ஜோடியின் (அதாவது ரிக்ஷாவும் கிழவனும்) உதவிதானே வேண்டியிருந்தது' என்று எழுதுவதில், நடந்து என்ற சொல் கையாளப்பட்டிருக்கக் கூடாது; ஏனெனில் அது கருத்தைக் குழப்புகிறது.

சிறுகதையில் பாத்திரங்கள் உரையாடும்போது 'பேச்சு மொழி இயல்பானதாகக் கையாளப்பட வேண்டுமென, முன்னர் குறிப்பிட்டேன். இக்கதையில் இந்த அம்சத்திலும் சில குறைகள் காணப்படுகின்றன. உதாரணமாக, இளைஞன் சொல்கிறான், "என்னப்பா வண்டிச் சக்கரங்களில் கறையான் பிடிக்கப்போகிறது !" இதில் சக்கரங்களில் என்ற சொல்லுக்குப் பதில்_சில்லில்_என்று வந்திருக்க வேண்டும். அதே மாதிரி பிடிக்கப்போகிறது என்பது பிடிக்கப் போகுது என்ற மாதிரித்தான் வந்திருக்க வேண்டும்.

"ஐயோசாமி! உங்களிடம் எல்லாம் கூலி பேசுவதா? புண்ணியவான்கள் மனமிரங்கி ஏதோ கொடுத்ததை வாங்குகிறேன்...." என்பதிலும் பேச்சு மொழி இயல்பானதாக இல்லை.

பேச்சு மொழியைச் சரியாகக் கையாள்வதற்கு, எழுத்தாளர் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியம். இல்லையாயின் செயற்கைத்தனமான மொழியே இடம்பெற்று, கதையின் யதார்த்தப் பண்பை அது குறைத்துவிடும். புதுமைப் பித்தன், தி. ஜானகிராமன், கி. ராஜநாராயணன் போன்ற சிறந்த எழுத்தாளர்கள் பேச்சு மொழியை அற்புதமாகக் கையாண்டுள்ளனர். இலங்கை எழுத்தாளர்களிற் பெரும்பாலானோரிடம் பேச்சு மொழி போல் கற்பனை பண்ணி எழுதும் தன்மையே காணப்படுகின்றது; இதனால்தான், எழுத்து வழக்கும் பேச்சு வழக்கும் இணைந்து குழம்பியதாய் _ செயற்கைத்தனம் கொண்டவையாய்_அவர்கள் எழுதும் உரையாடல்கள் அமைந்துள்ளன. 'பிரபல' எழுத்தாளர்களிலும் இந்தப் பலவீனம் காணப்படுகின்றது.

இவ்வாறான குறைபாடுகள் ஒரு கதையில் இருக்கும்போது, அதன் முழுமைத் தன்மை பாதிக்கப்படுகின்றது. பிசிறல்கள் அதாவது குறைபாடுகள் இல்லாது, செதுக்கிச் செதுக்கிச் செப்பமிடப்பட்ட சிற்பம் போல சிறுகதை இருக்க வேண்டும்; அவ்வாறு அமைந்திருப்பவற்றையே நாம் சிறந்த கதைகள் என்று கூறலாம். "உருவாக்கப்பட்ட தன்மை காட்டாது, ஒரு மண்புழு போல, ஒரு வெற்றிலை போல சிருஷ்டியின் முழுமையும், இயற்கையின் அமைதியையும்" பெற்றிருக்க வேண்டுமென சுந்தர ராமசாமி கூறுவார்.

இவையெல்லாவற்றையும் தொகுத்துப் பார்க்கையில், 'மனித மாடு' சிறுகதை பிசிறல்களற்று செப்பமாக அமைந்த ஒரு நல்ல சிறுகதையெனச் சொல்ல முடியாது; ஆனால், சில நல்ல அம்சங்களைக் கொண்ட சாதாரண சிறுகதையாக அது இருக்கிறது.

## காந்தரூபன் அறிவுச்சோலை

எமது தமிழீழத் தேசியத் தலைவரின் உருவாக்கலில் மலர்ந்ததே காந்தரூபன் அறிவுச் சோலை. போர் மேகங்கள் சூழ்ந்த பூமியில் அனாதரவான சிறுவர்களை அரவணைத்துக் காக்கும் இச் சோலை, அனைத்து அம்சங்களாலும் சிறந்து மிளிர்ந்து வருகின்றது. ஓராண்டு காலத்தில் பெரு வளர்ச்சியைக் கண்டு தமிழீழத்தில் முன்னுதாரணமாய் திகழும் காந்தரூபன் அறிவுச் சோலையில் நீச்சல் குளம் ஒன்று அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்ற செய்தி மகிழ்ச்சியைத் தருகின்றது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# அகதி முகம் அல்லது அகதி முகாம்

ஓரிரவு தூங்குகின்ற நேரம் 'ஆமி' பாய்ந்தனர்.
ஊரிருந்து நாங்களெல்லாம் வேரிழந்து சாய்ந்தனம்
காரிருளில் நாய்தொடர நாம் நடந்து வந்தனம்.
காலையிந்த ஊரிலுள்ள கோயில்வந்து சேர்ந்தனம்.

விறகுவெட்ட போன அப்பன் வீடுவந்த சேரலை.
வீடுவந்து சேர்ந்துமென்ன அடுப்புமூட்ட வழியில்லை.
உறவை, ஊரைத் துறந்துவந்து அதிகநாட்கள் ஆகலை.
அகதியென்ற பேரெடுத்தும் அரிசி சீனி காணலை.

பள்ளிக்கூடம் போனபிள்ளை படிப்பை நிறுத்திப்போட்டுது.
பாணுமின்றிக் கூழுமின்றிப் பட்டினியாற் சாகுது.
வெள்ளைக்காரர் மாதம்ரண்டு வேளைவந்து பார்ப்பினம்.
வெளிச்சமற்ற குடிசையென்று எழுதிக்கொண்டு போவினம்.

மறைப்புமற்ற கிணற்றடியில் உடுப்புமாற்றிக் குளிக்கின்றோம்.
மலசலங்கள் கழிப்பதற்கும் இடங்களின்றித் தவிக்கிறோம்.
அறைக்குள்காணும் அந்தரங்கம் அம்பலத்தில் கிடக்குது.
அகதிமுகாம் வாழ்க்கையிலும் பிரசவங்கள் நடக்குது.

மொட்டைக்கறுப்பன் சோறுதின்று முறுக்கெடுத்த உடலிது.
முரல், திரளி, திருக்கை, சுறா நெய்பிடித்த உடலிது
சுட்டகருவாடு, முயல் உடும்புதின்ற உடலிது
சும்மா 'அம்மாப்பச்சை' தின்று சுரணையற்றுக்கிடக்குது.

சாக்கிலெங்கள் உடல்சரித்து சாமம்வரை தூங்குகின்றோம்.
சாமம்வரை தூங்கிவிட்டுப் பாரமேற்றப் போகிறோம்.
ஏற்றிவரும் விறகுவிற்றே எங்கள் வாழ்வு ஓடுது.
என்று மீண்டும் 'அந்தவாழ்வு' எம்மைவந்து கூடுமோ?

- புதுவை இரத்தினதுரை -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# செஞ்சோலைக் கலைமாலை

சிங்களப் பேரினவாத அரசு தமிழரை அழிக்கும் நோக்கில் ஒரு யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கின்றது. இந்த இனவாத ஒடுக்குமுறையின் கொடூரத்தால் தமிழ் மக்களின் இயல்பான வாழ்க்கை நிலை மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ளது. அரச இராணுவ நடவடிக்கைகளால் பல மக்கள் அழிக்கப்பட்டுள்ளார்கள். வீடு, உடமை, தொழில் வாய்ப்பு என்பனவற்றை இழந்து இடம் பெயர்ந்திருக்கின்றார்கள். தந்தை ஓரிடம், தாய் ஓரிடம், குழந்தை




**பிரான்சில் நடைபெற்ற செஞ்சோலை கலைமாலையில்...**




ஓரிடமாகப் பிரிந்து குடும்ப உறவுகள் சிதைந்தன.

இந்த ஒடுக்குமுறையால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள் சிறுவர்கள்தான். அரச இராணுவ அழுத்தங்களினால் பெரும் எண்ணிக்கையினாலான சிறுவர்கள் தமது பெற்றோரைப் பிரிந்தனர், இழந்தனர். பெற்றோரின் ஆதரவான பராமரிப்பை, அன்புறவை இழந்து, யாருமற்ற பாதுகாப்பில்லாத ஒரு சூழலில் அவர்கள் தனித்துப் போனார்கள். இவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாக எல்லோர் முன்னும் எழுந்தது. இந்த எண்ணம் புலம் பெயர்ந்த நாடுகளில் உள்ள தமிழீழ மக்களிடமும் எழுந்தது. தாம் வாழும் நாடுகளில் போரினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு உதவிக்கரம் நீட்டவேண்டிய நிலையை அவர்கள் உணர்ந்தார்கள். இந்த வகையில் பிரான்சிலும், டென்மார்க்கிலும் செஞ்சோலைக் கலைமாலைகள் நிகழ்ந்தன. அக்கலை நிகழ்வுகளையே புகைப்படங்களில் காண்கின்றீர்கள். டென்மார்க் கலை நிகழ்வில் தமிழீழத்தில் தயாரிக்கப்பட்ட 'பிஞ்சுமனம்' திரைப்படம் நிகழ்ச்சியின் இறுதியில் காண்பிக்கப்பட்டது.




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்






டென்மார்க்கில் நடைபெற்ற
செஞ்சோலை கலைமாலையில்...




மேற்கு அவுஸ்திரேலியாவில் உள்ள அனைத்துத் தமிழ்ச் சங்கங்களும் சேர்ந்து, தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு நிதி சேர்க்குமுகமாக நடாத்திய "கதம்ப மாலை" நிகழ்ச்சியின்போது...




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



www.tamileelamarchive.com